விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

உலகெங்குமுள்ள உறவு களுக்கு உடனுக்குடன்
கடிதங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
உடு புடைவைகள்
CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
(C-2507)
ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 04 புதன்கிழமை (21.10.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 306

# ஐ.நா.விசாரணை அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு



## பிரதமர் நேற்று தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளை விடுவிக்க கிழக்கில் பிரேரணை

(திருகோணமலை)

தமிழ் அரசியல் கைதிகளை விரைவில் விடுதலை செய்யுமாறு கோரி கிழக்கு மாகாண சபையில் நேற்று அவசர பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டது.

அதன் பின்னர் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அது தொடர்பில் கருத்து வெளியிட்டனர். 24ஆம் பக்கம் பார்க்க....

## நலம் விசாரித்தார் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

சுகவீனம் காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மாதுளுவாவே சோபித தேரரின் நலம் விசாரிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மருத்துவமனைக்குச் சென்றுள்ளார்.

கடுமையான சுகவீனம்காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மாதுளு 24ஆம் பக்கம் பார்க்க....

## சம்பிக்கவுக்கு சாஹித்திய விருது

(கொழும்பு)

அரச சாஹித்திய விருது வழங்கும் விழாவில் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கும் இம்முறை விருதொன்று வழங்கப்பட்டுள்ளது.

அரச சாஹித்திய விழாவின் விருதுகள் வழங்கும் வைபவம் நேற்று கொழும்பில் உள்ள நெளும் பொக்குண அரங்கில் நடைபெற்றது. 24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியுடன் சீனக் குழு சந்திப்பு

(கொழும்பு)

சீனாவின் தூதுக்குழுவொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று சந்தித்தது.

சீன கம்யூனிஸக் கட்சியின் பிரதித்தலைவர், அந்நாட்டுப் பாராளுமன்ற பிரதி சபாநாயகர் மற்றும் சீன கம்யூனிஸக் 24ஆம் பக்கம் பார்க்க....

## கலப்பு நீதிமன்ற விசாரணைகளை எமது அரசாங்கமே தீர்மானிக்கும்

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க திட்டவட்டம்

(கொழும்பு)

கலப்பு நீதிமன்ற முறைமையில் எவ்வாறான அனைத்துலக உதவிகளை பெறுவது என்பதை இலங்கை அரசாங்கமே தீர்மாணிக்கும் என்றும், இதில் வெளிநாட்டவர்களுக்கு இடமில்லை என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். ஐ.நா மனித உரிமைகள் பேரவை 24ஆம் பக்கம் பார்க்க....



## இலங்கையர் ஐவர் கைது

(சென்னை)

சட்டவிரோதமான முறையில் இந்தியாவிற்குள் பிரவேசித்த குற்றச்சாட்டில் இலங்கைத் தமிழர் ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தமிழ்நாடு கடற்கரையோரப் பகுதியான இராமேஸ்வரத்தில் கைவிடப்பட்ட நிலையில் அதிவேகப் பட 24ஆம் பக்கம் பார்க்க....

## கனடா பொதுத் தேர்தல் ஹரி ஆனந்தசங்கரி வெற்றி




(ரொரன்டோ)

கனடாவில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பலராலும் எதிர்பாக்கப்பட்ட மனிதவுரிமை ஆர்வலர் ஹரி ஆனந்தசங்கரி ஸ்காபரோ ரூச் பார்க் தொகுதியில் அமோக வெற்றியீட்டியுள்ளார்.

ஹரி ஆனந்தசங்கரியின் இராஜாங்க மற் 24ஆம் பக்கம் பார்க்க....

## அனைத்துக் கட்சிகளுடனும் ஜனாதிபதி நாளை பேச்சு

### போர்க்குற்ற விசாரணை குறித்து

(கொழும்பு)

போர்க்குற்றச்சாட்டுகள் சம்பந்தமான விசாரணைகள் தொடர்பில் கட்சிகளின் கருத்துக்களை பெறுவதற்கான அனைத்துக் கட்சிக் கூட்டமொன்று நாளை நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

போர்க்குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்புடன் 24ஆம் பக்கம் பார்க்க....

## நியாயமான அரசியல் தீர்வு தமிழ் மக்களுக்குத் தேவை!

### பேராசிரியர் திஸ்ஸ விதாரண வலியுறுத்தல்

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் இதுபற்றி சர்வகட்சிக் குழுக் கூட்டத்திலும் எடுத்துரைக்கப்படும் என்றும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ 24ஆம் பக்கம் பார்க்க....



## படையினருக்காக கருணைச்சபை!

(கொழும்பு)

போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுக்கும் இராணுவத்தினரைக் காப்பாற்ற கருணைச் சபையொன்றை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் முக்கிய மத குருமார்களை உள்ளடக்கி இந்த கருணைச் சபை உருவாக்கப்பட [illegible] 24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழினியின் உடல் புதைப்பு



24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் திட்டத்தில் பாலியல் இலஞ்சம்
# இந்திய தூதுவரிடம் அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இந்திய வீட்டுத்திட்டச் செயற்பாட்டில் பயனாளியிடம் இலங்கை செஞ்சிலுவைச்சங்க அதிகாரியொருவர் பாலியல் இலஞ்சம் கோரிய விவகாரம் குறித்து இந்திய தூதரக அதிகாரிகளிடம் விரிவாகக் கலந்துரையாடவுள்ளதாக அந்த சங்கத்தின் ஊடகத் தொடர்பு அதிகாரி மகீஸ் ஜொனி தெரிவித்தார்.

பாலியல் இலஞ்சம் கோரப்பட்டதாக எழுத்து மூலம் தங்களுக்குச் செய்யப்பட்ட ஒரு முறைபபாட்டையடுத்து குழுவொன்றின் ஊடாக நடத்தப்பட்ட விசாரணை அறிக்கை குறித்து தாங்கள் கூடி ஆராய்ந்தபோதே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

நடைபெற்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நிர்வாகக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பான விசாரணை அறிக்கை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது தொடர்பாக இந்திய வீட்டுத்திட்டத்திற்கான கொடையாளியாகிய இந்திய அரசாங்கத்திற்கு முதலில் தெரிவிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக இன்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரை இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் சந்திக்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது தமது விசாரணை தொடர்பான அறிக்கை இந்தியத் தூதுவரிடம் கையளிக்கப்படும் என தெரிவித்த மகீஸ் ஜொனி, அதன்பின்பே அந்த அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ள விடயங்கள் பற்றியும், அடுத்த கட்டமாக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது தொடர்பிலும் ஊடகங்களுக்குத் தகவல் தெரிவிக்க முடியும் என தெரிவித்தார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தைப் பொறுத்தளவில், எழுத்து மூலமாக முறைப்பாடு கிடைத்தவுடன் சம்பந்தப்பட்ட அதிகாரி கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டு, அந்த முறைப்பாடு தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அடுத்த கட்ட நடவடிக்கை இந்தியத் தூதுவருடனான சந்திப்பின் பின்னரே எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வீடுகளை இழந்தவர்களுக்கு புதிய வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு இந்திய அரசாங்கம் முன்வந்ததையடுத்து, அந்த வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளில் தொண்டு நிறுவனங்கள் ஈடுபட்டிருக்கின்றன. இந்த வகையில் 17 ஆயிரத்து 500 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டிருக்கின்றது.

பயனாளிகளுக்கு இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதிக்கொடுப்பனவுகள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையிலேயே இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் பயனாளி ஒருவரிடம் பாலியல் இலஞ்சம் கோரியதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. (எ-11)

## குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் கிணற்றிலிருந்து 3 மோட்டார் குண்டுகளும், 3 லோஞ்சர் குண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிணற்றை துப்புரவு செய்து கொண்டிருந்த போது இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான தகவலை வீட்டு உரிமையாளர் நேற்றைய தினம் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். (எ-9)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வாணி விழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணியளவில் ரதிலஷ்மி மண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வீரகத்தி கருணலிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முதுநிலை விரிவுரையாளர் விக்னேஸ்வரி பவநேசன் மற்றும் சிறப்பு விருந்தினராக புதிய உயர் கல்லூரியின் இயக்குநர் அருள் நங்கை சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-12)

### சட்டவிரோத மீன்பிடியை நிறுத்தக் கோரி
# வடபகுதி மீனவர்கள் தபாலட்டைப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடிக்கின்ற இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலை நிறுத்துமாறு கோரி வடபகுதி மீனவர்கள் அனைவரும் கையொப்பமிட்டு தபாலட்டை அனுப்பும் போராட்டம் ஒன்றின் ஆரம்ப நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சம்மேளன கட்டடத்தில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வில் வடமாகாண மீன் பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவ கூட்டுறவு சங்க சமாசங்களின் தலைவர்கள் வடபகுதி மீனவர்கள் உட்பட 35 பேர் கலந்து கொண்டு கையெழுத்திட்டுள்ளனர்.

இதனை தொடர்ந்து மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வடபகுதி மீனவர்கள் அனைவரும் கையொப்பமிட்டு ஜனாதிபதி, பிரதமர், கடற்றொழில் அமைச்சர், எதிர் கட்சித் தலைவர், வடமாகாண முதலமைச்சர்,பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு இந்த தபாலட்டைகளை அனுப்பவுள்ளனர்.

இது தொடர்பாக யாழ் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சம்மேளன தலைவர் அந தோனிப்பிள்ளை எமிலியாம்பிள்ளை கருத்து தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து இழுவைப் படகுகளை பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடியினை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு பலவருடங்களாக வடபகுதி மீனவர்களாகிய நாம் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றோம்.

இதனைதடுக்க இலங்கை அரசு உருப்படியான நடவடிக்கை ஏதும் இதுவரை எடுக்கவில்லை. இலங்கை அரசு இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பில் அத்துமீறி சுதந்திரமாக தொழில் செய்து வருவதை கண்டுகொள்ளாமல் உள்ளது. இதனால் எமது கடல்வளம் அழிக்கப்படுகின்றது. வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் இந்திய இழுவைப் படகு தொழிலாளிகளால் சூறையாடப்படுகின்றது. இதனை தடுத்து நிறுத்த நாம் எடுத்த நடவடிக்கைகள் இதுவரை பலனளிக்கவில்லை.

எனவே,நாமும் இந்நாட்டு பிரஜைகள் என்ற அடிப்படையில் எமது வளங்களும், வாழ்வாதாரமும் அரசால் பாதுகாத்து தரப்பட வேண்டும் எனகோரி இக் கையெழுத்து போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம் என தெரிவித்தார். (எ-9)

# வலம்புரிச் செய்திக்கு மறுப்புத் தெரிவிப்பு

(கொழும்பு)

18.10.2015 அன்று வலம்புரியின் முன் பக்கத்தில் வெளியான **கொள்ளைப் பணம் வர்த்தகர் ஊடாக முதலீடு** என்ற செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என எல். ஓ. எல்.சி நிறுவனம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்நிறுவனத்தின் இயக்குநர் தெரிவித்த மறுப்பில்,

குறித்த செய்தி உண்மைக்குப் புறம்பானது. இவ்வ தமக்கும் தமது அமைப்புக்கும் களங்கம் ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு சிலரால் சோடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## குடும்பஸ்தர் மீது தாக்குதல்

(கரணவாய்)

இருவருக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் தலையில் படுகாயமடைந்த நிலையில் குடும் பஸ்தர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் நெல்லியடிச் சந்திக்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

நெல்லியடியைச் சேர்ந்த றூபன் (வயது 27) என்பவரே படுகாய மடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-12,60)






காரைநகர்
**கிழவன்காடு கலாமன்றம்**
**கலைவகுப்புகளுக்கான அனுமதி வழங்கல்**

சங்கீதம், பண்ணிசை, நடனம், மிருதங்கம், வயலின், யோகாசனம், தியானம் ஆகிய பயிற்சிநெறிகளில் இணை விரும்புகின்றவர்கள் நாளை 22.10.2015 வியாழக்கிழமை விஜயதசமி அன்று பி.ப 5.00 மணி தொடக்கம் அனுமதிகளைப் பெற்று இணைந்து கொள்ள முடியுமென அறியத் தருகின்றோம்.



இல.11, கஸ்தூரியார் 1-ம் ஒழுங்கை, (உதயன் பத்திரிகை நிறுவனம் அருகில்) யாழ்ப்பாணம்.

பதிவாளர்
கிழவன்காடு கலாமன்றம்,
யாழ்.கிளை.



**50ஆவது திருமண வாழ்வின்**
**பொன்விழா மலரட்டும்**

**யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த திரு.கயித்தாம்பிள்ளை முடியப்பு (சுவாம்பிள்ளை) பெண் கிறிஸ்ரினம்மா தம்பதிகள்**

(2514)



பொன் மனச் செம்மலுக்கு
பொன் விழா ஆண்டு
நன் மனம் கொண்டு
நலம் பெற வாழ்த்துகின்றோம்.
அன்பும் பண்பும் கொண்ட
அறவாழ்வின் இனிமையிலே
என்றும் இல்வாழ்வு வளம்பெற
எல்லாம் வல்ல இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

27/1, 1ஆம் குறுக்குத்தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:- பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



**9ஆம் ஆண்டு நினைவலைகள்**

மண்ணில் 18.04.1928 | விண்ணில் 30.10.2006

**அமரர் செல்லையா தியாகராஜா**

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம்-1)



காலங்கள் கடந்தாலும் கணப்பொழுதும் மறவோம்
ஞாலத்தில் என்றுமே நினைவுகளில் வாழ்வீரே
ஆளவே புகுந்தீரே அப்பாவே எம் உள்ளங்களில்
ஒன்பதாண்டு சென்றாலும் ஆறவில்லை எம்மனது.

(2115) "ஸ்ரீ அகம்" சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



**புலமை கல்வி நிறுவனம்**
சோதிவேம்படி லேன்,
மானிப்பாய்.

**புதிய புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்**

தரம் - 4 (தற்போது தரம் 3)
காலம் - 22.10.2015 (வியாழக்கிழமை)
(விஜயதசமி அன்று)
நேரம்:-4.30 மணி

திரு.க.கலாமோகன்
(B.A, Dip.in.Teach.)

(2105)

குறிப்பு:-
பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால்
பதிவுகளுக்கு முந்துங்கள்.

நிர்வாகி,
சோதிவேம்படி லேன்,
மானிப்பாய்.

தொடர்புகளுக்கு :- 077 21 21 915


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழு அறிக்கைகளை வெளியிடாது நல்லிணக்கம் பற்றி பேசுவது அர்த்தமற்றது

(கொழும்பு)

**காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த உடலாகம மற்றும் பரணகம ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை வெளியிடாமல் நல்லிணக்கம் மற்றும் இடைக்கால நீதி தொடர்பில் பேசுவது அர்த்தமற்றது என கபே அமைப்பும், மனித உரிமைகளுக்கான நிலையமும் சுட்டிக்காட்டியுள்ளது.**

2016ஆம் ஆண்டுக்கான நிதிஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவிருக்கும் நிலையில், பராளுமன்றத்தில் உள்ள கடும் போக்காளர்கள் இலங்கைக்கு எதிரான ஐ.நா. பிரேரணையை வைத்து மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதற்கு முயற்சிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளன.

இது தொடர்பில் கபே அமைப்பும் மனித உரிமைகளுக்கான நிலையமும் இணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன. அதில் மேலும்குறிப்பிட்டுள்ளதாவது,

ஐ.நா. பிரேரணையை நகரங்களில் உள்ளவர்கள் சாதகமாகப் பார்க்கின்ற போதும், சிங்கள சமூகத்தில் ஒரு பகுதியினரிடம் இது தொடர்பான சந்தேகம் காணப்படுவதாக நாம்நம்புகின்றோம்.

மனித உரிமை குற்றச்சாட்டுக்கள் மிகைப்படுத்தப்பட்டிருப்பதுடன், பாதுகாப்புத் தரபினரை தண்டனைக்கு உட்படுத்தும் முயற்சிகள் என்று அவரகள் நினைக்கி ன்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் சட்ட விவகாரத்தில் சர்வதேச விசாரணையாளர்கள் நுழைந்து விடுவார்கள் என்ற சந்தேகமும்இவர்களிடையே காணபபடுகிறது.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, தினேஷ் குணவர்த்தன போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், 'தாய்நாட்டை பாதுகாக்கும் அமைப்பு' என ஒன்றை உருவாக்கி ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக தொடர்ச்சியான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்தக் குழுவினர் 22, 23 ஆம் திகதிகளில் ஜெனிவா தீர்மானம் தொடர்பில் பாராளுமன்றத்தில் கருத்துக்களை வெளியிடவுள்ளனர்.

இவ்வாறான நிலையில் உள்ளக விசாரணைகளான உடலாகம மற்றும் பரணகம ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். இந்தக் குழுக்கள் முன்னாள் ஜனாதிபதியால் அமைக்கப்பட்டிருந்தவை என்பதுடன், இவற்றுக்கும் சர்வதேச நிபுணர்கள பயன்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்த இரண்டு ஆணைக்குழுக்களும் பாதிக்கப்பட்ட தரப்பினர் உட்பட பல்வேறு தரப்புக்களுடன் பரந்தளவான சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளன. எனவே இந்த இரண்டு விசாரணை அறிக்கைகளையும் வெளியிடாமல் நல்லிணக்கம் பற்றியோ அல்லது இடைக்கால நீதி தொடர்பிலோ பேசுவது அர்த்தமற்றது என்பதே தமது நிலைப்பாடு என கபே அமைப்பும், மனித உரிமைகளுக்கான நிலையமும் சுட்டிக்காட்டியுள்ளன. (இ-7-10)

## யாழ்.நீதிமன்ற தாக்குதல் வழக்கு; 7 சந்தேக நபர்களுக்கு ஆட்பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு இறுதியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 7சந்தேகநபர்களையும் தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய 2ஆட்பிணையில் செல்லுமாறும் யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்து கடந்த மே மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது நீதிமன்ற கட்டடத்தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டதாக சந்தேகத்தின் பேரில் அன்றைய தினம் கைது செய்யப்பட்ட 130 பேரும் புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகளின் மூலம் அடையாளம் காணப்பட்டு 25 பேரும் கைது செய்யப்பட்டு 5 மர்த காலமாக தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நீதிமன்ற கட்டடத் தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டமை, பொலிஸார் மீது தாக்குதல் நடத்தி அவர்களை காயப்படுத்தியமை, சிறைச்சாலை வாகனங்களை சேதப்படுத்தி பொதுச் சொத்துக்களுக்கு பங்கம் விளைவித்தமை மற்றும் சட்டவிரோத கூட்டங்களில் கலந்து கொண்டமை போனற குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேகநபர்களுக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவர்களுடைய வழக்குகள் விசாரணை மேற்கொள்ளப்பட்டு பகுதி பகுதியாக பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் இறுதியாக விளக்கமறியலில் இருந்த 7 பேருடைய வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அவர்கள் அனைவரையும் பிணையில் செல்ல அனுமதித்துள்ளார். (இ-9)

## சமூக வலைத் தளங்களுக்கு எதிராக வருகிறது புதிய சட்டம்

சமூக வலைத்தளங்களில் தனி நபரை இழிவுபடுத்தும் வகையிலான பதிவேற்றங்களுக்கு எதிராக புதிய சட்டமொன்றை அரசாங்கம் கொண்டுவரவுள்ளதாக நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும் வழக்குகளின் காலதா மதத்தை குறைப்பதற்கு விசேட நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கவுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். நீதி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சட்டம் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுக்களின் பிரதிநிதிகளுடனான கூட்டத்தொடரின் பின்னரே அமைசசர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய காலத்திற்கு ஏற்ற வகையில் புதிய சட்டங்களை உருவாக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதேபோன்று அமுலிலுள்ள சட்டதிட்டங்களை மறு சீரமைக்கும் வேலைத் திட்டங்களும் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு தற்போது அதிகளவிலான வழக்குகள் மிகவும் காலதா மதம் அடைவதனால் குறித்த வழக்குகளை துரிதப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவற்றில் மிகவும் முக்கியமான வழக்குகளுக்கு விசேட அவதானம் செலுத்தப்பட வுள்ளது. இதற்கான ஏற்பாடுகளும் சட்டம் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வில் ஆராயப்பட்டது.

அத்தோடு தற்போது அதிகளவில் சமூக வலைத்தளங்களில் தனி நபரொருவரை இழிவுபடுத்தும் முகமான பல்வேறு பதவியேற்றல் கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. இதன்படி இவ்வாறான பதிவேற்றங்களை முன்னெடுப்போருக்கு எதிராக புதிய சட்டமொன்றை அரசாங்கம் கொண்டு வரவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளையும் நாம் முன்னெடுக்கவுள்ளோம். மேலும் மோட்டார் வாகன திணைக் களத்திற்கான. சட்டதிட்டங்களிலும் திருத்தங்கள் கொண்டு வருவதற்கு திட்டமிட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## மனிதவுரிமை ஆணைக்குழுவில் கொண்டயா நேற்று முறைப்பாடு

சிறுமி சேயா படுகொலை சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கொண் டயா என அழைக்கப்படும் துனேஷ் பிரியஷாந்த மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

பொலிஸார் தன்னை அடித்து துன்புறுத்தி பலாத்காரமாக பொய்யான வாக்கு மூலமொன்றை பெற்றதாக கூறியே குறித்த முறைப்பாட்டை அவர் நேற்றுப் பதிவு செய்துள்ளார். (இ-7-10)

## மாணவன் தற்கொலை

பாடசாலை மின்சார சுவிச்சுகளை சேதப்படுத்தியதாக ஆசிரியர்களால் குற்றம் சாட்டப்பட்ட 11 வயது மாணவனொருவன் தற்கொலை செய்து கொண்டுள்ளான். நுவரெலியா மாவட்டத்தின் சாந்திபுர பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

சாந்திபுர பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்று வந்த சானக்க கல்ஹார எனும் மாண்வன் பாடசாலைமின்சாரசுவிச்சுகளை சேதப்படுத்தியதாக ஆசிரியர்களால் கண்டிக்கப்பட்டுள்ளான்.

அத்துடன் நேற்று செவ்வாய்க்கிழமை தனது பெற்றோரையும் பாடசாலைக்கு அழைத்து வருமாறும் ஆசிரியரகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை இது தொடர்பில் கடிதமொன்றை எழுதி வைத்துவிட்டு குறித்த மாணவன துக்கில்தொங்கிதற்கொலை செய்து கொண்டுள்ளான்.

சம்பவம் தொடர்பாக நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7-10)

## மீண்டும் விளக்கமறியல்


கொட்டதெனியாவ சிறுமி சேயா படுகொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட கொணடயா தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொண்டயாவும் அவரது சகோ தரரும் நேற்று முன்தினம் பலத்த பாதுகாப்புக்கு மதத்தியில் மினுவாங்கொடை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், சிறுமி சேயாவின் கொலை வழக்கில் இருந்து கொண்டயாவை விடுதலை செய்து நீதிபதி தீர்ப்பளித்திருந்தார்.

எனினும் கம்பஹா மற்றும் அத்தனகல்ல நீதிமன்றங்களில் அவருக்கு எதிரான வழக்குகள் நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்த தகவலை ஏற்றுக் கொண்ட நீதிபதி, கொணடயாவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டுள்ளார்.

அதனுடன்கம்பஹா, மினுவாங்கொடை, அத்தனகல்லை நீதிமன்றங்களில் நடைபெறும் வழக்குகளுக்கு கொணடயாவை முன்னிலைப்படுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதன் காரணமாக கொணடயா விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-7-10)




## மேலைத்தேய சங்கீத பரீட்சைக்கு தோற்றிய சகலருக்கும் நியமனம்

(கொழும்பு)

மேலைத்தேய சங்கீத ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்காக கல்வியமைச்சினூடாக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றிய சகல மேலைத்தேய சங்கீதப் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்குவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.


சங்கீதப் பாடங்களுக்கு இவர்களை நியமிக்குமாறு கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கட்புலம் மற்றும் ஆற்றுகைக்கலை பல்கலைக்கழத்தில் மேலைத்தேய சங்கீதப் பட்டதாரிகள் உள்ளிட்ட 365 பேர் இந்த பரீட்சைக்கு தோற்றினர். அந்த பரீட்சையில் 124 பேர் மட்டுமே சித்தியெய்தினர். அதில், நேர்முகப் பரீட்சையின் ஊடாக 70 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர். பரீட்சைக்கு தோற்றி ஆங்கிலத்தில் சித்தியெய்தாதவர்கள் பலர் இருக்கின்றனர்.

அவர்களுக்கு சில, விலக்களிப்புகளை வழங்கும் வகையிலேயே கல்வியமைச்சரினால் இந்த நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (இ-7-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச போட்டிகளிலிருந்து **ஷேவாக்** ஓய்வு



இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரரான வீரேந்தர் ஷேவாக் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு அறிவித்துள்ளார்.

நேற்று அவருக்கு 37ஆவது பிறந்த தினமாகும்.

1999ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் போட்டியின் மூலம் சர்வதேச சிரிக்கெட் அரங்கில் அறிமுகமான ஷேவாக் தனது அதிரடியால் கிரிக்கெட் வரலாற்றில் மறக்க முடியாத இடத்தை பிடித்தார்.

கிரிக்கெட்டில் பல சாதனைகளை படைத்த ஷேவாக் கடந்த 2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியே அவர் விளையாடிய சர்வதேச போட்டியாக அமைந்தது. அதன்பிறகு அவர் எந்தவொரு தொடரிலும் தெரிவு செய்யப்படவில்லை.

டுபாயில் மாஸ்டர்ஸ் சம்பியன்ஸ் லீக் போட்டியின் தொடக்க விழாவில் ஷேவாக் பேசும் போது, "சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறாவிட்டால் மாஸ்டர்ஸ் சம்பியன் போட்டியில் விளையாட முடியாது. எனவே இந்தியாவுக்கு சென்று தனது ஓய்வு தொடர்பாக அறிவிப்பேன்" என்று தெரிவித்திருந்தார்.

அதன்படி இந்தியா திரும்பிய ஷேவாக் சர்வதேச மற்றும் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக டுவிட்டர் பக்கத்தில் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளார்.

ஷேவாக், 251 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 8,273 ஓட்டங்களையும், 104 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 8,586 ஓட் டங்களையும் எடுத்துள்ளார்.

மேலும், 19 சர்வதேச இருபது-20 போட்டிகளில் விளையாடி 394 ஓட்டங்களையும் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# முரளிதரன் சுழலில் தடுமாறினேன்

## மனம் திறந்தார் ஷேவாக்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழல் ஜாம்பவான் முத்தையா முரளிதரனின் பந்துவீச்சில் தான் தடுமாறியதாக ஓய்வை அறிவித்துள்ள ஷேவாக் தெரிவித்துள்ளார்.

தனது அதிரடி ஆட்டத்தால் கோடிக் கணக்கான ரசிகர்களின் உள்ளங்களை கவர்ந்த ஷேவாக் நேற்று சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வை அறி வித் துள்ளார்.

இந்நிலையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், "தனது முதல் டெஸ்ட் போட்டி, முதன்முறையாக டெஸ்டில் 300 ஓட்டங்கள் கடந்தது, உலகக் கிண்ணத்தை வென்றது, இலங்கைக்கு எதிராக 2008ஆம் ஆண்டு காலி மைதானத்தில் 201 ஓட்டங்கள் எடுத்தது, 281 ஓட டங்கள் எடுத்த போது விவிஎஸ் லகஷ்மன் எழுந்து நின்று கைதட்டியது ஆகிய நிகழ்வுகள் எனது வாழ்வில் மறக்க முடியாத சம்பவங்கள்" என்று கூறியுள்ளார்.

மேலும், "சச்சின், டிராவிட், கங்குலி, கும்ளே மற்றும் சாகீர் கான் போன்ற வீரர்களுடன் விளையாட வாய்ப்பு கிடைத்தது தன்னுடைய அதிர்ஷ்டம்" என்றும் கூறினார்.

முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி பற்றி கூறுகையில், "அவர் என் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். முழு நம்பிக்கையும் வைத்திருந்தார்.

அதனால் எனக்காக தொடக்க ஆட்டக்காரராக விளையாடுவதை விட்டுக் கொடுத்தார். உங்களுக்கு மிகுந்த நன்றி சௌரவ்" என்று கூறியுள்ளார்.


மேலும், பல பந்துவீச்சாளர்களின் பந்துகளை அடித்து நொறுக்கிய ஷேவாக், தான் சந்திக்க பயந்த ஒரே பந்துவீச்சாளர் இலங்கையின் முத்தையா முரளி தரன் என்று கூறியுள்ளார்.

ஓய்வுக்கு பிறகும் என்னுடைய வாழ்க்கை கிரிக்கெட்டுடனே தொடரும் என்று கூறியுள்ள ஷேவாக், இறுதியாக தன் னுடன் விளையாடிய அனைத்து சக வீரர்களுக்கும், அன்பு காட்டிய ரசிகர்களுக்கும் நன்றி தெரிவித்து கொண்டார். (க)




## றொனால்டோவுடன் உறவு கொண்டேன்

# பிரேசில் மாணவி அதிர்ச்சி பேட்டி



போர்த்துக்கல் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் றொனால்டோவின் காதல் முறிவுக்கு நான்தான் காரணம் என்று கல்லூரி மாணவி ஒருவா தெரிவித்துள்ளார்.

ரியல் மாட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் றொனால்டோ, கடந்த 5 ஆண்டுகளாக தீவிரமாக இகினா ஷாய்க் என்ற 29 வயது மொடல் அழகியை காதலித்து வந்தார்.

போட்டிகள் இல்லாத நேரங்களில் இருவரும் பல நாடுகளுக்கு சென்று ஜாலியாக பொழுதை கழித்தனர். மேலும், இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்வார்கள் எனவும் ரசிகர்கள் எதிர்பார்த்தனர்.

இந்நிலையில் கடந்த ஓராண்டாக இவர்களுக்கு இடையே மனக்கசப்பு ஏற் பட்டது. இவர்கள் பிரிந்து விட்டதாகவும் அவ்வப்போது செய்திகள் வெளிவந்த வண்ணம் இருந்தன.

மேலும், இருவரும் தீவிரமாக காதலித்த போது இகினாவின் செல்போனுக்கு பெண்கள் செய்தி அனுப்பினர். அதில் றொனால்டோவுக்கு தங்களுடன் தொடர்பு இருப்பதாக தெரிவித்து இருந்தனர்.

இதைத்தொடர்ந்து றொனால்டோவின் செல்போனை இகினா சோதனை செய்த போது அந்த தகவல் உறுதியானது. இதனால் இகினா தனது காதலர் றொனால்டோவை விட்டு நிரந்தரமாக பிரிந்து விட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் றொனால்டோவின் செல்போனில் என்னுடையை குறுஞ் செய்திகளை பார்த்த பிறகே அவர்கள் பிரிந்து விட்டதாக பிரேசில் மாணவி டயானா (29), என்பவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில், "எனக்கும் றொனால்டோவுக்கும் கடந்த 2012ஆம் ஆண்டு பேஸ்புக் மூலம் பழக்கம் ஏற்பட்டது. பலமுறை வீடியோ சட் செய்து பேசியுள்ளோம்.


கடைசியாக 2014ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியின் போது சந்தித் துக் கொண்டோம். அப்போதுகூட நாங்கள் இருவரும் ஒரு இரவில் 3 முறை உறவு வைத் துக் கொண்டோம்.

மேலும், கிறிஸ்மஸ்க்கு பிறகு நான் அவரை தொடர்பு கொண்ட போதுதான் என்னை பற்றி இகினாவுக்கு தெரிய வந்தது. இதனாலே இருவரும் பிரிந்து விட்டனர். அதன்பிறகு றொனால்டோ என்னை தொடர்பு கொள்ளவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

மொடல் அழகி இகினா ஷாய்க், தற்போது நடிகர் பிரட்லி ஹூப்பருடன் சுற்றி திரிவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (க)

## வியட்நாம் ஓபன் டென்னிஸ்

# சாகோத் மைனேனி சம்பியன்



வியட்நாம் ஓபன் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சாகேத் மைனேனி சம்பியன் பட்டம் வென்றுள்ளார். இதுதான் இந்த பருவத்தில்அவர் வென்ற முதல் ஒற்றையர் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

வியட்நாமின் ஹாவ் சி மின் சிட்டியில் நடைபெற்ற இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் மைனேனி 7-5, 6-3 என்ற நேர் செட்களில் அவுஸ்திரேலியாவின் ஜோர்டான் தோம்ஸனை தோற்கடித்தார். போட்டித் தரவரிசையில் 4ஆவது இடத்தில் இருந்த மைனேனி 6 பிரேக் பாயிண்ட்களில் 5-ஐ மீட்டார்.

சேலஞ்சர் அளவிலான போட்டியில் ஒற்றையர் பிரிவில் 2ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றிருக்கிறார் மைனேனி. தற்போது சர்வதேச தரவரிசையில் 168ஆவது இடத்தில் இருக்கிறார் மைனேனி. நேற்று வெளியான புதிய தரவரிசை பட்டியலில் அவர் 150-வது இடத்துக்கு முன்னேறினார்.

இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாகேத் மைனேனி - சனம் சிங் ஜோடி இறுதிப் போட்டியில் தோல்வி கண்டது. இந்த ஜோடி 6-1, 3-6, 8-10 என்ற செட் கணக்கில் பிரான்ஸின் டிரிஸ்டான் லேமாசைன் - ஜேர்மனியின் நீல்ஸ் லாங்கர் ஜோடியிடம் தோல்வி கண்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிகளில் ஈடுபடுவோருக்கு வாக்களிப்பதற்கான வாய்ப்பு

## மஹஜன எக்சத் பெரமுன வலியுறுத்தல்

அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடுவோருக்கு வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று மஹஜன எக்சத் பெரமுன கட்சி தேர்தல்கள் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தேர்தல் தினங்களிலும் வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோர் அத்தியாவசிய அலுவல்களில் ஈடுபட நேரிடுகின்றது.

இவர்களுக்கு தபால் மூல வாக்களிப்பு அல்லது மாற்று வாக்களிப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

அத்துடன் அங்கவீனமுற்றவர்களுக்கும் வாக்களிப்பு தினத்துக்கு முன்னதாகவே வாக்களிக்கும் வசதி அல்லது மாற்று வாக்களிப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று மஹஜன எக்சத் பெரமுன கட்சி கோரிக்கை விடுக்கின்றது என்றும் குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-10)

## நாதஸ்வர இசைப் பயிற்சி

22.10.2015 விஜயதசமியன்று நாதஸ்வர இசைப் பயிற்சி வித்தியாரம்பம் நண்பகல் 12 தொடக்கம் மாலை 6 மணிவரைக்கும் இடம்பெறும். நாதஸ்வர வித்துவான், M. P. பாலகிருஷ்ணன், முருகன் கோவில் வீதி, நெல்லியடி. (2103)

## கலைமகள்



கலைமகள் தாயே அம்மா
எங்கள் கல்வித் தெய்வம் நீயே
கலைமகள் தாயே அம்மா
எங்கள் கல்வித் தெய்வம் நீயே
வெள்ளைத்தாமரையில் அமர்ந்தவளே
எங்கள் கள்ளம் இல்லா உள்ளத்தில்
உணர்ந்த தாயே
வெள்ளைத் தாமரையில் அமர்ந்தவளே
எங்கள் கள்ளம் இல்லா உள்ளத்தில்
உணர்ந்த தாயே

க.விஸ்னுகன், தரம்-8
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை


பாராட்டி வாழ்த்துகின்றோம்



| ச.வித்தகி | ம.நிரோஜன் | ஐ.பாவினி | அ.விதுசாளினி | சி. தனுசிகா |
|---|---|---|---|---|
| 102 | 160 | 169 | 168 | 136 |

பெரியகுளம் ஐயனார் வித்தியாலயத்தில் 2015ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களைக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் சிறப்பாக வழி நடத்திய அதிபர் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
செல்லப்பிள்ளையார் அக்ரோ சென்ரர்,
புளியம்பொக்கணை சந்தி.

(C2510)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

அருளானந்தம் விதுசாளினி



பெரியகுளம் ஐயனார் வித்தியாலயத்தில் கல்வி பயின்று 2015ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்று சித்தி எய்திய மாணவி அருளானந்தம் விதுசாளினியை பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் கல்வித்துறை சார்ந்த அனைத்து துறைகளிலும் முன்னுரிமை பெற இறைவன் அருள்புரிய வேண்டுமென வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கோபு மச்சான் குடும்பம்,
(செல்லப்பிள்ளையார் அக்ரோ சென்ரர்),
புளியம்பொக்கணை சந்தி.

(C2510)



Mega Sale!

தீபத்திருநாளை முன்னிட்டு...

மாபெரும் மலிவு விற்பனை
5% தொடக்கம் 15% வரை

தம்ரோ, பியெஸ்ரா ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்

- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு SOFA செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான (Glass Coffee Table) மற்றும் Stand Fan இலவசம்.
- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு சுவர் மணிக்கூடு (Wall clock) இலவசம். Innovex TV மற்றும் Preethi Mixi, Stand fan, Damro Washing Machine, Rice Cookers ஐ அதிகூடிய விலைக் கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.
- 25000/= இற்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) சேய்யப்படும்.
- Damro, Pyestra, Nilkamal, Phonix, Arpico ஆகியவற்றின் உற்பத்திப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.







JAMUNA FURNITURE 181, Navalar Road, Jaffna.
T.P. 021 222 1092, 077 757 4776


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதிகளுக்கு மன ஒருமைப்பாட்டு வழிப்படுத்தலுக்கான பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

வீணாகான குருபீடத்தின் ஏற்பாட்டில் விஜயதசமி அன்று (22.10.2015) வாகனங்களுக்கான பூஜையும் வாகன சாரதிகளுக்கான மன ஒருமைப்பாட்டு வழிப்படுத்தலுக்கான பிரார்த்தனை வழிபாடும் நாளை வியாழக்கிழமை சித்தன்கேணி சிவதம்பரேஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வாகன விபத்துக்களால் பெருமளவானோர் உயிரிழப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். பலர் படுகாயங்களுக்கும் ஆளாகுகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டே மேற்படி பிரார்த்தனை வழிபாடு இடம்பெறவுள்ளது.

எனவே வாகன சாரதிகள் வாகனங்களுடன் வருகை தந்து பிரார்த்தனையிலும் வழிபாட்டிலும் ஈடுபடுமாறு வீணாகான குருபீட ஸ்தாபகரும் அமைப்பாளருமான சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் அறிவித்துள்ளார். (இ-5)

# போதையிலிருந்து நாட்டைக்காப்போம் யாழில் நேற்று விழிப்புணர்வுப் பேரணி







(யாழ்ப்பாணம்)

**தேசிய போதை தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் போதையிலிருந்து நாட்டைக் காப்போம் எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வுப் பேரணி நேற்றைய தினம் யாழ். மாவட்டச் செயலகத்திலிருந்து யாழ். மத்திய பேருந்து நிலையம் வரை நடைபெற்றது.**

யாழ். மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் சாந்தியகத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இப் பேரணி நேற்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் ஆரம்பித்து அங்கிருந்து நடை பவனியாக யாழ். மத்திய பேருந்து நிலையத்தை முற்பகல் 11 மணியளவில் சென்றடைந்தது.

அத்துடன் மத்திய பேரு[ந்து] நிலையத்தில் போதைப் பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வு நாடகமும் காட்சிப்படுத்தப் பட்டது.

இப்பேரணியில் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்: பொ.சோபிகா)

# சுகாதார சீர்கேட்டுடன் மலசலகூடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள தனியார் போக்குவரத்து பேருந்து நிலையத்தில் உள்ள ஆண், பெண்களுக்குரிய மலசலகூடம் சுகாதாரச் சீர்கேடான நிலையில் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மலசலகூடங்களில் தினமும் சாராயப் போத்தல்கள், பியர் ரின்கள், சிகரெட் பெட்டிகள் என்பன நிரம்பிக் காணப்படுகின்றன.

இதனால் சுவாசிக்க முடியாத துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறதாக உள்ளூர், வெளியூர்ப் பயணிகளால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பாக தனியார் போக்குவரத்துச் சாரதிகள், நடத்துநர்கள் என்போரும் குற்றஞ்சாட்டியுள்ளனர். தினமும் மலசலகூடங்களில் விசமிகளால் வீசப்பட்டு வருகின்ற மேற்படி சாராயப் போத்தல்கள், பியர் ரின்கள், சிகரெட் பெட்டிகள் என்பன உரிய முறையில் அகற்றப்பட்டு வந்தாலும் அவை இரவு நேரங்களில் மீண்டும் வீசப்பட்டு வருகின்றன.

இதனால் தினமும் இவற்றை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை பேருந்து தரிப்பிடத்தில் குடிதண்ணீர் வசதியும் காணப்படவில்லை.

இதனால் தனியார் போக்குவரத்து சாரதிகள், நடத்துநர்கள், பயணிகள் என்போர் குடிநீரை பெற்றுக் கொள்வதில் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்குகின்றனர்.

எனவே யாழ்.மாநகர சபை, சுகாதாரப் பகுதி என்பன மலசலகூடங்களை நேரில் சென்று பார்வையிட வேண்டும் எனவும் இதற்கு உரிய நடவடிக்கையை எடுக்குமாறும் சாரதிகள், நடத்துநர்கள், பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.(இ-5-60)

# சிறுவர் நாடகப்போட்டியில் வலய மட்டத்தில் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட சிறுவர் நாடகப் போட்டியில் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை கோட்ட, வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டத்திலும் முதன்மை நிலையை அடைந்துள்ளது.

மேலும் கல்விப்பெறுபேற்றிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் முன்னேற்றம் கண்டு வருகின்றது. இந்த வருடம் தரம்-5 புலமைப் பரீட்சைப் பெறுபேற்றிலும் அகில இலங்கை ரீதியில் முன்னணிப் பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஒன்றாக இப் பாடசாலை விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.(இ-7-10)




யாழ்.செய்திகள்

## திறப்புக் கோர்வை கண்டெடுப்பு

திறப்புக் கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரி பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தடியிலுள்ள பாடசாலைக்கு அருகில் நேற்று நண்பகல் 12 மணியளவில் கண்டெடுக்கப்பட்ட மேற்படி திறப்புக் கோவையில் 6 சிறிய திறப்புக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

மேற்படி திறப்புக் கோர்வையை தவற விட்டவர்கள் வலம்புரி பத்திரிகை காரியாலயத்திற்கு அலுவலக நேரத்தில் நேரில் சமுகமளித்து உரிய ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ள முடியும. (இ)

# இந்திய மீனவர்கள் 34 பேருக்கு மறியல்

(யாழ்ப்பாணம்)


இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாக கடந்த செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நாகபட்டினத்தை சேர்ந்த 14 இந்திய மீனவர்களையும் இரண்டாவது முறையாக எதிர் வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராஜா நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்

கடந்த செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு பருத்தித்துறை கடற்பரப்பில் 2 படகுகளில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 15 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரி களிடத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

அதில் ஒரு மீனவர் புற்று நோய் காரணமாக சட்டமா அதிபரின் பரிந்துரைக்கமைவாக கடந்த 16 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

ஏனைய 14 மீனவர்களும் நேற்றைய தினம் 2 ஆவது முறையாக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-9)






இந்தியத் துணைத் தூதருக்கு கலாநிதி ஆறு.திருமுருகன் பொன்னாடை போர்த்துகின்றார்

யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் கிருபா லேணர்ஸ் இன் அனுசரணையுடன் நடத்திய பாரதி விழா நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது கிருபாகரன் தம்பதியினர் மங்கல விளக்கேற்றுவதையும் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையுரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்ட யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் உள்ளிட்ட விருந்தினர்கள் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா ஹோட்டல்கள் தொடர்பில் பிரதமர் ரணில் தீவிர நடவடிக்கை



(கொழும்பு)

கடந்த ஆட்சிக் காலத்தில் அரசின் முக்கியஸ்தர்களின் ஆசியுடன் கட்டப்பட்ட சுற்றுலா ஹோட்டல்களுக்கு ஆப்பு வைக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்துக்கு நெருக்கமான பலரும் கடற்கரையோரங்கள் மற்றும் வனாந்தரங்களின் வனப்பைக் கெடுக்கும் வகையிலும், சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் வகையிலும் பாரியளவில சுற்றுலா ஹோட்டல்களை நிர்மாணித்திருந்தனர்.

அரசாங்கத்தின் உயர் மட்டம் அவர்களுக்கு ஆதரவாக இருந்த நிலையில், அது குறித்து அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் இருந்தனர்.

எனினும் முன்னைய அரசாங்கத்தின் ஆதரவுடன் சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுற்றுலா ஹோட்டல்கள் குறித்து ஆய்வொன்றை மேற்கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

அவ்வாறான ஹோட்டல்களில் சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் செயற்படும் ஹோட்டல்களைக் கண்டறிந்து அவற்றை மூடிவிட நடவடிக்கை எடுப்பது குறித்து பிரதமர் ஆலோசித்து வருவதாக தெரிய வந்துள்ளது. (இ-7-10)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா:49செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:o/l/சொந்ததொழில்<br>தொ.இ: B/1504 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 43செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டயகணக்காளர்<br>தொ.இ: G/2662 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 26செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: B/1513 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 30செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:HND/கணக்காளர்<br>தொ.இ: G/2663 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 31சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:MA/அரசதொழில்<br>தொ.இ: B/1519 | பிறப்பு: 1984RC<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 50செவ் 1 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>தொ.இ: G/2664 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 43<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: B/1526 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 37செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/2666 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)



ALREADY ISSUED 24000 CERTIFICATES

MICOM THE GREAT
SINCE 1997 IN COLOMBO

**Law Classes**



Corporate and Business LAW (ACCA)
Fundamentals of Ethics
Corporate Governance
and Business Law } CIMA
Business Law ( AAT) (CMA)
General Principales of Law (IBSL)
LLB, Law College Subjects.

Class also start in Colombo very soon.

English Medium with Tamil Explanation
[A/C Class Rooms]

**English Classes**

IELTS, Spoken English with Grammer
Diploma in English- English A/L, O/L

*Course fee:* Very reasonable

Accountancy classes: **CIMA, ACCA, CMA, AAT** and
**Standard Computer Courses** will commence very soon.

*Student's Performance*

**Corporate & Business Law:**- Vijitha-59, Nivethika-B, Jeevitha-66, Dilanka-72, Jeyasuriya-59
***IELTS Band:***- Kaneshan-07(In Australia), Nuwan-6.5, Jathusana -6.5(London), Thivya -07(London), Thamilarashi(Thellippalai)

*Conducted by*

Mohanarajah Joganantham
(M.Raja Joganantham)
L.L.B.(Col.Uni)
Dip in Journalism
Reading for LL.M
Proprietor of MICOM

An old Student of
Honourable Prof.Dr.G.L.Peries,
Prof.Madam Savithiri Kunasekere
Prof.Dr.S.Sornaraja
Prof.Madam. N. Chandrakasan



**Tellipalai** classes already commenced
"Micom the Great" infront of old AGA's office,
**Jaffna** Town at Raja Complex,
205H 1/2, Kasthurijar Road.

Contacting Numbers:
077 284 2556, 076 707 7558, 077 395 0215
Contactable person Mr.Joganantham

Lectured on Law, University of Ballarat (Australia), University of ICFAI (Hydrabad), OXONIA, IAS, Ladies College, London Business School, MICOM International

(2114)


## ராசி பலன்

21.10.2015
(ஐப்பசி 04, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57மணிக்கு,
அட்டமி முற்பகல் 9.06 மணிவரை
உத்தராடம் முற்பகல் 10.52 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
மகா நவமி விரதம்

வளவன்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | சந்திராஷ்டமம் மிருகசீரிடம், திருவாதிரை | | |
| சந் | | | குரு, செவ், சுக் |
| | சனி | சூரி | ராகு, புத |

**மீனம்** – விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மேடம்** – இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** – மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம்.

**மிதுனம்** – மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திடீர்ச்செலவுகள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**கும்பம்** – சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சிறிய வேலையொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**கடகம்** – அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**மகரம்** – அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** – போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல் நலம் சீராகும், அரசியல் செல்வாக்கு அதிகரிக்கும் நாள், அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** – நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்** – பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** – வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் நலனில் பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள்.

**கன்னி** – உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைதான நிகழ்வுகளால் கல்வி செயற்பாடுகளுக்கு இடையூறு

விரைவில் நடவடிக்கை-கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

**கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் தொடரச்சியாக வார இறுதிநாட்களில் இடம்பெறும் நிகழ்வுகள் கல்விச் செயற்பாட்டுக்கு இடையூறாக இருப்பதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

கிளி/அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வார இறுதி நாட்களில் இடம்பெறும் விளையாட்டு நிகழ்வுகள் என்பன பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு பெரும் இடையூறாக இருப்பதாக பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குறித்த மைதானத்தில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளினால் அருகில் உள்ள கிளிநொச்சி மத்திய கல்லூரி, மத்திய ஆரம்ப வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளிலும் இடம்பெறும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான பயிற்சிகள், கருத்தரங்குகள் என்பவற்றை கொண்டு நடத்த முடியாத அளவுக்கு ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இது குறித்த செயற்பாடு பெரிதும் பாதிக்கின்றது. எனவே அதன் விளைவு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை பாதிப்பதாக கல்வித் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதாக அரச அதிபர் குறிப்பிட்டார்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் குறித்த மைதானத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பில் அவதானம் செலுத்தப் போவதாகவும் அவற்றைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும் கல்வித் துறையில் கிளிநொச்சி ஸ்திரநிலைமையை அடைய முடியாத சூழல் காணப்படுகிறது. மாவட்டத்தின் கல்வி வளர்ச்சி மேலும் முன்னோக்கிக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொண்ட மாணவனுக்கு மடிக்கணனியை வழங்கி வைத்தார். (2-281)

## வவு.பேருந்து நிலையம் விரைவில் திறக்கப்படும்

(வவுனியா)

108 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள வவுனியா பேருந்து நிலையத்தை ஒரு மாதகாலத்தினுள் மக்கள் பாவனைக்குத் திறந்து விடுமாறு போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் மேற்படி பேருந்து நிலையத்தை பார்வையிட்டுள்ளதுடன் எதிர்வரும் வாரங்களில் அதனை உத்தியோகபூர்வமாக திறந்து வைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

மேற்படி பேருந்து நிலையம் பொது மக்களின் நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா பேருந்து நிலையத்தின் வேலைகள் அனைத்தும் பூர்த்தியடைந்த நிலையில் திறக்கப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-3)




## பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளி/பளை மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் சங்கப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு, 2016 ஆம் ஆண்டுக்கான திட்டமிடல், புதிய அங்கத்தவர்கள் இணைத்தல் போன்ற விடயங்கள் இடம்பெறவுள்ளன. (2)

## முல்லையில் முத்தான வியர்வை கண்காட்சியும் விற்பனையும்

முல்லைத்தீவு மாவட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் முத்தான வியர்வை வர்த்தகச் கண்காட்சி நேற்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவுள்ள மைதானத்தில் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி ஜே.கணேச மூர்த்தியின் தலைமையில் இடம்பபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நடாவை வெட்டி திறந்து வைத்தார்.

அத்துடன், வடமாகாண சபை உறுப்பினர்களர்ன வல்லிபுரம் கமலேஸ்வரன், கந்தையா சிவனேசன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் சி.மோகன்ராஸ், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், இராணுவம், பொலிஸ் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று, வெலி ஓயா, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலகத்திற்குட்பட்ட முயற்சியாளர்கள், பயனாளிகள் குறித்த வர்த்தக கண்காட்சியில் விற்பனைக்கூடாரங்களில் பொருட்களை காட்சிப்படுத்தியுள்ளனர்.



குறித்த வர்த்தகக் கண்காட்சியில் பொதுமக்கள் தங்களின் சுய முயற்சியினால் செய்யப்பட்ட கைப்பணிகள், உபகரணங்கள் மட்பாண்டங்கள் என காட்சிப்படுத்தியுள்ளனர். குறித்த வர்த்தகக் கண்காட்சி நாளை வியாழக்கிழமை வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## விஜயதசமி தினத்தன்று சதுரங்க பயிற்சித்திட்டம்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வன்னிப் பிரதேச பழைய மாணவர் சங்கம் கடந்த புதன்கிழமை கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

மகாதேவ சிறுவர் இல்லத்தின் தலைவர் ரி.இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு யாழ்.இந்துக் கல்லூரியின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பழைய மாணவர்கள், யாழ்/இந்துக்கல்லூரியின் தாய் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது வன்னிப்பிரதேசத்தில் இருந்து யாழ்.இந்துக்கல்லூரியில் கல்வி கற்ற பழைய மாணவர்களுடன் இணைப்பை ஏற்படுத்தவும் கல்லூரி அபிவிருத்திகளுக்கு அப்பால் வன்னி பிரதேசத்தில் கற்றலுக்கு இடர்பாடுகளை அனுபவிக்கின்ற மாணவர்களின் மேம்பாட்டுக்கு யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர்களின் பங்களிப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் வன்னிப்பிரதேசத்துக்குரிய நிர்வாகக்குழு தெரிவு செய்யப்பட்டு குழுவின் ஆலோசகராக ரி.இராசநாயகம், குழுத் தலைவராக கு.யோகன்ராஜ்,செயலாளராக சி.அருணன், பொருளாளராக கீ.அகிலன்,உப-தலைவர்களாக க.செருஜெனன், த.வரதராஜன், ஆ.இளமாறணன், உப செயலாளராக வைத்தியர் ச.மணிவண்ணன்ஆகியோர்தெரிவாகினர்.

இக்குழுவின் முதற்கட்ட செயற்பாடாக கிளிநொச்சி இந்துக்கல்லூரியை மையப்படுத்தி எதிர்வரும் விஜயதசமி அன்று கணித, விஞ்ஞான மேம்பாட்டுத் திட்டம்,சதுரங்க பயிற்சித்திட்டம் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன. (2-9)

## சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்களுக்கான போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

வருடாவருடம் உழவர் பெருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இம்முறையும் 2016 ஆம் ஆண்டுக்கான உழவர் பெருவிழா கொண்டாடப்படுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனையொட்டி வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கான போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச் சந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வீட்டுத் தோட்ட போட்டியானது முதலில் மாவட்டமட்டத்தில் விவசாயப் போதனாசிரியர பிரிவுகளில் நடத்தப்பட்டு மூன்று சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இரண்டாம் கட்ட தெரிவானது விவசாயப் போதனாசிரியர் மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றவர்கள் மத்தியில் நடத்தப்பட்டு மாவட்டமட்டத்தில் மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இவ்வாறு மாவட்டமட்டத்தில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில்களும் வெற்றிக் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

மாவட்டமட்டங்களில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு தைப்பொங்கல் தினத்தினை. ஒட்டி நடைபெறும் உழவர் பெருவிழாவில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனினால் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

சகல வீட்டுத்தோட்டச் செய்கையாளர்களும் போட்டி நிபந்தனைகளுக்கு அமைவாக போட்டியில் கலந்து கொள்ளமுடியும்

இதற்கான விண்ணப்பப்படிவங்களை அருகில் உள்ள விவசாயப் போதனாசிரியரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அறியத்தந்துள்ளார். (2)



கிளிநொச்சி மக்கள் வங்கி கிளையில் நேற்றைய தினம் காலை 9 மணியளவில் நவராத்திரி பூசை நடைபெற்ற போது...(படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. வேரவில் இந்து மகா வித்தியாலயத்தை தரமுயர்த்துமாறு பெற்றோர் மனு கையளிப்பு

கிளிநொச்சி வேரவில் இந்து மகா வித்தியாலயத்தை தரமுயர்த்துமாறு கோரி, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பூநகரிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆகியோரிடம் பெற்றோர் மனுவொன்றை கையளித்துள்ளனர்.

அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் வருமாறு,

பூநகரிக் கல்விக் கோட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமமான வேரவில் கிராமத்தில் தரம் 1சி பாடசாலையாக உயர்தரத்தில் கலைப்பிரிவுடன் மட்டும் இயங்கிவரும் இப் பாடசாலையினை தரம் 1ஏபி பாடசாலையாக தரமுயர்த்துவதன் மூலம் வர்த்தக, கணித விஞ்ஞானப் பிரிவுகளில் மாணவர்கள் கல்வி கற்கக்கூடிய நிலை உருவாகும்.

தற்போது மாணவர்கள் வர்த்தக, கணித மற்றும் விஞ்ஞானப் பிரிவுகளுக்கு 25 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள முழங்காவில் மகா வித்தியாலயத்திற்கும், 65 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள கிளிநொச்சி நகரத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் சென்று கற்க வேண்டியுள்ளது.

இப்பாடசாலையை தரமுயர்த்துவதன் மூலம் பாடசாலை வளர்ச்சியடைவதுடன் மாணவர்களுக்கும் கல்வி வசதி உருவாகும் என கையளிக்கப்பட்டுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கான மதிப்பீடு தெரிவிற்கு விண்ணப்பிக்குக

(கிளிநொச்சி)

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் சிறந்த தொழில் முயற்சியாளரை தெரிவு செய்வதற்கான மதிப்பீடு நடத்தப்படவுள்ளது.

இதன்போது மாவட்ட மட்டம்,மாகாண மட்டம், தேசிய மட்டம் என தெரிவுகள் நடைபெறவுள்ளன.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தொழில் கிளிநொச்சி மாவட்ட முயற்சியாளர்கள் மாவட்ட செயலகத்தின் பழைய கட்டடத்தில் அமைந்துள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபை அலுவலகத்தில் விண்ணப்ப படிவங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

அலுவலக நேரங்களில் 021 228 3754 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(2-254)

# கிராமங்களை அபிவிருத்தி செய்வதன்மூலம் சிறார்களின் கல்வியை மேம்படுத்த முடியும்

## மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

மிகவும் பின் தங்கிய கிராமங்களில் வாழும் சிறார்களின் கல்வியை மேம்படுத்துவதன் மூலம் இவ்வாறான பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்திப்பாதைக்கு கொண்டு செல்லமுடியும் என மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசின் நூறு நாள் வேலை த்திட்டத்தின் கீழ் 2015ஆம் ஆண்டு 15 ஆயிரம் கிராமங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தில் முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள ஒட்டறுத்தகுளம் கிராமத்தில் 850 பயனாளிகள் நன்மையடைக்கூடிய வகையில் புதிதாக அமைக்கப்பட்ட சனசமூக நிலை யத்துடன் கூடிய பொதுமண்டபத்தின் திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பொது மண்டபத்தினை திறந்து வைத்து உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தனது உரையில்,


இந்த கிராமத்தின் தேவைகருதி அமைக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்படுகின்ற இக் கட்டடத்தின் மூலம் இந்த கிராமத்தில் உள்ள அனைத்து மக்களும் நன்மைகளை பெற்றுக்கொள்ளவேண்டும். மாறாக கட்டடங்களை அமைத்து திறந்து வைப்பதுடன் மட்டும் நின்று விடாது குறித்த கட்டடங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதை தவிர்த்து கிராமத்தின் தேவைகளுக்கு இவ்வாறான கட்டடங்களை பயன்படுத்தி இந்த கிராமங்கள் முன்னோக்கி செல்லவேண்டும்.

சனசமுக நிலையத்துடன் கூடிய ஒரு மண்டபமாக திறக்கப்படும் இந்த கட்டடத்தின் மூலம் இந்த கிராமத்தில் வாழும் சிறார்கள், மாணவர்கள் உரிய பயனைப் பெற்று தங்களது கல்வியை மேம்படுத்துவதன் மூலம் இதுபோன்ற பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்திப்பாதைக்கு கொண்டு செல்ல முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த புதிய கட்டடத்தின் திறப்பு விழா நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் த.பிருந்தாகரன், காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், வன்னி விளாங்குளம் மற்றும் பாலிநகர் கிராம அலுவலர்கள் இக்கிராம மக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோடர் கலந்து கொண்டனர். (2-250)




# கிளி.மாவட்ட செயலகத்தில் நேற்று புள்ளிவிபரவியல் தினம் அனுஷ்டிப்பு





(மல்லாவி)

நாடளாவிய ரீதியில் உலக புள்ளி விபரவியல் தினம் நேற்றைய தினம் கொண்டாடப்பட்டது.

"சரியான தரவுகள் சரியான வாழ்வு" எனும தொனிப்பொருளில் நேற்றையதினம் புள்ளி விபரவியல் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதற்கமைய கிளிநொச்சி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் குறித்த தினம் முன்னெடுக்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு உலக புள்ளிவிபரவியல் தினமாக அங்கீகரிக்கப்பட்டது. 5 வருடங்களிற்கு ஒருமுறை இதே நாளில் அனுஷ்டிக்கப்பட்ட புள்ளிவிபரவியல் தினம் இரண்டாவது புள்ளிவிபரவியல் தினமாக நேற்றும் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், புள்ளி விபரவியல் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-15-281)

# வடக்கு மாகாண இலக்கிய பெருவிழா-2015 விருதுபெறும் நூல்களின் விபரம் அறிவிப்பு

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடா வருடம் நடத்தப்பட்டு வருகின்ற மேற்படி விழா இவ்வாண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் கூட்டுறவு மண்டபத்தில் ஒக்டோபர் மாதம் 23, 24ஆம் திகதிகளில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம்நடத்தப்படும் சிறந்த நூற்பரிசுத் தேர்வில் துறை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட நூல்களினதும் எழுத்தாளர்களின் விபரங்களும் வடக்கு மாகாண முதலமைச்சர் விருதுக்கு கலைத்துறை ரீதியாக தெரிவு செய்யப்பட்டோர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்கான கௌரவிப்பு வைபவம் வடக்கு மாகாண இலக்கியப் பெருவிழாவின் நிறைவு நாளாகிய எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளி நொச்சி மாவட்டத்தின் கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறும். வெளியாகியுள்ள விபரம் வருமாறு,

**நூல்களினதும் எழுத்தாளர்களினதும் விபரங்கள்,**

அறிவியல்-நீருயிர் வளம்-திருச்செல்வம் தவரத்தினம் சடையாளி, காரைநகர், சமூக விஞ்ஞானம்-பாடசாலைக் கல்வி ஆற்றலும் சமூக நீதியும்- பேராசிரியர் மாரிமுத்து சின்னத்தம்பி, சம்பியன் லேன், கொக்குவில் ,கிழக்கு கொக்குவில், ஆய்வு நூல்-யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்-பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா- ஸ்ரீவித்யா பிள்ளையார் வீதி, திருநெல்வேலி., திறனாய்வு-இலக்கியத்தில் சமூகம்- பார்வைகளும் பதிவுகளும்-இ.இராஜேஸ்கண்ணன், சாத்வீக பிரஸ்தம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, மரபுக் கவிதை- அறுவடை- குருசுமுத்து இராயப்பு (கலையார்வன்) 165, வேம்படி வீதி, யாழ்ப்பாணம், புதுக்கவிதை-சொல்லில் உறைந்து போதல் -முல்லை முஸ்ரிபா கணுக்கேணி மேற்கு, தண்ணீரூற்று, முள்ளியவளை, நாவல்-கட்டடக்காடு-பசுபதி சசிகரன் 232/5 9 ஆம் ஒழுங்கை, கோவில்குளம், வவுனியா, சிறுகதை-நிலவு நீரிலும் தெரியும்-முருகேசு ரவீந்திரன், 22/10 பாரதி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம், நாடகம்- மகுட பங்கம்-வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை, 11/01, மலையாளபுரம் தெற்கு, கிளிநொச்சி, சிறுவர் இலக்கியம்-கூடிக்குதிப்போம்- திருமதி. நெலோமி அன்ரனி குரூஸ் இல.7, விரிவுரையாளர் விடுதி கல்வியியற் கல்லூரி, பூந்தோட்டம், வவுனியா, மொழிபெயர்வு-ஆங்கிலம்- தமிழ் Sri Lanka Tamil Poetry- சோமசுந்தரம் பிள்ளை பத்மநாதன், 59/13 பொற்பதி வீதி, கொக்குவில், மொழிபெயர்ப்பு தமிழ்-ஆங்கிலம் - அன்பின் உள்ளார்ந்த குரல்-துயரூடாக விடுதலை நோக்கிய ஒரு பயணம்-அருள் திரு இராசேந்திரம் ஸ்ரலின், ஆயர் இல்லம், பிரதான வீதி,யாழ்ப்பாணம்,ஏனையவை-வன்னிப்பிரதேச வயற்பண்பாடு-நாகலிங்கம் தர்மராஜா (அகளங்கன்) இல 90, திரு நாவற்குளம்,வவுனியா,

**முதலமைச்சர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டோர்**

**யாழ்ப்பாணம் மாவட்டம் .**

சைமன் ஜேசுதாசன், நெடுந்தீவு-நாட்டுக்கூத்து, நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை, ஊர்காவற்றுறை-கூத்து தென்மோடி, வடமோடி, வேலுப்பிள்ளை சிதம்பரநாதன்,கோப்பாய்-சிந்து நடைக்கூத்து, சின்னவன் செகராச சிங்கம், கரவெட்டி-இலக்கியம், சிதம்பர பிள்ளை பொன்னம்பலம், காரை நகர்-இலக்கியம்,நடராஜா அனந்தராஜ், பருத்தித்துறை-இலக்கியம்,செல்லத்தம்பிமகேசு,நெடுந்தீவு-இலக்கியம்(சிறு கதை), வேலுப்பிள்ளை குமாரசாமி-சாவகச்சேரி-கவிதை, இலக்கியம், குழந்தை இலக்கியம், சபாபதிப்பிள்ளை பாலசிங்கம், நல்லூர்-இசை-வாய்ப்பாட்டு, திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன், தெல்லிப்பழை-இசை-வாய்ப்பாட்டு, கோவிந்தி வேலுப்பிள்ளை, பருத்தித்துறை-சிற்ப க்கலை.

**மாவட்டம்-கிளிநொச்சி**

கார்த்திகேசு முருகேசு, கண்டாவளை-நாட்டுக்கூத்து,செல்லையா இரத்தினகுமார், கரைச்சி-இசைநாடகம்,ஐயாத்துரை சிவபாதம், கரைச்சி-மிருதங்கம், லயவாத்தியம், செல்லையா தனபாலசிங்கம், பச்சிலைப்பள்ளி-ஒப்பனை.

**முல்லைத்தீவு மாவட்டம்**

திருமதி இரத்தினசிங்கம் புவனேஸ்வரி, கரைதுறைப்பற்று-கர்நாடக சங்கீதம்-வாய்ப்பாட்டு.

**மன்னார் மாவட்டம்**

அம்பலவாணர் செல்லத்துரை,மடு-கூத்து, நாடகம்,செல்லன் மாதவன்,மடு-நாடகம், மீராசாய்வு அப்துல்றபீக், முசலி-இலக்கியம் (இஸ்லாமிய கவிதை).

**வவுனியா மாவட்டம்**

மரியநாயகம்ஞானவாசகம்,செட்டிகுளம்-நாடகம்,ஆறுமுகம்தம்பையா,வவுனியாவடக்கு-இலக்கியம்(வெண்பா செய்யுள் இயற்றுதல்). (2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சிபெற்ற இனத்திற்கான விடுதலைப் போராட்டம் பெண்விடுதலையை நோக்கியதாக பரிணமித்துள்ளது

## உணர்வும் அறிவும் ஆளுமையும் கொண்ட ஒரு ஜீவன் எம்மைவிட்டு ஏகிவிட்டது என முதலமைச்சர் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களுக்கிடையே எழுச்சி பெற்ற விடுதலைப் போராட்டமானது இனத்துக்கான விடுதலைப் போராட்டம் என்ற மட்டத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. அது சமூக விடுதலை நோக்கியதாக பெண் விடுதலையை நோக்கியதாகப் பல்பரிமாணமிக்க போராட்டமாகவே நடைபெற்றது எனவும் உணர்வும் அறிவும் ஆளுமையுங் கொண்ட ஒரு ஜீவன் எம்மைவிட்டு ஏகிவிட்டது எனவும் தமிழினியின் மறைவு குறித்து வடக்கு மாகாண முதலமைச்சர் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**



அந்த அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உணர்வும் அறிவும் ஆளுமையுங் கொண்டஒரு ஜீவன் எம்மைவிட்டு ஏகிவிட்டது.

புற்றுநோய்த் தாக்கத்தினால் உயிர்துறந்த சகோதரி தமிழினி அவர்களின் அகால மரணம் தமிழ் மண்ணின் ஒரு பேரிழப்பாகும்.

சகோதரி தமிழினி அவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பில் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளராகச் செயற்பட்டு வந்தவர். அதன் காரணமாகப் போருக்குப் பின்னர் கைது செய்யப்பட்டுப் புனர்வாழ்வு பெற்றுத் திரும்பியவர்.

தமிழ் மக்களுக்கிடையே எழுச்சி பெற்ற விடுதலைப் போராட்டமானது இனத்துக்கானவிடுதலைப் போராட்டம் என்ற மட்டத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. அது சமூக விடுதலை நோக்கியதாக,பெண் விடுதலையை நோக்கியதாகப் பல்பரிமாணம் மிக்க ஒரு போராட்டமாகவே நடைபெற்றது.

தனித்துவமான பண்பாட்டுடன் கட்டுக்கோப்பாக வாழ்ந்த எமது சமூகத்தின் போக்கில் பெண் அடக்கு முறை என்பது காலாதி காலமாக இருந்தே வந்திருக்கிறது. அத்தகைய ஆணாதிக்கச் சமூகத்தில் ,பெண்களும் ஆண்களுக்குச் சமனான உரித்தைப் பெற்றவர்கள் என்ற பாரதியின் புதுமைப் பெண் சிந்தனைக்கு விடுதலைப் போராட்டமானது செயல் வடிவம் கொடுத்திருந்தது என்பதை எவரும் மறுதலிக்க முடியாது.

வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்த பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் தம்மையும் இணைத்துக் கொண்டு வீர வீராங்கனைகளாக வீரியம் பெற்றார்கள். எம் சமூகத்தில் தாய் தந்தையர்க்கும் பின்னர் கணவருக்கும் பின்னால் அடங்கி ஒடுங்கி, நாணிக் கோணி வாழ்ந்த எமது பெண்கள் சமர்க்களத்தில் தீரத்துடன் போராடும் வல்லமை பெற்றார்கள். சமூகக் கட்டமைப்புகளைத் தலைமையேற்றுநடாத்தும் வல்லமை பெற்றார்கள்.

அத்தகைய பெண் தலைமைத்துவத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக சகோதரி தமிழினி அவர்கள் விளங்கியருக்கின்றார். போர் முடிவுக்கு வந்து ஆறு ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும் சகோதரி தமிழினி அவர்களின் இழப்புத் தொடர்பாக எமது மக்கள் கொண்டிருக்கின்ற கவலையும் கரிசனையும் அந்தப் பெண் போராட்ட காலத்தில் வாழ்ந்த வாழ்க்கை முறையையும் அவரிடத்தில் காணப்பட்டதலைமைத்துவப் பண்பையும் பறைசாற்றுவனவாகவே அமைகின்றன.

சகோதரி தமிழினி அவர்கள் புனர்வாழ்வுச் சிறையில் இருந்த காலப்பகுதியில், 2010 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அப்போது,தமிழினி அவர்களை அரசதரப்பில் இணைந்துதேர்தலில் போட்டியிடுமாறும், அவ்வாறு போட்டியிட்டால் அவருக்கு விடுதலையை வழங்குவதாகவும் அப்போதைய அரசாங்கம் தமிழினியுடன் பேசியதாகவும்,அந்தப் பேரத்துக்கு சகோதரி தமிழினி அவர்கள் சோரம் போகவில்லை என்பதையும் அறிந்து பெருமைப்பட்டேன்.

இடையறாத இலட்சியதாகத்துடன் பயணித்த ,நெஞ்சுரம்மிக்க தமிழினி அவர்களின் எண்ணமெல்லாம் தமிழ் மக்களின் விடுதலைபற்றியும் தமிழ்ப்பெண்களின் உயர்ச்சி பற்றியதாகவுமே இருந்திருக்கின்றன. அவரது எண்ணங்கள் ஈடேற இதயசுத்தியோடு நாம் அனைவரும் உழைக்கவேண்டும். இதுவே அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக அமையும.

தமிழினிஅவர்கள் ஒருமுன்னாள் போராளி என்ற நிலையில் தானும் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடலாம் என்ற நிலையிலும் தமிழினி அவர்களை வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்ட அவரதுகணவர் பாராட்டுக்குரியவர். அந்த முன்னுதாரண புருஷரினதும் தமிழினி அவர்களின் குடும்பத்தினரதும் ஆற்றொணாத்துயரில் நானும் பங்கு கொள்கின்றேன்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ,வேண்டி நிற்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## தமிழினியின் இழப்பு தமிழ்த் தேசத்திற்கு ஈடுசெய்யப்பட முடியாத பேரிழப்பாகும்

### தமிழ்த் தேசிய முன்னணியின் செயலாளர் சுட்டிக்காட்டு



சிறந்த பண்பும் ஆளுமையும் கொண்ட தமிழினி தமிழ் பெண்களின் தலை நிமிர்வுக்காக மட்டுமல்ல ஒட்டு மொத்த பெண்களதும் உயர்வுக்காக அர்ப்பணிப்புடன் உழைத்தவர்.

தமிழினியின் இழப்பு தமிழ்த் தேசத்திற்கு ஈடு செய்யப்பட முடியாத பேரிழப்பாகும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களது அரசியல் விடுதலைக்கான பயணத்தில் தனது 19 ஆவது வயதில் தன்னை இணைத்துக் கொண்ட சிவகாமி என்ற சொந்தப் பெயரைக் கொண்ட தமிழினி விடுதலைப் போராட்டத்தின் இறுதிக்கணம் வரை மக்களின் அரசியல் விடுதலைக்காகவும் பெண்கள், சிறுவர்களது பாதுகாப்பு, முன்னேற்றத்திற்காகவும் உழைத்தார்.

சிறந்த பண்பும், ஆளுமையும் கொண்ட தமிழினி அவர்கள் தமிழ் பெண்களின் தலை நிமிர்வுக்காக மட்டுமல்ல ஒட்டுமொத்த பெண்களதும் உயர்வுக்காக அர்ப்பணிப்புடன் உழைத்தார்.

யுத்த முடிவில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொடுமையான விசாரணைகளுக்கு முகம் கொடுத்து, சிறைவாழ்வு மற்றும் புனர்வாழ்வுக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார். கொடிய புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு17-10-2015 அன்று எம்மை விட்டுப் பிரிந்துள்ளார்.

தமிழினி அவர்களது இழப்பு தமிழ்த் தேசத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். எமது மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்து எம்மை விட்டுப் பிரிந்துள்ள வீரப்புதல்வியின் ஆதமா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவரது பிரிவுக்காக அனைத்து தமிழ் மக்களையும் ஒரு கணம் தலைசாய்க்குமாறு வேண்டுகின்றோம்.

மேலும் அவரது இறுதி வணக்க நிகழ்வுகளிலும் பங்கெடுத்து அவர் தாய் மண்ணுக்கு தனது இளமைக்காலத்தை அர்ப்பணித்து ஆற்றிய பணிக்கு கௌரமளிக் குமாறும் அழைப்பு விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## எமது மண்ணின் பேரிழப்பாகவே தமிழினியின் பிரிவு அமைந்துள்ளது

### பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அனுதாபம்

எமது மண்ணின் பேரிழப்பாக விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் சிவகாமி என்ற தமிழினி எமது மக்களை விட்டு பிரிந்திருப்பது அமைந்திருக்கின்றது என யாழ் மாவட்ட பா.உறுப்பினர். சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மண்ணை பூர்வீகமாகக் கொண்டு மருநிலத்தின் புதல்வியாக அவதரித்து கிளிநொச்சியில் பலரின் கவனத்தையும் தன் பேச்சாற்றல், ஆளுமை என்பவற்றால் பாடசாலைக் காலங்களிலேயே தன் வசப்படுத்தி இந்த நிலத்தை மேன்மை கொள்ள வைக்க வந்த ஒருவராக தமிழினி அவர்கள் அறியப்பட்டார்.இனத்தின் மீதும் மொழியின் மீதும் இவர் கொண்ட தீராத பற்றும் ஆவலும் இவரின் பாடசாலைக் காலங்களிலேயே வெளித்தெரிந்திருந்திருந்தது. உயர்தரம் கற்றுக்கொண்டிருந்த வேளையில் இந்த மண்ணுக்கான விடுதலைப் போராட்ட தேவையை உணர்ந்து 1991 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளில் தன்னை முழுநேர போராளியாக இணைத்துக் கொண்டு எமது மக்களுக்காக தன் உடல் பொருள் ஆவியனைத்தையும் எக்கணத்திலும் அர்ப்பணிக்க துணிந்தவராக இரவு பகலாக போராட்டத்தில் ஈடுபட்டார்.

இவருள் இருந்த பேராளுமையை உணர்ந்துகொண்ட இயக்கத்தின் த்லைமை தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற பெரிய அமைப்பின் மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் என்ற வலிமை மிக்க கடமையை கையளித்தது. இந்த பொறுப்பை மிகவும் செவ்வனே நிறைவேற்றியதை தமிழ் மக்கள் அறிவார்கள்.பெண்களை இந்த மண்ணில் சுதந்திரமுள்ளவர்களாகவும் ஆளுமை மிக்கவர்களாகவும் துணிந்தவர்களாகவும் உருவாக்குவதில் தமிழினி அவர்களுக்கு பெரும் பங்குண்டு.அவரின் மேடைப்பேச்சுக்கள் ஆளுமையானவை.மக்களை விடுதலை அரசியல் மயப்படுத்தும் வலிமை மிக்கவை.அவரின் அரசியல் பணியால் இயககத்தில் இணைந்து கொண்ட போராளிகள் ஏராளமானவர்கள்.எமது சகல மட்டங்களிலும் தமிழினி பணியாற்றினார்.



எமது பெருமைக்குரிய பெண் தமிழினி அவர்களுக்கு என வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றேன் என அவர்தெரிவித்துள்ளார். (இ-7-10)

## தமிழினியின் கனவு நிறைவேற உழைப்போம்

### முன்னாள் எம்.பி.பத்மினி தெரிவிப்பு



தமிழ் பெண்களின் விடிவிற்கு உழைத்த தமிழினி மௌனித்து விட்டார். பெண்கள் ஒடுக்கப்பட்டு அவர்கள் வாழ்வு இருளில் மூழ்கிக் கிடந்ததைக் கண்டு வேதனையுற்று அவர்களின் சுயத்தைக் கட்டியெழுப்பி வலுவுள்ளவர்களாக மாற்ற விரும்பினார். மிகுந்த ஆளுமை நிறைந்த வாசிப்புப் பழக்கம் கொண்ட கம்பீரமான பெண் தமிழினி. பெண்கள் குழந்தைகளுக்கான புதிய உலகைப் படைக்க விரும்பினார். ஆனால்இன்று அவரது மௌனிப்பு பெரும் அதிர்ச்சியில் எம்மை உறைய வைத்து விட்டது.

தமிழ் மக்களின் சமத்துவ வாழ்வு பற்றிய அவர் கனவு நிறைவேற உழைப்பதே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலி எனக் குறிப் பிட்டுள்ளார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெண்கள் விவகாரத் குழுத தலைவியுமான பத்மினி சிதமபரநாதன்.அவர் வெளியிடடுள்ள அறிக்கையில் மேலும் குறிப் பிட்டுள்ளதாவது, தமிழினியை ஒரு அரசியல் செயற்பாட்டாளராக மக்கள் கண்டனர். அந்தத் தேவையும் பெண்கள் மத்தியில் வேண்டப்பட்டது. தமிழினியின் மேடைப் பேச்சுக்களின் செயற்பாடுகளில் அவரின் ஆளுமை தென்பட்டது.

தமிழ் மக்களின் சமத்துவ வாழ்வு பற்றி அவர் கனவு நிறைவேற உழைப்பதே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலி. அவரின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அவருக்கு கௌரவம் அளிக்கப்பட வேண்டும் என அனை வரையும் வேண்டிக்கொள் கின்றேன் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்படைந்த யாழ்.மக்கள் குறைகிறது மதுசார பாவனை

**சமாதான சூழ்நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் சாராயம் மற்றும் சிகரட் பாவனையை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாயங்களை அறிந்த யாழ்.மாவட்ட மக்கள் தொடர்ந்து மக்களை ஏமாற்றமுடியாது என்பதை உணர்த்தியுள்ளனர். இதன்வெளிப்பாடே யாழ்.மாவட்டத்தில் மதுசார பாவனை குறையக் காரணம் என மதுபான மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் (ADIC) விடுத்துள்ள ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**


யாழ்ப்பாணம் என்றாலே நினைவிற்கு வருவது தமிழர்களின் கல்வி முன்னேற்றமும் கலாசார விழுமியங்களுமே. ஆனால் அண்மைக் காலமாக யாழ்ப்பாணம் என்றவுடனேயே போதைப் பொருள பாவனையே நினைவில் வந்தது. காரணம் சமாதான சூழ்நிலையின் பின்னர் சாராயம் மற்றும் சிகரட் கம்பனிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இலக்கு வைத்து மேற்கொண்ட தந்திரோபாயங்கள் காரணமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களை காட்டிலும் வடக்கு, கிழக்கில் சாராயம் மற்றும் சிகரட் பாவனையின் அதிகரிப்பும் அதனோடு தொடர்புபட்ட பிரச்சினைகளும் அதிகரித்தன. ஆனால் தற்போது தொடர்ந்தும் மக்களை ஏமாற்ற முடியாது என்பதை யாழ்.மாவட்ட மக்கள் நிரூபித்துள்ளனர்.


குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 வரை, சாராயம் மற்றும் சிகரட் பாவனைகள் பாரிய அதிகரிப்பைக் காட்டின. கம்பனிகளின் தந்திரோபாயங்களையும் தடுப்பு முறைகளையும்சரியாக விளங்கிக்கொணடு யாழ்.மாவட்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்களின் முயற்சியாலும் 2014 ஆம் ஆண்டு வரையில் சாராயம் மற்றும் சிகரட் பாவனையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை காணக்கூடியதாகவுள்ளது.


யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் அறிக்கையின் படி 2013 ஆம் ஆணடை காட்டிலும் 2014 ஆம் ஆண்டு சாராயம், பியர் மற்றும் வெளிநாட்டு சாராய பாவனையானது இரண்டு மடங்காக குறைவடைந்துள்ளதை அவதானிக்கலாம். கள்ளு பாவனையிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுகின்றது. ஆனால் இது 2008 ஆம் ஆண்டைக் காட்டிலும் பாரிய அதிகரிப்பாக இருந்தாலும் தற்போது மீண்டும் பழைய நிலைக்கு வரக்கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றன. இதேநேரம கடந்த மூன்று வருடங்களாக யாழ்ப்பாணமாவட்டவியாபாரிகள சிகரட் விற்பனையை தவிர்த்து வருவதோடு சிகரட் புகைக்கும் அளவும் குறைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


இந்த மாற்றத்திற்கு அடித்தளமிட்ட அரச நிறுவனங்களாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுசுகாதார பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் அதே போன்று யாழ்.மாவட்ட செயலக கட்டமைப்பின் கீழ்வரும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் சேவைகள் போற்றக்கூடியதாக அமைந்திருந்தது.

இவ்வாறு அனைவரினதும் ஒன்றுபட்ட உழைப்பினால் ஏற்பட்ட மாற்றத்தினை தொடர்ந்தும் வெற்றிப் பாதைக்கு இட்டுச்செல்ல வேண்டுமாயின், தொடர்ந்தும் மதுசார பாவனைகளின் அதிகரிப்பிற்கு அடிப்படையில் காணபடும் காரணிகளை அணுகுவது பொருத்தமானதாக அமையும். அந்த வகையில் பிரதான காரணங்களாக இனங்காணப்பட்டிருக்கும் பின்வரும் காரணிகளை அடிப்படையாக கொண்டு எமது செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவோமாயின் எமது சிறுவர்களையும் இளைஞர்களையும் குறிப்பிட்ட கம்பனிகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வாய்ப்பாக அமையும்.




மதுசார மற்றும் புகைத்தல் கம்பனிகளின் தந்திரோபாயமான ஊடுருவல்களைக் கண்டறிதல், அவற்றைப் பலவீனப்படுத்தல். இந்தியத் திரைப்படம் மற்றும் ஏனைய ஊடகங்களின்வாயிலான விளம்பரங்களின் தாக்கத்தை குறைத்தல்.

மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் போதைப் பொருள் தொடர்பான மூட நம்பிக்கைகளைக்களைதல், போதைப் பொருள் பாவனையாளர்களுக்குக் கொடுக்கப்படும் அங்கீகாரங்களைக் குறைத்தல்.

மேற்குறிப்பிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கவர்ச்சிகரமான செயற்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதுடன் பிரதி பலன்களை மதிப்பிடுவதன் மூலம் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தலாம் என மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம்(ADIC) விடுத்துளள ஆய்வறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## குரங்கு தின்னிக்காய்/ சிந்துக்கொடி

**Botanical Name:** Argyreia Populifolia
**Family:** Convolvulaceae
**Sinh:** Giritilla


பல்லாண்டுகாலம்வாழும் பெரிய ஏறு கொடியாகும். தண்டு சிறிது ரோம அமைப்புக் கொண்டது. ஆனால் பளபளப்பாக இருக்கும். தண்டை ஒடித்தால்பால்வரும். தனியிலைஒன்றுவிட்ட இலையமைப்பு இருதய வடிவானது. கூரிய முனையில் முடியும். இலைக்காம்பு 4.5-10செ.மீ நீளமானது. இலையின் இருபுறமும் பளபளப்பாக (Glabrous) இருக்கும். ஒழுங்கான பூக்கள் இரு பாலானவை. மெல்லிய ஊதா நிற ரோஸ் நிறமானவை. மஞ்சள் நிற 1.5 செ. மீ குறுக்காயுள்ள சதைப்பிடிப்பான பழம். சித்திரை, ஆனி மாதங்களில் பூக்களைக் காணலாம்.

இது இலங்கையில் மட்டும் வளரக் கூடிய மூலிகையாகும். Endemic Species in Sri Lanka இது யாழ் மாவட்டத்தில் இல்லாவிட்டாலும் வன்னிக் காடுகளில் அரிதாகவும் குருநாகல் பிரதேசத்தில் அதிகமாகவும் இயற்கையாக பரம்பிக் காணப்படும்.

இதன் இலைகளும் காய்களும் மருத்துவக் குணம் மிக்கவை.

இதன் தண்டை ஒடித்தால் வரும் பாலை பல் முரசிற்குப் பூசினால் முரசால் வரும் இரத்தம் வடிதல் தடைப்படும். அல்லது இதன் இலைகளை சிறிதாக அரிந்து 1 பங்கிற்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி இக் குடிநீரால் வாய் கொப்பளித்து வர முரசு கரைதல் குணமாகும்.

இதனுடைய வேரை நன்றாக அரைத்து தேங்காய் பாலுடன் சேர்த்து கொதிக்க வைத்து நாய் கடித்த புண்களிற்கு வைத்துக் கட்டலாம். இதனைவிட இதனுடைய இளந் தண்டுகளையும் இலைகளையும் கீரையாகப் பயன்படுத்த லாம். இரத்தத்தை விருத்தி செய்யும் மல பந்தத்தை நீக்கும்.



இதன் காய்களை சாப்பிட்டு வர குடற்புண் நன்றாக ஆறும். இதன் காய்களில் Tannin சத்து காணப் படுவதும் குறிப்பிடத்தக்கது.

இதன் இலைகளை நிழலில் உலர்த்தி அரவல் நொருவலாக்கி தேயிலைப் பொடி போல் பயன்படுத்தி 4 கிராம் தூளுக்கு 150 மில்லி வெந்நீர் விட்டு 5 நிமிடங்கள் ஊற வைத்து அருந்த நீரிழிவு கட்டுப்படும். உடலிற்கு பலத்தையும் கொடுக்கும்.

சிந்துக் கொடி சூப்

சிந்துக் கொடி இலை - 2கப்
தக்காளிப்பழம் - 1
வெங்காயம் (பெரியது) -1
பச்சை மிளகாய்-2
பெருஞ்சீரகத்தூள்- ஒரு தேக்கரண்டி
உப்பு-தேவையானளவு
நல்லெண்ணெய் - ஒரு மேசைக்கரண்டி

பாதி வெங்காயத்தை நறுக்கி பச்சை மிளகாயை கீறி விட்டு தண்ணீரில் உப்பு சேர்த்து கொதிக்கவிடவும். கொதித்தவுடன் சிந்துக்கொடி இலைகளை அரிந்து கழுவி, அதில் போட்டு கொதிப்பிக்கவும். இலைகள் வெந்தவுடன் இன்னொரு பாத்திரத்தில் நல்லெண்ணெய் விட்டு மீதி வெங்காயம் அரிந்த தக்காளி போட்டு பொன் முறுவலானவுடன் பெருஞ் சீரகத்தூள், போட்டு தாளித்து வேகவைத்துள்ள சூப்பில் ஊற்றவும். மிகவும் சத்துள்ள சூப்பாகும். எல்லா வயதினரும் இதனைப்பயன்படுத்தலாம்.

சிந்துக்கொடி அடை

தேவையான பொருட்கள்
சிவத்தப்பச்சரிசி மா
சீரகத்தூள்
சிறிதாக அரிந்த சிந்துக் கொடி இலை
உப்பு- தேவையான ளவு
நெய்- தேவையான ளவு
தோய்மூடி-1/2

சிவத்தப்பச்சரிசி மாவுடன் துருவிய தேங்காய்ப் பூவை சேர்த்து உப்பு சேர்த்து நீர்விட்டு பிசைந்து சீரகத்தூளையும் அரிந்த இலைகளையும் சேர்த்து நன்றாக சேரும்படி குழைத்து அடையாகத் தட்டி நெய்யில் போட்டு பொரித்து எடுத்துச் சாப்பிடவும். சிறந்த ஊட்டச்சத்துள்ள உப உணவாகவும் அமையும். உடலுக்கு பலத்தையும் இரத்த விருத்தியையும் உண்டு பண்ணும்.


இதன் இலைகள் தண்டுகளை நிழலில் உலர்த்தி பொடித்து உலர்ந்த புதினா இலைகளையும் சேர்த்து பொடித்து அரித்து வைத்துக்கொண்டு பற்பொடி போல் பயன்படுத்திவர முரசு கரைதல் நீங்கி பல்லீறுகள் பலப்பட்டு பற்களும் வெண்மையாக வரும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். பிரதமர் நவாஸ் ஷெரீப்பை கொலை செய்ய இந்தியா முயற்சி

## பாகிஸ்தான் உளவுத்துறை எச்சரிக்கை



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை கொலை செய்ய இந்திய உளவு அமைப்பான றோ முயற்சித்து வருவதாகவும், அதற்காக தனது ஏஜன்ட்கள் சிலரை பாகிஸ்தானிற்குள் றோ அனுப்பி இருப்பதாகவும் பாகிஸ்தான் உளவுத்துறை அந்நாட்டு அரசை எச்சரித்துள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் உள்துறை நிர்வாகம் சார்பில் சுற்றறிக்கை ஒன்று சமீபத்தில் அனுப்பப்பட்டுள்ளது. அதில், பிரதமர் ஷெரீப்பின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும், அதனால் நாடு முழுவதும் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்த சுற்றறிக்கையில், இந்திய உளவு அமைப்பான றோ, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பையும், ஜமாத் உத் தவா அமைப்பின் தலைவர் ஹபீஸ் முகம்மது சயீத் ஆகியோரை கொலை செய்ய திட்டமிட்டுள்ளது. இதனால் பாகிஸ்தான் முழுவதிலும் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும்.

சமீப காலமாக லக்ஷர் இ ஜாங்வி, தஹ்ரிக் இ தலிபான் போன்ற அமைப்புக்கள் நடத்தி வரும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுக்க றோ திட்டமிட்டுள்ளது. இதற்காக பயிற்சி பெற்ற குழுக்களை சேர்ந்த ஏஜன்ட்களை ஏற்கனவே பாகிஸ்தானுக்குள் றோ அனுப்பி உள்ளது. ஹபீஸ் சயீத் பஞ்சாப்பில் இருப்பதற்கான அனைத்து சாத்தியக்கூறு ஆவணங்களையும் றோ திரட்டி வைத்துள்ளது. பிரதமர் நவாஸ ஷெரீப், ஜமாத் உத்-தவா தலைவர் ஹபீஸ் முகமது சயீத் ஆகியோரை கொன்று நாடு முழுவதும் பெரும் குழப்பத்தை விளைவிக்க இந்திய உளவுத்துறை திட்டம் தீட்டி வருகிறது. இதனால் சம்பந்தப்பட்ட துறைகள் அனைத்தும் விழிப்புடன் இருக்க வேண்டும். பாதுகாப்பு பணிகளை தீவிரப்படுத்தவேண்டும். இவ்வாறு அந்த சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பயங்கரவாதிகளின் புகலிடமாக தங்கள் நாடு இருப்பதை மறைக்கவே பாகிஸ்தான் இதுபோன்ற குற்றச்சாட்டை எழுப்பியுள்ளதாக இந்தியா தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (3-7)

# முகத்திரைக்குத் தடை ஐ.எஸ்ஸில் பெண்கள் ஆய்வில் அதிர்ச்சி

பிரான்ஸ் நாட்டில் இஸ்லாமிய பெண்கள் முகத்திரை அணிவதற்கு சட்டபூர்வமாக தடைவிதித்திருப்பதன் மூலம் அந்நாட்டு அரசு தீவிரவாதத்தை மறைமுகமாக வளர்த்து வருவதாக தற்போது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பிரான்ஸ் நாட்டில் நிக்கோலஸ் சர்கோஸி ஜனாதிபதியாக இருந்த போது 2010ம் ஆண்டில் இஸ்லாமிய பெண்கள் நிகாப் எனப்படும் முகத்திரை அணிய சட்டபூர்வமாக தடை செய்யப்பட்டது.

இந்த சட்டத்தை மீறும் இஸ்லாமிய பெண்களுக்கு 150 யூரோ அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தி தற்போது 5 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், அரசின் சட்டமானது வெற்றிகரமாக செயற்பட்டு வருகிறதா என கடந்த சில ஆண்டுகளாக பேராசிரியவர் ஒருவர் ஆய்வில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இது குறித்து அண்மையில் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில், இஸ்லாமிய பெண்களின் மதம் தொடர்பான நம்பிக்கை மற்றும் உரிமைகளை பறிக்கும் இந்த சட்டம் மிக மோசமான தோல்வியை சந்தித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

தேர்தலில் பிரான்ஸ் நாட்டு மக்களின் வாக்குகளை பெறுவதற்காகவே 2010ஆம் ஆண்டில் முகத்திரைக்கு எதிரான சட்டம் கொண்டு வரப்பட்டது.

இதனை பெரும்பாலான பிரான்ஸ் குடிமக்களும் வரவேற்றனர். ஆனால், பிரான்ஸ் அரசு திட்டமிட்டதற்கு எதிரான தாக்கத்தை தான் இந்த முகத்திரை தடை தற்போது ஏற்படுத்தி வருகிறது. பிரான்ஸ் நாட்டை சேர்ந்த 137 பெண்கள் ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் இணைந்து சிரியாவில் போராடி வருவதாக அரசு கடந்த வருடம் தெரிவித்திருந்தது.

தீவிரவாத இயக்கத்தில் தங்களை இணைத்துக்கொண்டதற்கு முகத்திரை அணிவதற்கு தடை விதிக்கும் பிரான்ஸ் அரசின் சட்டமும் ஒரு காரணம் தான் என சிலர் தெரிவித்துள்ளது அவர்களை எந்தளவிற்கு இந்த சட்டம் பாதித்துள்ளது என்பதை காட்டுகிறது.

பொது இடங்களில் இஸ்லாமிய பெண்கள் முகத்திரை அணிந்துவரும் போது அவர்களை தடுத்து நிறுத்தி விசாரணை நடத்துவதால், அவர்களை அவமதிப்பது மட்டுமல்லாமல் அவர்களுக்கு முழு சுதந்திரத்தை பிரான்ஸ் அரசு வழங்க மறுக்கிறது.

இதன் விளைவாக, அரசிற்கு எதிர்ப்பை காட்டும் வகையில் முகத்திரை அணியாத பெண்களும் கூட, 2010ம் ஆண்டிலிருந்து முகத்திரை அணிந்து அரசிற்கு எதிர்ப்பை காட்டி வருகின்றனர். பொலிசார் தடுத்து நிறுத்தினால், 150 யூரோ அபராதத்தை மகிழ்ச்சியாக செலுத்திவிட்டு மீண்டும் முகத்திரை அணிவதையே அவர்கள் விரும்புகின்றனர்.

உதாரணத்திற்கு, 2010ம் ஆண் லிருந்து முகத்திரை அணிந்திருந்த இஸ்லாமிய பெண்களை பொலிசார் 1,623 முறை தடுத்தி நிறுத்தியுள்ளனர். மேலும், 1,546 முறை 150 யூரோ அப ராதம் செலுத்தப்பட்டது. ஆனால், பொலிசார் தடுத்து நிறுத் தியது வெறும் 908 இஸ்லாமிய பெண்கள் மட்டுமே.


அதாவது, அபாரதம் செலுத்திய பிறகும் அரசிற்கு எதிர்ப்பை காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் அபராதம் செலுத்தியவர்கள் தான் அடுத்தடுத்து பொலிசாரிடம் சிக்கியுள்ளனர். ஒரே இஸ்லாமிய பெண்ணிடம் 33 முறை அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதை பார்க்கும்போது, அவருக்கு அபராத தொகையை விட அரசிற்கு தனது எதிர்ப்பை காட்ட வேண்டும் என்பதை தான் அவசியமாக கருதியுள்ளார்.

மேலும், இஸ்லாமிய பெண்களை பொது இடங்களில் தடுத்து நிறுத்துவதால், பொலிசாருக்கும் இஸ்லாமிய வாலிபர்களிடையே வெறுப்புணர்வு மட்டுமே மேலோங்கியுள்ளது.

2013ஆம் ஆண்டில் இதுபோன்ற ஒரு நிகழ்வின்போது பொலிசாருக்கும் இஸ்லாமிய மக்களுக்கும் இடையே 3 நாட்கள் கலவரம் ஏற்பட்டது ஒரு உதாரணம் என பேராசிரியர் அந்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய பெண்கள் முகத்திரை அணிவதற்கு பலவிதங்களில் எதிர்ப்புகள் தொடர்ந்தாலும் கூட, பிரான்ஸ் விதித்துள்ள முகத்திரை தடைக்கு 2014ம் ஆண்டில் ஐரோப்பிய மனித உரிமைகள் சபையும் ஆதரவு தெரிவித்துள்ளது தான் மிகவும் துரதிர்ஷ்டவசமானது. (3-7)

# ஆற்றுக்குள்ளிருந்து வெளிவரும் அதிசய ஆலயம்




மெக்சிக்கோவில் 400 ஆண்டுகளுக்கு முந்தைய மக்களே மறந்துபோன தேவாலயம் ஒன்று, ஆற்றுக்குள் இருந்து வெளியே வந்துள்ளது. இந்நாட்டின் நெசஹுவால்கோயோட்ல் நீர்த்தேக்கத்தில் வறட்சியால் எண்பத்து இரண்டு அடிக்கு நீர் குறைந்து போனது. பதினாறாம் நூற்றாண்டின் மத்தியில் ப்ரெய்ர் பார்ட்டோலோம் டி லா கஸாஸ் என்கிற பாதிரியாரின் தலைமையில் இப்பகுதியைச் சேர்ந்த ஸோக் மக்களால் 183 அடி உயரமுள்ள இந்த தேவாலயம் கட்டப்பட்டதாக தெரியவந்துள்ளது. தற்போது வெளியே வந்துள்ள இந்தத் தேவாலயத்தைக் காண மக்கள்கூட்டம் அலைமோதுகின்றது.

# திருடன் - பொலிஸ் விளையாட்டில் தம்பியை சுட்டுத் தள்ளிய அண்ணன்

## அமெரிக்காவில் தொடரும் பயங்கரம்



(சிகாகோ)

அமெரிக்காவில் பொதுமக்களிடையே சர்வ சாதாரணமாக துப்பாக்கிகள் புழக்கத்தில் உள்ளன. இது அவ்வப்போது குழந்தைகளின் கையில் சிக்கி பெரும் விபரீதத்தை ஏற்படுத்தி வருகிறது. அப்படி ஒரு சம்பவம் மீண்டும் நடந்து அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சிகாகோ நகரில் வசித்து வருபவர் மிக்கேல் சான்டியாகோ. இவருக்கு 6 மற்றும் 3 வயதில் 2 மகன்கள் இருந்தனர். மிக்கேல், சட்ட விரோதமாக கைத்துப்பாக்கி வாங்கி வைத்திருந்தார்.

குழந்தைகள் இருவரும் வீட்டில் 'திருடன் பொலிஸ்' விளையாட்டு விளையாடிக்கொண்டு இருந்தனர. இதில் இளையவன் இயானை அண்ணன் விரட்டி சென்று கொண்டிருந்தான். அப்போது தந்தையின் துப்பாக்கி, குளிர்சாதனப்பெட்டியின் மேல் இருந்தது.

இதைப்பார்த்த அவன், அந்த துப்பாக்கியை எடுத்து திடீரென தம்பியை பார்த்து சுட்டான். இதில் அவனது தலையில் குண்டு பாய்ந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த பெற்றோர், இயானை சிகாகோ மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால் அங்கு இயான் பரிதாபமாக உயிரிழந்தான்.

இந்த சம்பவம் தொடர்பாக மிக்கேல் சான்டியாகோ கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். தான் ஏற்கனவே ரவுடி கும்பலில் பணியாற்றி இருந்ததால், தற்காப்புக்காக இந்த துப்பாக்கியை வாங்கி வைத்திருந்ததாக விசாரணையின் போது மிக்கேல் கூறியுள்ளார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடூரப் புயலைத் தாக்குப் பிடிக்குமா இந்தக்குடை


© AFP/Getty Images


பிலிப்பைன்ஸ் நாட்டை தாக்கிய கோப்பு புயலால் குறைந்தது 9 பேர் பலியாகியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் 23 ஆயிரம் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கடந்த 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 'ஹையான்' புயல் தாக்கியபோது, பல நகரங்கள் உருக்குலைந்து போயின. இதில் 7 ஆயிரத்து 500 பேர் பரிதாபமாக உயிரிழுந்தனர்.

இந்த நிலையில், பிலிப்பைன்ஸ் நாட்டை நேற்று முன்தினம் கோப்பு புயல் தாக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, நேற்று முன்தினம் இந்த புயல், பிலிப்பைன்ஸ் நாட்டின் முக்கிய தீவான லூஸான் தீவில் உள்ள கசிகுரான் நகரை தாக்கியது. அப்போது அங்கு மணிக்கு 210 கி.மீ. வேகத்தில் சூறாவளி வீசியதால் அங்கு பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் வீதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. (3-7)

# புதிய கட்டுப்பாடுகளால் சிக்கி தவிக்கும் அகதிகள்

**ஐரோப்பிய எல்லைகளில அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கட்டுப்பாடுகளால ஆயிரக்கணக்கான அகதிகள் சிக்கித்தவிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**



வறுமை மற்றும் போர் காரணமாக மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைய படையெடுத்து வருகின்றனர்.

இந்த ஆண்டும் மட்டும் ஐரோப்பாவுக்குள் 5 இலட்சம் அகதிகள் நுழைந்துள்ளதால், தற்போது எல்லைகளில் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதனால் ஸ்லோவேனியா மற்றும் குரோஷியாவுக்கு இடையிலான, எந்த நாட்டின் கட்டுப்பாட்டிலும் இல்லாத பகுதியில், மழை மற்றும் கடுங்குளிரில், தங்க இடமில்லாமல், குழந்தைகள் உட்பட பல குடும்பங்கள் சிக்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

எண்ணிக்கையே இல்லாமல் அகதிகளை ஏற்றுக்கொண்டே இருக்கமுடியாது என நேற்று முன்தினம் ஸ்லோவேனியா அறிவித்ததையடுத்து, பால்கன் பகுதி நாடுகளுக்கு செல்லும் பாதையில் இந்த தாமதங்கள் ஏற்பட்டுள்ளது.

மேலும் குரோஷியாவுக்கு தெற்கே உள்ள சேர்பியாவில் அகதிகள் நிரம்பிவழிகின்றனர், இதனால் அகதிகளுக்கும் பல மணி நேரங்களாக பணிபுரிந்து வரும் பொலிஸாருக்கும் இடையே சண்டைகள் நடைபெறுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.(3-7)

# ஈரான் பொருளாதாரத்தடை நீக்கத்திற்கு ஒபாமா ஓடர்

(நியூயோர்க்)

ஈரானுக்கும், வளர்ச்சியடைந்த, 6 நாடுகளுக்கும் (அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் ஜேர்மனி) இடையே, நடைபெற்று வந்த அணு ஒப்பந்தம் குறித்து தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக நடந்த பேச்சுவார்த்தை, கடந்த ஜுன் மாதம் 14ஆம் திகதி ஏற்பட்ட ஒப்பந்தத்தால் முடிவுக்கு வந்தது.

அமெரிக்கா தலைமையிலான நாடுகளுக்கு இடையிலான ஈரானின் அணுசக்தி ஒப்பந்தத்திற்கு அந் நாட்டு பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் ஈரானுக்கும் அமெரிக்காவிற்குமான உறவு மேம்பட்டுள்ளது.

இதனை அடுத்து ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடை நீக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஒபாமா உத்தர விட்டுள்ளார். (3-7)

# குண்டு வெடிப்பில் 10 பேர் பலி

(குவெட்டா)

பாகிஸ்தானின் குவெட்டா பகுதியில் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த பேருந்தில் வெடிகுண்டு வெடித்ததில் 10 பேர் உயிரிழந்தனர். குழந்தைகள் உட்பட 20-க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். வெடிகுண்டு விபத்து நடந்தபோது 40 பயணிகள் பேருந்தில் இருந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அருகில் உள்ள குவெட்டா சிவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு பலோசிஸ்தான் முதல்வர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (3-7)

# இந்தோ. காட்டுத்தீயில் சிக்கி மலையேறிகள் 7 பேர் மரணம்

(அகர்தா)


இந்தோனேசியாவில் வறட்சி காலங்களில் அடிக்கடி காட்டுத்தீ ஏற்பட்டு பெரும் சேதத்தை விளைவித்து வருகிறது. குறிப்பாக அங்குள்ள ஜாவா தீவில் உள்ள வறண்ட மலையான லாவுவில் அடிக்கடி காட்டுத்தீ பரவி வருகிறது. இதனால் இந்த மலையில் ஏறுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திடீரென காட்டுத்தீ பரவியது. அப்போது 9 மலையேற்ற வீரர்கள் இந்ததீயில் சிக்கினர். இதில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 2 பேர் படுகாயமடைந்தனர்.

இது குறித்து தகவல் அறிந்ததும் மீட்புக்குழுவினர் அங்கு சென்று, காயமடைந்த 2 பேரையும், உயிரிழந்தவர்களின் உடலையும் மீட்டு வந்தனர்.

இந்த மலைக்கு செல்வதற்கான வழிகள் அனைத்தும் அடைக்கப்பட்டு உள்ள நிலையில், இந்த வீரர்கள் 9 பேரும் மாற்றுப்பாதைகள் வழியாக சென்றிருக்கலாம் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மேலும் மலையில் அவர்கள் தீமூட்டி விட்டு, சரியாக அணைக்காமல் விட்டிருக்கலாம் எனவும், அதனால் தீ பரவியிருக்கலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (3-7)


© EPA

ஜேர்மனியை குழப்பத்திற்கும் அழிவுக்கும் இட்டுச் செல்ல வேண்டாம் என வலியுறுத்தி அகதிகளுக்கு தஞ்சமளிப்பதற்கு எதிரான அமைப்பு ஜேர்மனியில் நடத்திய பேரணியில் 40 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைச்சலை அதிகரிக்கும் நெல் நாற்றுநடும் இயந்திரம்

பின்னர் இறுக்கப்பட்ட தடிகளின் நிலமட்டத்திலிருந்து 1"(அங்குலம்) உயரத்திற்கு நன்கு இறுக்கமாக கயிற்றினை சுற்றிக் கட்டிய பின்னர் கட்டப்பட்ட கயிற்றின் வெளிப்புறமாக வேறு தடிகளையும் நீள் சதுரமாக இறுக்கி கயிற்றின் மட்டம் வரை இருக்கக் கூடியவாறு பேணுதல் வேண்டும். பின்னர் 21/2 (அடி)அகலமான பொலித்தீனை எடுத்து கட்டப்பட்ட கயிற்றின் உள் போடுவதன் மூலமாகவும் பொலித்தீனின் எஞ்சிய பகுதியை கட்டப்பட்ட கயிற்றின் வெளிப்புறமாக எடுத்து விடுவதன் மூலமாகவும்ஓர் நீர்த் தொட்டி போன்ற அமைப்பினை ஏற்படுத்த முடியும். தற்போது உருவாக்கிய தொட்டி போன்ற அமைப்பின் உயரம் 1"(அங்குலம்) அளவானதாகக் காணப்படும்.


வயலிலுள்ள சேற்றினை நன்கு கையினால் பிசைந்து கூழாக்கி மேடையில் இட்டு கையினால் மட்டப்படுத்துதல் வேண்டும். பின்னர் முளை கட்டி தயாராக வைக்கப்பட்டிருந்த விதை நெல்லினை 1 சதுர அடிக்கு 100g என்னும் அளவில் விழக் கூடியவாறு மேடையில்கையினால்ஒன்றன் மேல் ஒன்று விழாதவாறு இடுதல் வேண்டும். இவ்வாறாக விதையிடல் மேற்கொண்ட பின்னர் கையினால் மட்டப்படுத்தி பின்னர் வைக்கோல் அல்லது கிடுகினால் மேடையினை இரண்டு நாட்கள் மூடிவிடுதல் வேண்டும். இரண்டு நாளின் பின்னர் வைக்கோல் அல்லது கிடுகினை எடுத்து விடலாம.

4 ஆம் நாளில் பயிர் மஞ்சள் நிறமாகத் தென்பட்டால் 01 பூவாளிக்கு 01 தீப்பெட்டி அளவில் யூரியாவினைக்கரைத்துமேடையை நனைத்தல் வேண்டும். வயலிலேயே மேடை அமைந்துள்ளமையால் எந்த நேரமும் ஈரலிப்பாகக் காணப்படும். இருப்பினும் மேடையில் வெடிப்புத் தென்படுமாயின் அது மேடைக்கு நீர்ப்பற்றாக்குறை என்பதற்கான அறிகுறியாகும். எனவே பூவாளியினால் நீர் ஊற்றுதல் வேண்டும். இவ்வாறாக 14 நாட்கள் வரை பராமரித்த பின்னர் நாற்று நடுகைக்கு பயன்படுத்த முடியும்.14 நாட்களின் பின்னர் பயிரின் உயரம் 4அங்குலம் ஆகக் காணப்படும்.

### நாற்று நடல்

நிலப் பண்படுத்தல்,நாற்று மேடை தயாரிப்பு என்பன சிறப்பாக அமையும் போது நாற்று நடுகையானது வெற்றியளிக்கும். நாற்று நடும் இயந்திரமானது 4 நாற்று நடும் அலகுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு அலகிற்கும் இடைப்பட்ட இடைவெளியானது 1 அடி ஆகக் காணப்படும். இவ் இடைவெளி நாட்டப்படவுள்ள பயிர்களின் நிரல்களிற்கான இடைவெளியினைக் குறிக்கின்றது. அதேவேளை நிரல்களிலுள்ள பயிர் கட்டு இடைப்பட்ட இடைவெளி பயிரின் இனத்திற்கேற்ப மாற்றம் செய்து கொள்ளக் கூடியதாக நாற்று நடும் இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நாற்று நடுகையானது அதற்கென தயார் செய்யப்பட்ட வயல்களிலேயே நடுகைசெய்யப்படுகின்றது. நடுகை செய்யபப்படவுள்ள அல்லது நடுகைக்கு தயாராகவுள்ள வயல் நிலமானது நன்கு மட்டப்படுத்தப்பட்டதாக இருத்தல் அவசியமாகும். கையினால் மட்டப்படுத்தலானது சிறப்பானது. இதற்காக மட்டப்பலகை பயன்படுத்தப்படுகின்றது. இதனைவிட முட்கலப்பையில் மட்டப்பலகையினை




பயன்படுத்தியும் மட்டப்படுத்தல் மேற்கொள்ள முடியும்.

நாற்று நடும் போது வயலில் 1 அங்குலம் அளவில் நீர் மட்டம் பேணப்படுதல் வேண்டும். அதே வேளை நடுவதற்கு தயாரான வயலை இனங்கண்டு உறுதிப்படுத்துவதற்காக பண்படுத்திய நிலத்தில் காலை ஊன்றும் போது காலினால் ஏற்படுத்தப்பட்ட பள்ளத்தினை சேறானது மூடுதல் கூடாது. அதாவது காலின் அடையாளம் அப்படியே இருத்தல் வேண்டும். அவ்வாறாக உள்ள நிலமே நாற்று நடுவதற்கு பொருத்தமானதாகும்.

நாற்று மேடையினை 2 அடி நீளமான 1 அடி அகலமான கீலங்களாக வெட்டி நாற்று நடும் உபகரணத்தினுள் வைத்து நாற்று நடலானது மேற்கொள்ளப்படுகின்றது.

வயலில் நாற்று நடும் இயந்திரத்தின்மூலம் நாற்று நடும் போது "சிக்சாக்" முறையில் நாற்றுநாட்டப்படல் வேண்டும். இவ்வாறான நடுகையின் மூலமாக வயலில் வரம்புக்கரைகளிலும் இடைவெளி இன்றி நடுகை மேற்கொள்ள முடியும்.



இவ்வாறாக நாற்று நடப்பட்ட வயலில் வரிசையில் நாற்றுக்கள் காணப்படுவதால் களை கட்டுப்படுததும் உபகரணத்தின் மூலமாக முற்றாக களையினைக் கட்டுப்படுத்த முடியும். நாற்று நடும் இயந்திரத்தின் மூலமாக ஸ்தாபித்து 30 நாட்களிற்குள் களை கட்டுப்படுத்தப்படுகின்றது.

நாற்று நடுவதன் மூலமாக விளைச்சலானது 30 வீதத்தினால் அதிகரிக்கப்படுவதுடன் உற்பத்திச்செலவும் குறிப்பிடக்கூடியளவு குறைக்கப்படுகின்றது. நெற் செய்கையில் விவசாயிகள் எதிர் நோக்கும் பாரிய பிரச்சினையான கட்டுப்படுத்த முடியாத களைகளுக்கு ஒரு சிறந்த தீர்வாக நாற்று நடும் இயந்திரத்தின் மூலமான நாற்று நடுகை அமையும் எனக் கூற முடியும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த இரண்டு போகமாக இவ்வியந்திரத்தின் பாவனையினை விவசாயிகள் மத்தியில் விவசாயத் திணைக்களமானது அறிமுகம் செய்துள்ளது. இதன் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாண்டியன்குளம், அம்பலப் பெருமாள், துணுக்காய், முள்ளியவளை, குமுழமுனை, புதுக்குடியிருப்பு போன்ற விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் செய்முறைத் துண்டங்கள் வெற்றி பெற்றதுடன் விவசாயிகள் மத்தியில் மிகுந்த வரவேற்பையும் பெற்றுள்ளது. விவசாயத் திணைக்களத்தினால் 2015 கால போகத்தில் நாற்றுநடுகை இயந்திரத்தின் மூலமாக 100 ஏக்கர் வரை நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே விவசாயிகள் நாற்று நடும் இயந்திரம் மூலமாக நாற்று நடும் போது நெற் செய்கையில் எதிர் நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். எனவே நெற் செய்கையாளர்கள் நாற்றுநடும் இயந்திரத்தினைப் பயன்படுத்த முன்வருதல் வேண்டும். இவை தொடர்பான மேலதிக தகவல்கள் ஏதாவது தேவைப்படின் அருகிலுள்ள விவசாயப் போதனாசிரியரிடம் தொடர்பு கொள்ளவும்.

அத்துடன் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் இவற்றிற்கான பயிற்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதில் ஆர்வமுள்ள விவசாயிகள் கலந்து கொள்ளலாம்.

நெற் செய்கையில் 1 ஏக்கரிற்கு நாற்று நடுகைக்கான கூலியாட் தேவை 15 ஆகும். ஆனால் நாற்று நடும் இயந்திரத்தின் மூலமாக நாற்று நடும் போது 2 கூலியாட்கள் மட்டும் போதுமானதாகும். அத்துடன் 01 ஏக்கரிற்கான நாற்று நடுகைக்கான இயந்திரத்திற்கு தேவையான பெற்றோல்(எரிபொருள்) 1.5 லீற்றரே ஆகும. முல்லைத்தீவு மாவட்டத்தில் பொருத்தமான 2 ஏக்கர் வயலில் சேற்று விதைப்பு மேற்கொள்வதற்கான செலவு ரூபா முப்பத்தெட்டாயிரம் என மதிப்பிடப்படுகின்றது. நாற்று நடும் இயந்திரத்தை பயன்படுத்தி நாற்று நடுவோமாயின் செலவு 01 ஏக்கருக்கு ரூபா பத்தாயிரம் குறைகின்றது. நெற்பயிரின் வளர்ச்சிக்கான போதிய இடைவெளி கிடைப்பதுடன் உணவு, நீர் என்பனவற்றிற்கான போட்டி குறைக்கப்படுவதுடன் போதியளவு சூரிய ஒளி நெற்தாவரத்திற்கு கிடைப்பதன் காரணமாக முழுமையான ஒளித்தொகுப்பின்மூலம் வீரியமாக நெற்தாவரங்கள் வளர்வதுடன் நெல் மணிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. இதனால் நெல்லின் விளைச்சலானது 30%அளவில் அதிகரிக்கின்றது.

இவ்வாறாக நாற்று நடலின் மூலமாக பெறப்பட்ட நெல்லினை அடுத்தடுத்த போகங்களில் விதை நெல்லாகவும் பயன்படுத்த முடியும். களைகட்டும் உபகரணத்தின் மூலமாக களைக்கட்டுப்பாடு மேற் கொள்வதனால் முற்றாக களை கட்டுப்படுத்தப்படுவதுடன் களை விதையானது நெல்லுடன் கலப்பதற்கான சந்தர்ப்பம் தவிர்க்கப்படுகின்றது.

நாற்றுநடும் இயந்திரப் பாவனையானது கண்டச் செய்கையின் (யாய)ஒரு அங்கமாக விளங்குகின்றது. சரியான நீர் முகாமைத்துவத்துடன் செலவினைக் குறைத்து மண்ணை வளப்படுத்துவதுடன் உயர் விளைச்சலைப் பெறுவது இதன் நோக்கமாகும். இவ் யாய செய்கையானது குறிப்பிட்ட நீர்ப்பாசனம் ஒன்றின் கீழ் குறித்த அளவான நிலப்பரப்பை தெரிவு செய்து ஒரே நேரத்தில் ஒரே வயதுடைய நெல்லினை செய்கை பண்ணும் ஒரு செய்கை முறையாகும். நீர்ப்பாசனத்தின் தன்மையினைப் பொறுத்து தெரிவு செய்யப்படும் நிலப்பரப்பு, விவசாயிகளின் எண்ணிக்கை என்பன வேறுபடுகின்றன. சிறு நீர்ப்பாசனத்திற்கான பயனாளிகளின் எண்ணிக்கை, நிலத்தின் அளவு என்பன பெரிய நீர்ப்பாசனத்துடன் ஒப்பிடும்போது வேறுபட்டதாகக் இருக்கும்.

கண்டச் செய்கையின் (யாய)மூலமாக விளைச்சல் அதிகரிக்கப்பட்டதுடன் மண் வ்ளமும் பேணப்படுகின்றது. அத்துடன் ஒரே நேர பயிர்ச் செய்கை என்பதனால் பூச்சி பீடைகளின் குடித்தொகை அடர்த்தியும் குறைக்கப்படுகின்றது. இதனால் பூச்சி பீடை தாக்கத்தின் தன்மை குறைககப்படுகின்றது. அத்துடன் நீரானது வினைத்திறனாக பயன்படுத்தப்படுவதன் காரணமாக நெற் செய்கையின் போக எண்ணிக்கையினைக் அதிகரிக்கக் கூடியதாக உள்ளது. சிறந்த விதை நெல்லினைப் பயன்படுத்துவதன் காரணமாக அடுத்த போகங்களுக்கான விதைநெல் தேவையானது பூர்த்தி செய்யப்படுகின்றது. நெற் செய்கையில் விவசாயிகளால் எதிர்நோக்கப்படும் கூலியாட் பிரச்சினையானது தீர்க்கப்படுவதுடன் இக்கால இளைஞர்களின் அவதானத்தையும் பெற்ற விவசாயமாக மாற்றப்படுகின்றது.

மேலும் நெல் உற்பத்தியில் ஓர் அலகிற்கான உற்பத்திச் செலவினைக் குறைக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது. வெற்றிகரமான கண்டச்செய்கைக்கு(யாய) செய்கைக்கு பின்வரும விடயங்களில் கவனம்செலுத்துதல் வேண்டும்.

1. மழையுடன் நிலம் பண்படுத்தலை ஆரம்பித்தல் வேண்டும.
2. தெரிவு செய்யப்படும் கண்டத்தில்(யாய) எல்லா கண்டமும் (யாய) ஒரே மாதிரியான செய்கையாக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நிலப்பண்படுத்தல் அவசியமானது.
4. பொருத்தமான விதை நெல்லின் தெரிவும் அதன் வயதும் மிக முக்கியமானது.
5. மண்ணின் போசனையினை அதிகரித்தல் முக்கியமானது.
   - சேதனப்பசளைப்பாவனை
   - மண் பரிசோதனை
   - மண்ணின் தேவைக் கேற்ப இரசாயனப் பசளை

| | ஆகக் குறைந்த விவசாயிகள் | விஸ்தீரணம் (ஏக்கர்) | ஏதிர்பார்க் கப்படும் விளைச்சல் |
|---|---|---|---|
| பெரிய நீர்ப்பாசனத்தின் கீழான யாய செய்கை | 10 | 25 | 144புசல்/ஏக்கர் |
| சிறிய நீர்ப்பாசனத்தின் கீழான யாய செய்கை | 10 | 20 | 120புசல்/ஏக்கர் |

6. நாற்று நடும் இயந்திரம் மூலம் நெற்செய்கையை ஸ்தாபித்தல்
7. களை கட்டுப்படுத்தும் கருவி மூலம் ஒருங்கிணைந்த களை கட்டுப்பாட்டு முறைகள்
8. சிறப்பான நீர் முகாமைத்துவம்
9. ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாடு
10. பயிரிடும் போக எண்ணிக்கையினை அதிகரித்தல்
11. பயிர்ப் பல்வகைமை
12. அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம்.

பண்ணை இயந்திரங்களின் பாவனையை ஊக்குவிக்கும் முகமாக மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியிலிருந்து இவ்வாறான இயந்திரங்களை கொள்வனவு செய்து பயனாளிகளுக்கு வழங்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் நெற் செய்கையில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம்.

அன்பான விவசாயப் பெருமக்களே மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொணடு நெற் செய்கையில் முழுமையான பயனை பெற்றுக் கொள்ளுங்கள்.

(முற்றும்)

பொ.அற்புதச்சந்திரன்
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்
அ.கபிலன்
பாடவிதான உத்தியோகத்தர் (நெல் மற்றும் பண்ணை இயந்திரம்) முல்லைத்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு நட்டாடு வழங்க வேண்டும்!

(கொழும்பு)

**இலங்கை சிறைச்சாலைகளில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து நட்டஈடு வழங்குமாறு டீசண்ட் லங்கா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பினரால் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கான அறிக்கை ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் அரசியல் கைதிகளில் பெரும்பாலானவர்கள் மிக நீண்ட காலமாக எதுவித குற்றச்சாட்டுகளும் அற்ற நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இதன் காரணமாக அவர்களின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், குடும்பத்தினரும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

நீதிமன்றக் கட்டமைப்பின் ஊடாக குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்படும் நபர்களைத்தவிர ஏனையோரை இவ்வாறு தடுத்து வைத்திருப்பதற்கு அரசாங்கத்திற்கு எதுவித அருகதையும் கிடையாது.

எனவே குற்றச்சாட்டுகள் உள்ள கைதிகளை இரண்டு வார காலத்திற்குள் ஜனாதிபதி உறுதியளித்தபடி நீதிமன்றத்தில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குற்றச்சாட்டுகள் இல்லாத கைதிகளை உடனடியாக விடுதலை செய்யநடவடிக்கைஎடுக்க வேண்டும். அவ்வாறு விடுதலை செய்யப்படுவோருக்கு அவர்கள் சிறைகளில் கழித்த காலத்தைக் கணக்கிட்டு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

மேலும் அவர்கள் சமூகத்துடன் இணைந்து வாழக் கூடிய ஏற்பாடுகளையும் அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும் என்றும் டீசண்ட் லங்கா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

டீசண்ட் லங்கா அமைப்பானது சட்டத்தரணிகள் மற்றும் ஊடகவியலாளர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள ஒரு அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# டிஜிட்டல் என்றால் என்னவென்றே எனக்குத் தெரிந்திருக்கவில்லை

## அமைச்சர் ஹரின்

(கொழும்பு)

டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சுப் பதவி கிடைக்கும் வரை டிஜிட்டல் என்றால் என்னவென்றே தனக்குத் தெரிந்திருக்கவில்லை என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மொனராகலை, வெல்லவாய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக நமது பிரதேசத்தில் எப்போது மழை பெய்யும், காலநிலை எவ்வாறு இருக்கின்றது என்பதை நம் கைகளில் வைத்திருக்கும் மொபைல் போன்கள் ஊடாக அறிந்து கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் இலங்கையின் அனைத்து பிரதேச செயலக மட்டத்திலும் டிஜிட்டல் உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு, அதனூடாக இளைஞர், யுவதிகளுக்கு புதிய



தொழில்நுட்பத்தில் பலன்கள் பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# பாதிப்பு ஏற்படாத வகையில் மாற்று நடவடிக்கை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷ உருவாக்கிய ரக்னா லங்கா பாதுகாப்புச் சேவையின் ஊழியர்களின் தொழில்களைப் பாதுகாக்கும் வகையில், மாற்றுவழிகளைக் கையாளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணித்துள்ளார்.

இதுகுறித்து ரக்னா லங்கா நிறுவனத்தின் தலைவர் விக்டர் சமரவீர தினமின பத்திரிகைக்கு அளித்துள்ள நேர்காணலில் தெரிவித்துள்ளார்.


தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

முப்படைகளின் ஓய்வு பெற்ற அதிகாரிகள் உள்ளிட்ட மூவாயிரம் பேர் ரக்னா லங்கா பாதுகாப்புச் சேவையில் பணியாற்றுகின்றனர்.

இவர்களின் தொழில்கள் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியாக நிற்கின்றார்.

அதன் காரணமாக ரக்னா லங்கா நிறுவனத்தின் ஊழியர்களின் தொழில்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் மாற்று வழிகளைக் கையாளுமாறு ஜனாதிபதி தொலைபேசி வழியாக கட்டளை பிறப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# வெளிநாடு செல்ல அனுமதியுங்கள் சஜின்வாஸ் மன்றில் மனுத்தாக்கல்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன மருத்துவ தேவைக்காக தம்மை வெளிநாட்டுக்கு செல்ல அனுமதிக்கவேண்டும் என்று கோரியுள்ளார.

இதற்காக அவர் கொழும்பு முதன்மை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

சொத்துக்களை வெளிப்படுத்தவில்லை என்ற காரணத்தை காட்டி நீதிமன்றம், அவரின் கடவுச்சீட்டை முடக்கி வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிப்பு

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம்70 தொடக்கம்80 வீதம்வரை அதிகரித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் குறைந்த செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் பீஎம்எஸ்பட்டகொட தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் எண்ணெயை பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## அதிசயத் தொண்டன் அனுமன்

தன்னம்பிக்கை வேறு. ஆணவம் வேறு. பலர் இதைக் குழப்பிக் கொண்டு பிறரையும் குழப்பியிருக்கிறார்கள். அதேபோல தன்னம்பிக்கை உள்ளவர்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக இருப்பது தவறு என்று நாத்திகர்கள் நினைக்கிறார்கள். ஒருவன் தன்னம்பிக்கையுடனும் அதேசமயம் கடவுள் நம்பிக்கையுடனும் வாழ முடியும் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஆணவம் உள்ளவர்கள் தான் கடவுள் நம்பிக்கை அற்றவர்கள். இந்த நுட்பத்தைப் புரிய வைக்கிறேன்.

என்னால் பல காரியங்களைச் செய்ய முடியும். எவர் உதவியும் தயவும் இன்றி ஆயிரக்கணக்கான செயல்களைத் தவறின்றி செய்ய முடியும். இப்படி வாழ்வது தன்னம்பிக்கை. ஆனால் என்னால் என்னைச் செய்ய முடியுமா? என்னை என் தாய், தகப்பன்தான் செய்தார்கள். அவர்களிடம் யாரோ கொடுத்த பஞ்சபூதங்களையும் உயிரையும் கொண்டு என்னை உருவாக்கினார்கள். பஞ்சபூதங்களையும் உயிரையும் என்னால் செய்ய முடியாது. அது கடவுளால் மட்டுமே முடியும். அங்குதான் கடவுள் நம்பிக்கை உருவாகிறது.

என்னால் பல காரியங்களைச் செய்ய முடிவது தன்னம்பிக்கை. என்னால் என்னைச் செய்ய முடியாது. அது பெற்றோரால் நிகழ்கிறது என்பதைப் புரிந்து கொள்ளும் அறிவு காரணமாக உண்டாவது கடவுள் நம்பிக்கை. எனவே இரண்டு நம்பிக்கையும் அவசியம் என்பதே என் கட்சி.

தன்னம்பிக்கை தாரம் மாதிரி. கடவுள் நம்பிக்கை தாய் மாதிரி. இரண்டோடும் இருப்பதுதான் சரியான வாழ்க்கை. தன்னம்பிக்கை ஆணவமாகி கடவுள் எதிர்ப்பு என்ற பிதற்றலாக மாறுகிறபோது தாரத்திற்காக தாயைக் கொல்கிற பாதகர்களாக நாம் மாறுகிறோம். நாம் செய்ய வேண்டிய வேலைகளைக் கூட செய்யாமல் கடவுள் செய்யட்டும் என்றும் சோம்பிக் கிடப்பது கட்டிய மனைவியைக் கட்டிலில் பட்டினி போடும் அலித் தனம், பேடித்தனம். எனவே தன்னம்பிக்கை, கடவுள் நம்பிக்கை என்கிற இரண்டும் அவசியம் என்கிறேன்.

தன்னம்பிக்கை உடல் மாதிரி. கடவுள் நம்பிக்கை உயிர் மாதிரி. எந்த எல்லை வரை தன்னம்பிக்கை இருக்கலாம். எந்த எல்லையில் அது கடவுள் நம்பிக்கையாக மாற வேண்டும் என்பதை நன்கு புரிந்து கொண்டால் நமது வாழ்க்கை இனிமையாகவும் இருக்கும். விவேகமாகவும் இருக்கும் . இதற்கு மிகச் சரியான உதாரணம் அனுமன்.

அவனால் முடிந்த எல்லாவற்றையும் அவன் செய்தான். முடியாத போது ராமநாமத்தின் மூலம் செய்து முடிக்கிறான். அது மட்டுமல்ல அந்தத் தலைவன் மீது அளவு கடந்த பக்தி விசுவாசத்துடன் தன் வாழ்வை அமைத்துக் கொள்கிறான். Dedication என்கிற அர்ப்பணிப்பு அவனிடம் அபரிமிதமாக இருக்கிறது...! ஓர் உதாரணக் கதை உண்டு.

வட நாட்டில் அனுமன் கோவில்களில் சிலை முழுவதும் செந்தூரம் என்கிற சிவப்பு நிறம் பூசப்பட்டிருக்கும். பக்தர்கள் அதைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொள்வார்கள். போர்க்களத்தில் இராமனுக்காகப் போர் செய்த போது ஏற்பட்ட இரத்தப் பெருக்கு அது. அவனது தியாகத்தைக் கொண்டாடும் வகையில் அந்த இரத்தம் செந்தூரமாக மதிக்கப்படுகிறது என்பார்கள்.

அதைவிட சுவாரஸ்யமான கதை ஒன்றும் சொல்வதுண்டு. இராமனுடைய வெற்றிச் செய்தியை சிறையில் இருந்த சீதையிடம் சொல்லப் போனார் ஆஞ்சநேயர். பிராட்டி தலையில் நேர் வகிடு எடுத்து சுமங்கலிப் பெண்கள் பாணியில் நெற்றி வகிட்டில் செந்தூரம் வைத்திருந்தாள். இதுவரை அப்படிப் பாத்திராத அனுமார், ஆகா பிராட்டிக்கு ஏதோ இரத்த காயம் என்று பதறிப் போய் விசாரித்தாராம்.

சுமங்கலிகள் செந்தூரத்தை நெற்றியில் இப்படி இட்டுக் கொண்டால் அவர்களது தலைவனுக்கு (கணவனுக்கு) வெற்றி உண்டாகும் என்று கூறினாள் பிராட்டி. இராமனது வெற்றிக்காகத்தான் செந்தூர் திலகம் இட்டுக்கொண்டதை விளக்கி, அது இரத்தமல்ல என்று புரிய வைக்க செந்தூரத்யையும் அனுமன் கையில் கொடுத்தாராம் சீதை.

இவ்வளவு குறைவாக நெற்றியில் வைத்தாலேயே தலைவனுக்கு நல்லது என்றால் என் தலைவன் இராமன் நன்மைக்காக என் உடம்பெல்லாம் பூசிக் கொள்வேன் என்று அனுமார் உடல் முழுவதும் செந்தூரம் அப்பிக் கொண்டார் என்பார்கள். தலைவன் மீது அன்பு அப்படியல்லவா இருக்க வேண்டும்.

இன்று பல தொண்டர்கள் தலைவர் பின்னால் போவது எதற்காக? பின்னால் போனால் தான் தலைவர் அறியாமல் கவிழ்க்க முடியும் என்கிறார்கள். இராமனைப் போலத் தலைவனும் அனுமனைப் போலத் தொண்டனும் அமைந்தால் நாட்டுக்கு நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா வரலாறு

33

## திருப்பங்கள் நிறைந்த பி.யு.சின்னப்பா வாழ்க்கை

**எதிர்பாராத திருப்பம்**

இந்தச் சமயத்தில் (1940) அவர் வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டது. அலெக்சாண்டர் டூமாஸ் எழுதி ஆங்கிலத்தில் வெளிவந்த மேதி அயர்ன் மாஸ்க்



கண்ணகியில் பி.யு.சின்னப்பா- கண்ணாம்பா

(இரும்பு முகமூடி மனிதன்) என்ற படத்தை தமிழில் உத்தமபுத்திரன் என்ற பெயரில் தயாரிக்க மோடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர்.சுந்தரம் தீர்மானித்தார். இதில் கதாநாயகனாக (இரட்டை வேடத்தில்) நடிக்க சின்னப்பா ஒப்பந்தம் ஆனார். தமிழில் ஒருவரே மாறுபட்ட இரு வேடங்களில் நடித்த படங்கள் இதற்கு முன் வெளிவந்திருந்தாலும் ஒரே தோற்றமுள்ள இருவராக (இரட்டை வேடத்தில்) ஒரு நடிகர் நடிப்பது அதுவே முதல் தடவை.

சின்னப்பாவுடன் இன்னொரு சின்னப்பாவை ஒரே நேரத்தில் திரையில் கண்ட ரசிகர்கள் அதிசயப்பட்டு கைதட்டினார்கள். படம் வெற்றி பெற்றது. சின்னப்பா பெரும் புகழ் பெற்றார்.

**அதிர்ஷ்ட சக்கரம்**

சின்னப்பாவின் அதிர்ஷ்ட சக்கரம் வேகமாகச் சுழல ஆரம்பித்தது.

பட்சி ராஜா ஸ்ரூடியோ தயாரித்த ஆர்யமாலா (காத்தவராயன் கதை) சுப்பர் ஹிட் படமாக அமைந்தது.

அடுத்து வெளிவந்த கண்ணகி பெரிய வெற்றிப்படமாக அமைந்தது மட்டுமல்ல இளங்கோவன் எழுதிய வசனங்கள் சிகரத்தைத் தொட்டன. கண்ணகியாக கண்ணாம்பாவும் கோவலனாக சின்னப்பாவும் போட்டி போட்டு நடித்தனர். என்.எஸ். கிருஷ்ணன்-டி.ஏ.மதுரம் காமெடி படத்திற்கு மேலும் மெருகூட்டியது.

இந்தப் படத்தின் மூலம் பாகவதருக்கு அடுத்த சுப்பர்ஸ்டார் அந்தஸ்தை சின்னப்பா பெற்றார்.

**ரசிகர்களில் 2 கோஷ்டிகள்**

ஏற்கனவே பாகவதர் ஏராளமான ரசிகர்களைப் பெற்றிருந்தார். ஆர்யமாலா, கண்ணகி ஆகிய படங்கள் மூலமாக சின்னப்பாவுக்கு என்று தனி ரசிகர் கோஷ்டி உருவாயிற்று. பாகவதர் சிறந்த நடிகரா? சின்னப்பா சிறந்த நடிகரா? என்று இரு கோஷ்டிகள் இடையே காரசாரமான விவாதங்கள் நடப்பதுண்டு. கைகலப்பும் நடப்பதுண்டு.

பிற்காலத்தில் எம்.ஜி.ஆர். ரசிகர்களுக்கும் சிவாஜிகணேசன் ரசிகர்களுக்கும் மோதல்கள் நடந்தன அல்லவா? அது மாதிரியான நிலைதான்.

பாகவதர் தனக்கு ஏற்ற வேடங்களை மட்டும் ஏற்று நடித்தார். சின்னப்பா எத்தகைய படங்களிலும் எந்த வேடத்திலும் நடித்தார். வெற்றி-தோல்வி பற்றிக் கவலைப்படவில்லை.

பாகவதர் வருடத்திற்கு ஒரு படத்தில் மட்டும் நடித்தார். சின்னப்பா பல படங்களில் நடித்தார்.

ஹரிதாஸ் வரை பாகவதர் வெற்றி மேல் வெற்றி பெற்றார். சின்னப்பாவுக்கு வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தன. எனினும் எந்தப் படத்திலும் அவர் நடிப்பில் குறை வைக்கவில்லை.

பாகவதர் இனிய குரலால் இசையில் கொடி கட்டிப் பறந்தார். சின்னப்பாவின் குரல் கரடுமுரடாக இருந்தாலும் கடினமான பாடல்களையும் சுலபமாகப் பாடினார்.

பாகவதர் பொன்னிறம் கொண்டவர். அழகிய தோற்றம் அவருக்கு நிறைய ரசிகர்- ரசிகைகளைத் தேடிக் கொடுத்தது. சின்னப்பா கறுப்பு நிறம். குண்டாக இருப்பார்.

அப்படியிருந்தும் பாகவதரை சின்னப்பா நெருங்க முடிந்ததற்குக் காரணம் அவரிடம் இருந்த அபாரமான நடிப்பாற்றல் தான்.

கண்ணகிக்குப் பிறகு குபேர குசேலா (1943), மனோன்மணி (1943), ஹரிச்சந்திரா (1944) ஆகிய படங்களில் நடித்தார். இதில் மனோன்மணி வெற்றிப்படம். குபேர குசேலா சுமார் ரகம். ஹரிச்சந்திரா தோல்விப்படம். ஆனால் அதற்குப் பின் வந்த ஜகதலப்பிரதாபன் வரலாறு படைத்தது.

(தொடரும்)



குபேரகுசேலாவில் பி.யு.சின்னப்பா

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 301

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

**நாம்** வெறுமனவே பிரபஞ்ச இருப்புத்தன்மை மீது மனப்பூர்வமான நம்பிக்கை வைக்கத் தயாரில்லை. உங்கள் இருப்புத் தன்மையில் பிரபஞ்சத்தின் மீது மனப்பூர்வமாக நம்பிக்கை வைக்கும் தன்மையே உங்களை இந்தப்பூமியில் கடவுளைப் போல வாழ வைக்கும். உங்கள் சொந்த அறியாமையினாலும் அஹங்காரத்தினாலும் இந்த அற்புதமான வாய்ப்பைத் தவற விட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

நம்மால் விழிப்புடன் இந்தப் பிரபஞ்ச சக்தியை நோக்கிய ஒரு தொடர்ந்து நன்றியுணர்வில் இருக்க முடியுமானால் நம்மை அதன் மடியில் வைத்துப் பாதுகாப்பதை உணரமுடியும். ஒரு தாய் தன் குழந்தைக்குச் செய்வது போல நம்மை இந்த சக்தி தொட்டிலில் இட்டுத் தாலாட்டுவதைக் காணலாம். நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் இல்லாவிடினும் இதுதான் உண்மை.

ஒரு மனிதன் அவனும் கடவுளும் இந்த வாழ்க்கைப் பயணத்தில் ஒரு கடற்கரையில் நடந்து செல்வதாகக் கனவு கண்டான். அவன் கடவுளிடம் சொன்னான். ஓ பிரபுவே! நாமிருவரும் கடற்கரை மணலில் நடந்து செல்வதாகக் கனவு கண்டேன் மணலில் நாம் நடந்து வந்த பாதையின் அடிச்சுவடுகளைப் பார்க்கும்போது வாழ்க்கையின் மிகவும் சோதனையான காலகட்டங்களில் நான் ஆழமான பிரச்சினைகளில் இருந்தபோதெல்லாம் ஒரு வரிசைக் காலடிகளை மட்டும்தான் காண்கின்றேன். மற்றதைக் காணவில்லை. அந்தச் சமயங்களில் எவ்வாறு நீ என்னை விட்டு விலகச் செல்லலாம்? கடவுள் சொன்னார். மகனே! அந்தச் சமயங்களில் நான் உன்னைச் சுமந்து கொண்டு நடந்தேன்!





என் சொந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன். நான் அலைந்து திரிந்து கொண்டிருந்த நாட்களில் 30 ஆயிரம் கிலோமீற்றருக்கும் அதிகமான தூரம் பயணம் செய்திருக்கிறேன். அதில் 2 ஆயிரம் கிலோமீற்றருக்கும் அதிகமான தூரத்தை நட ந்தே கடந்திருக்கிறேன். வெறும் இர ண்டே இரண்டு துண்டுத் துணிகளுடனும் உணவுக்காக ஒரு பிச்சைப்பாத்திரத்தையும் மட்டுமே வைத்துக்கொண்டு பயணம் செய்தேன். பணத்தைத் தொடுவதில்லை யென்றும் அடுத்த வேளைக்காக உணவைச் சேமித்து வைப்பதில்லை என்றும் சபதம் செய்திருந்தேன்.

இது எவ்வாறு சாத்தியம் என்று மக்கள் என்னிடம் கேட்கிறார்கள். நான் சொல்கிறேன்... நான் வெறுமனே பிரபஞ்ச இருப்புத் தன்மையின் மீது மனப்பூர்வமான நம்பிக்கைவைத்து என்னுடைய குறிக்கோளான ஞானமடைதலில் மட்டுமே மனதை ஒருமுகப்படுத்தியிருந்தேன். பிரபஞ்ச இருப்புத்தன்மை என்னை கவனித்துக்கொண்டது. இது இவ்வாறுதான் நிகழ்ந்தது.

பிரபஞ்ச இருப்புத்தன்மையின் மீது விசுவாசம் வையுங்கள் என்பது போன்ற விடயங்களை நான் சொல்லும்போது நீங்கள் இந்தக் கருத்தெல்லாம் அந்தக்கால நியாய மென்றும் மகான்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் நினைக்கலாம். கண்டிப்பாக அவ்வாறு அல்ல. என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து இப்பொழுது உங்கள் முன்னால் அமர்ந்திருக்கும் எனக்கு நிகழ்ந்தவற்றிலிருந்து சொல்கிறேன்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயனுடைய வருகைக்கு முன்னதாகவே இலங்கையில் வளர்ச்சியடைந்த நாகரிகம்

## தம்புள்ள அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிப்பு

**(கொழும்பு)**

**தம்புள்ள இப்பன்கட்டுவ பகுதியில் புராதன கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை கி.மு. 600 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளன.**

விஜயனுடைய இலங்கை வருகைக்கு முற்பட்டதாக மேற்படி கல்லறைகள் காணப்படுவதாக இலங்கை தொல்பொருள் பட்டப்பின் படிப்புகள் நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதன் சிரேஷ்ட விரிவுரையாளர் ரஞ்சித் பண்டார இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், கண்டுபிடிக்கப்பட்ட கல்லறைகள் விஜயனுடைய இலங்கை வரலாற்றுக்கு முற்பட்டதாக காணப்படுகிறது.

அத்துடன் மேற்படி கல்லறைகள் காணப்படுகின்ற பகுதியில் மட்பாண்டங்கள் மற்றும் சிறு பாத்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை அவர்களால் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

இவை 2600 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்று ஆதாரங்களின் படி அவை விஜயனுடைய காலத்திற்கு முற்பட்டவை. அத்துடன் கல்லறைகளில் இறுதிக் கிரியைகள் நடைபெற்றமைக்கான சான்றாதாரங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள் ஒரு மாதத்திற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மேற்படி கல்லறைகள் அமைந்துள்ள பகுதி பொதுமக்கள் பார்வையிடுவதற்கு விரைவில் அனுமதிக்கப்படும்.

இதேவேளை விஜயனுடைய இலங்கை வருகை பற்றி கதைகள் இதுவரை வரலாற்று ஆதாரங்களுடன் எம்மால் நிரூபணமாக்கப்படவில்லை.

எனினும் மகாவம்சத்தின் படி விஜயனுடைய வருகைக்கு முன்னதாகவே நன்கு வளர்ச்சியடைந்த மனித நாகரிகம் இங்கு காணப்பட்டுள்ளது. கல்லறைகளின் வரலாறு கி.மு. 600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறலாம்.

அகழ்வாராய்ச்சியின் தம்புள்ள மத்திய கலாசார நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு அஜித் ஜயசுந்தர என்பவர் பொறுப்பாக இருக்கின்றார். இதேவேளை இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் எனப்படுவோர் இங்கு வாழ்ந்தனர் என்பது வரலாறு எமக்குத் தரும் பாடமாகும். (3)

## இந்திய மீனவர்களின் வலைகளை அறுப்பதற்கு அரசாங்கம் அனுமதி

(கொழும்பு)

இலங்கை கடல் எல்லைக்குள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் வலைகளை நாளை வியாழக்கிழமை முதல் வெட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் கைது படகுகள் தடுத்து வைப்பு போன்ற இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் அவர்களின் வருகையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இந்நிலையில் இந்திய மீனவர்கள் எல்லைதாண்டி இலங்கை கடற்பரப்பினுள் நுழையும் போது அவர்களின் மீன்பிடி வலைகளை அறுத்து விடுவதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த வாரம் இந்திய உயர்ஸ்தானிகர் என்.கே. சின்ஹா மீன்பிடித்துறை அமைச்சரை சந்தித்துப் பேசுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

### ஏழு நூல்கள் மிதக்கும் அரங்கில்

யாழ். விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர் திருச்செல்வம் தவரத்தினம், உலக சாதனைப் பதிவிற்கான முயற்சியாக காரைநகர் கசூரினாக் கடலில் மிதக்கும் அரங்கில் ஒரே தடவையில் 7 நூல்களை எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் வெளியிடவுள்ளார். (இ-10)

### சம்ஹார உற்சவம்

வண்ணை வீரமாகாளி அம்பாள் மகிஷாசூர சம்ஹார உற்சவ விஞ்ஞாபனம் இன்று புதன்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மாலை 6.15 மணிக்கு கொலு பூஜை நடைபெற்று நிறைவுறும். (3-5)

## பொலிஸாரைத் தாக்கிவிட்டு கைவிலங்குடன் தப்பியோட்டம்

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று திருக்கோவில் பகுதியில் இரண்டு சகோதரர்களை கைது செய்யச் சென்ற பொலிஸார் சகோதரர் ஒருவரது கையில் விலங்கை போட்ட நேரத்தில் பொலிஸாரைத் தாக்கிவிட்டு அந்த நபர் தப்பியோடியுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த பொலிஸார் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கைவிலங்குடன் தப்பியோடிய நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நிலையில் பிரஸ்தாப நபர்கள் மறைந்து வாழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் பொலிஸார் அவர்களது மறைவிடத்தை கண்டுபிடித்து கைது செய்ய முற்பட்டபோதே கைவிலங்குடன் பொலிஸாரைத் தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளனர். (3-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 523


ராஜேஸ்குமார்




உதிஸ்ரன்




அம்முக்குட்டி




ஆறுமுகன்



பி.ராஜி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின் விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன் கிழமை (21.10.2015) தொடக்கம் வெள்ளிக்கிழமை (23.10.2015) காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை வட மாகாணத்திலுள்ள சில பிரதே சங்களில மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

அந்த வகையில்,

21.10.2015 புதன மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், சூரிய கட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும், 22.10.2015 வியாழன் யாழ் பிரதேசத்தில் திருநெல்வேலி ஆடிய பாதம் வீதி, பலாலி வீதி, பனிக்கர் லேன், கலாசாலை வீதி, பாற்பண்ணை, அரசடி அம்மன் வீதி, நாவலடி லேன், இராமலிங்கம் சந்தியிலிருந்து திருநெல்வேலிச் சந்தி வரை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் இரட்டைப் பெரியகுளம், கற்குண்டமடு, அழகல்ல, அவுசதாப்பிட்டிய ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் முள்ளிக்குளம். கீரிசுட்டான் ஆகிய பிரதேசங்களிலும் 23.10. 2015 வெள்ளி யாழ்.பிரதேசத்தில் வல்லிபுரம், உபய கதிர்காமம், புனிதநகர், கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, பருத்தித்துறை வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், 3 ஆம் குறுக்குத் தெரு பிரதேசம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் இரட்டைப் பெரிய குளம், கற்குண்டமடு, அழகல்ல, அவுசதாப்பிட்டிய ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் வட்டுப்பித்தன்மடுவிலிருந்து புதுக்காமம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

# விஜயதசமி நாள் வகுப்பு

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ். குடாநாட்டில் உள்ள ஆலயங்கள், பாடசாலைகளில் நடத்தி வருகின்ற இலவச தேவாரப் பண்ணிசை வகுப்புக்களில் விஜய தசமி நாள் வகுப்பு நாளை வியாழக்கிழமை இடம்பெறும்.

இதற்கமைய யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பிற்பகல் 3மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும் யாழ்ப்பாண சிவதொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்தில் பிற்பகல் 4.15 மணி தொடக்கம் இடம்பெறும். இப் பயிற்சி வகுப்புக்களை கலாபூசணம் துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் கே.எஸ். ஆர். திருஞானசம்பந்த ஓதுவார் முர்த்திகள் நடத்தி வருகின்றார்.

வகுப்புக்களில் ஆண், பெண் இருபாலாரும் பங்கு பற்றி பயன் பெற முடியும்.

அத்துடன் வகுப்புக்களுக்கு புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் மன்ற அமைப்பாளர் எஸ்.கிருஸ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (இ - 5)

### வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் 20.10.2015
### மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 138.56 | 143.11 |
| பவுண்ட் | பிரிட்டன் | 213.54 | 222.20 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 156.00 | 163.04 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 143.91 | 150.69 |
| டொலர் | கனடா | 105.54 | 110.48 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 99.57 | 104.80 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.29 | 103.63 |
| யென் | ஜப்பான் | 1.1531 | 1.2048 |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 373.8935 |
| குவைத் | டினார் | 467.3204 |
| ஓமான் | ரியால் | 366.1486 |
| கட்டார் | ரியால் | 38.7246 |
| சவுதி அரேபியா | ரியால் | 37.6108 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.3866 |


## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 240 | 240 | 300 | 200 |
| த்க்காளி | 120 | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 40 | 50 |
| கோவா | 80 | 60 | 80 | 80 |
| கரட் | 60 | 80 | 100 | 60 |
| பூசணி | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 50 | 50 | 80 | 50 |
| வாழைக்காய் | 70 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 | 120 |
| பாகற்காய் | 180 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 120 | 80 |
| லீக்ஸ் | 80 | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 30 | 60 | 40 |
| கறிமிளகாய் | 160 | 160 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 120 | 120 |
| போஞ்சி | 160 | 200 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 70 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 300 | 250 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 200 | 250 | — | — |
| வெங்காயப்பூ | 200 | — | — | 180 |
| முள்ளங்கி | 40 | 40 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 25 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

# கண்டி மன்னன் திடீர் தாக்குதலில் வெள்ளையர்கள் சரண்

15



உடனே தன்னை வந்து பார்க்கும் படி மந்திரி எகிலப்பொலவுக்கு உத்தர விட்டார்.

ஆனால் அந்த உத்தரவுக்கு எகிலப்பொல கீழ்ப்படிய வில்லை. மன்னரைச் சந்தித்தால் மரணம் நிச்சயம் என்பதை உணர்ந்திருந்தான். எனவே வெள்ளைக்காரத் தளபதியிடம் தன் நண்பன் ஒருவனைத் தூது அனுப்பினான். மன்னன் விக்கிரமராச சிங்கன் கொடுங்கோல் ஆட்சி செய்கிறார். மக்கள் அவரை வெறுக்கிறார்கள். உடனே நீங்கள் கண்டி மீது படையெடுங்கள். மக்கள் உங்களை வரவேற்பார்கள் என்று மந்திரியின் நண்பன் வெள்ளைக்காரத் தளபதியிடம் கூறினான்.

ஆனால் விக்கிரமராச சிங்கனின் வீரத்தையும் ஏற்கனவே கண்டி மீது படையெடுத்துச்சென்று அவரிடம் சரணடைய நேரிட்டதையும் வெள்ளைக்காரத் தளபதி மறந்துவிடவில்லை. எனவே கண்டி மீது படையெடுக்க மறுத்துவிட்டார்.

இதனால் ஏமாற்றம் அடைந்த மந்திரி எகிலப்பொல கண்டியின் பல்வேறு பகுதிகளிலும் மன்னருக்கு எதிராகக் கலகங்களைத் தூண்டி விட்டான்.

இதையெல்லாம் மன்னர் அறிந்தார். எகிலப்பொலவை நீக்கிவிட்டு புதிய மந்திரியாக மொலிக்கொடையை நியமித்தார்.

### உளவு பார்த்த வியாபாரிகள்

சில வியாபாரிகள் உளவு வேலையில் ஈடுபடுவதாக மன்னருக்குத் தகவல் கிடைத்தது. அதனால் குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகளை வெளியேற்றினார்.

இதை அறிந்த எகிலப்பொல மன்னரைப் பழிவாங்கப் புதிய திட்டம் வகுத்தான். தடை செய்யப்பட்ட பகுதிக்கு 10 வியாபாரிகளை அனுப்பி வைத்தான். இதனால் ஆத்திரமடைந்த மன்னர் 10 வியாபாரிகளையும் கைது செய்யக் கட்டளையிட்டார். அவர்களுடைய மூக்குகளையும் காதுகளையும் துண்டித்து அவற்றை மாலையாகக் கோர்த்து கழுத்தில் போட்டு அனுப்பும்படி உத்தரவிட்டார்.

மூக்குகளையும் காதுகளையும் இழந்த 10 பேரும் ஊருக்குத் திரும்பியபோது 7 பேர் நடுவழியிலேயே இறந்துவிட்டனர். மீதி 3பேர் ஆங்கிலத் தளபதிகளிடம் சென்று கண்டி மன்னர் எங்கள் மூக்கையும் காதுகளையும் அறுத்து விட்டார் பாருங்கள் என்று முறையிட்டுக் கதறியழுதனர்.

கண்டி மன்னர் கொடுங்கோலர் என்று ஏற்கனவே சொன்னேனே. நீங்கள் அதை இப்போதாவது நம்புங்கள். கண்டி மீது படையெடுங்கள் என்று வெள்ளையர்களுக்குத் தூபம் போட்டான் எகிலப்பொல.

வெள்ளையர்கள் இது பற்றி ஆலோசனை நடத்தினார்கள். கண்டி மீது படையெடுக்க முடிவு செய்தார்கள்.

(கி.பி.1739இல் ஒரு வெள்ளையரின் காதை ஸ்பானிஷ் மாலுமி அறுத்துவிட்டான் என்பதால் ஸ்பெயின் மீது இங்கிலாந்து படையெடுத்தது குறிப்பிடத்தக்கது)

கண்டி இராச்சியத்தின் சகல இரகசியங்களையும் வெள்ளையர்களிடம் எகிலப்பொல தெரிவித்தான். எந்தெந்த வழிகளில் சென்றால் கண்டியைச் சுலபமாகப் பிடிக்கலாம் என்பதையும் விளக்கமாகக் கூறினான்.

அதன்படி கொழும்பு, காலி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்து வெள்ளையர் படைகள் கண்டியை நோக்கி விரைந்தன.

சிங்கள மக்களைத் தமிழ் மன்னர் விக்கிரமராசசிங்கன் கொடுமை செய்கிறார். அவரிடம் இருந்து மக்களைக் காப்பாற்றவே கண்டி மீது படையெடுத்திருக்கிறோம் என்று வெள்ளையர்கள் போர்ப்பிரகடனம் வெளியிட்டனர்.

(தொடரும்)



இலங்கையில் யானைகள் அதிகம். அந்தக் காலத்து யானை வேட்டையை சித்தரிக்கும் படம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத ராசி பலன்கள்

## 18.10.2015-16.11.2015 வரை

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்






## பார்க்கும் குருவால் பணவரவு திருப்தி தரும்

**சுறுசுறுப்போடு செயற பட்டு சொல்லைச் செய லாக்கிக் காட்டும் மேட ராசி நேயர்களே!**

ஐப்பசிமாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது, உங்கள் ராசிநாதன் செவ்வாய் தனாதிபதி சுக்ர னோடும், குரு வோடும் இணைந்து பஞ்சமஸ்தா னத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே, நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் இந்தமாதத்தில் நிறையவே நடை பெறப்போகின்றது. பக்கபலமாக இருப்பவர்கள் நினைத்தபடியே ஒத்துழைப்புச் செய்வார்கள்.

வீட்டிற்குத்தேவையான விலை உயர்ந்த பொருட்களை நீண்ட காலமாக வாங்க நினைத்தும் வாங்க முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்கள், இம் மாதம் வாங்கி மகிழக்கூடிய வாய்ப்பு உருவாகும். குரு-சுக்ர சேர்க்கை இருப்பதால் திட்டமிடாது செய்யும் காரியங்களில்கூட வெற்றிகிட்டும். தெய்வ தரிசனங்களுக்காக ஒரு தொகையைச் செலவிட்டு மகிழ் வீர்கள.

2, 7 இற்குஅதிபதியான சுக் ரன் ராசிநாதனோடு இணைந்து பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிப்ப தால் வாழ்க்கைத்துணை வழியே ஏற்பட்ட பிணக்குகள் அகலும், பிரி யம்கூடும். உத்தியோகஸ்தானத் தில் புதன் வலுப்பெற்றிருப்பதால், உடன் பணிபுரிவர்களால் நன்மை கிடைக்கும். பணி செய்யும் இடத் தில் உங்களுக்கு வேண்டிய சலுகைகளை மேலதிகாரிகள் தர முன்வருவர்.

பஞ்சமாதிபதி சூரியன் நீச்சம் பெற்று விட்டார். அதேநேரத்தில் நீச்சசூரியன் நின்ற ராசிநாதன் சுக்ரன் சூரியனின் வீட்டில் பரி வர்த்தனை யோகம் பெற்றுள் ளார். எனவே பிள்ளைகள் வழி யில் ஏற்பட்ட பிரச்சினைகள் அக லும். எதிர்கால நலன் கருதி எடு க்கும் எந்த முயற்சியிலும் முத லில் தாமதங்கள்ஏற்பட்டாலும் முடிவில் வெற்றி கிடைக்கும். என்ன இருந்தாலும் அஷ்டமத் துச்சனியின் ஆதிக்கம் உங்க ளுக்கு இருக்கிறது. எனவே, ஒவ் வொரு சனிக்கிழமையும் சனிக் கவசம்பாடி சனபகவானை எள் தீபம் ஏற்றி வழிபடுவதன் மூலம், நல்லவாய்ப்புகளை வரவழை த்துக்கொள்ள இயலும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

இதுவரை உச்சம் பெற்று சஞ் சரித்து வந்த புதன், ஒக்டோபர் 26 ஆம் திகதி துலாம் ராசிக்குள் பிரவேசிக்கப் போகிறார். இதன் விளைவாக உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள். இருந்தாலும் ஒக் டோபர் 27 ஆம் திகதியே புதன் வலிமை இழக்கிறார். எனவே பாசமாகப் பேசிய உடன்பிறப்புகள் நேசக்கரம் நீட்டமறுப்பர். பொறு மையை கடைப்பிடிக்க வேண்டிய நேரமிது. நவ ம்பர் 12 ஆம் திகதி விரு ச்சிகத்தில் புதன்சஞ்சரி க்கப் போகி றார்.

எனவே மாதக்கடை சியில் மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடை க்கும்.

**நீச்சசுக்ரனின் சஞ்சாரம்!**

நவம்பர் 2ஆம் திகதி கன்னி ராசியில் சுக்ரன் நீச்சம் பெறப் போகிறார். இது அவ்வளவு நல்ல தல்ல. பண நெருக்கடி அதிகரிக் கும். தீபாவளிசமயத்தில் பற்றாக் குறை ஏற்படுகிறதே என்று கவ லைப்படுவீர்கள். போனஸ் வாங்கி யும் போதவில்லையே என்று அங்கலாய்ப்பீர்கள். தனாதிபதி நச் சம் பெறுவதால் சிலருக்கு கடன வாங்கும் சூழ்நிலைஉருவாகும்.

**வெற்றிதரும் செவ்வாய் பெயர்ச்சி!**

நவம்பர் 5ஆம் திகதி கன்னி ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கின் றார். ராசிநாதனாகவும், அஷ்ட மாதிபதியாகவும் விளங்கும் செவ்வாய், கன்னிராசியில் சஞ்சரி ப்பது ஒரு வழிக்குயோகம் தான். "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்" என்பதற்கு ஏற்ப அஷ்டமாதிபதி 6 இல் வலிமை இழக்கும் பொழுது சொத்துக்க ளால் ஆதாயம் ஏற்படும். வாங்க நினைத்த சொத்துக்களை வாங்கி மகிழ்வீர்கள். சுப விரயங்கள் அதிகரிக்கும். செவ்வாயின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவ தால் பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். இம்மாதம் அம்பிகை வழிபாட் டில் ஆர்வம் காட்டினால் இன் பங்கள்வந்து சேரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் சுகங்களும், சந் தோஷங்களும் அதிகரிக்கும். சென்ற மாதத்தில் நடைபெறாத் காரியங்கள் துரிதமாக நடை பெற்று வெற்றியைக்கொடுக் கும். பணவரவுக்கு பஞ்சம் ஏற்ப டாது. கணவன்-மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த சம்பவம் இம்மாதம் நடைபெற வழிபிறக் கும். உங்கள் பெயரிலேயே சொத் துக்கள் வாங்க குடும்ப உறுப்பி னர்கள் முன்வருவர். உத்தி யோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதர வோடு எதிர்பார்த்த மாற்றம் கிடைக் கும். நவராத்திரி நாயகியை வழிபடுவது நல்லது. குழந்தை களின் ஆசைகளை செய்யமுன் வருவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கைஉண்டு.






## விரயங்கள் குறைய விழிப்புணர்ச்சி தேவை

**சொந்தபந்தங்களுக்கு எந்தவிதத்திலாவது உதவ நினைக்கும இடப ராசி நேயர்களே!**

ஐப்பசி மாதக்கிரக நிலை களை ஆராய்ந்து பார்க்கிற பொழுது, உங்கள் ராசி நாதன் சுக்ரன் சுகஸ்தானத்தில் சஞ் சரிக்கிறார். சுகாதிபதி சூரியன் நீச்சம் பெற்று விட்டார்.

**சப்தமச்சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிகின்றது.**

எனவே, விரயங்கள் கூடுத லாக இருக்கும். விரயாதிபதி செவ் வாய் ராசிநாதனோடு இணைந்து நான்காம் இடத்தில் அல்லவா சஞ் சரிக்கிறார். எனவே குடும்பச் செல வுகள் கூடும். குழந்தைகள் வழி யிலும், குடும்ப உறுப்பினர்கள் வழியிலும் அவர்களது எண்ண ங்களைப் பூர்த்தி செய்ய செல விட வேண்டிய சூழ்நிலை உரு வாகும்.

தீபாவளி வரப்போகிறது. எனவே, வீண் விரயங்களிலிரு ந்து விடுபட சுபவிரயங்களை மேற்கொள்ள வாய்ப்புகள் கைகூடி வருகிறதல்லவா? ஆடை, ஆபரண சேர்க்கை, அத்தியாவசியப் பொருட்களின் சேர்க்கை ஏற்படும். குழந் தைகளின் எதிர்காலநலன் கருதி பொன் ஆபரணங்கள் வாங் குவதிலும் ஒருசிலர் ஆர்வம் காட்டுவர்.

பஞ்சம ஸ்தானத்தில் புதன் உச்சம் பெற்றிருப்பதால், மக்கள் செல்வங்களுக்கு வேலை கிடை க்கவில்லையே என்ற கவலை சூழ்ந்திருக்கலாம். தீபாவளி கழிந்ததும் அவர்களின் திற மைக்கேற்ற வேலை கிடைத்து திடீர் மாற்றங்களைக் காண்பர்.

சப்தமச் சனியின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால் சண்டை, சச்சரவுகளில் சிக்காமல் சாமர் த்தியமாகச் செயற்படுவது நல் லது. நிதானப் போக்கே நிம்ம தியை வழங்கும். எந்தக்காரியத் தையும் பதற்ற மின்றி செய்வதன் மூலம் பணிகளை. சிறப்பாக முடி க்க இயலும். பதறாதகாரியம் சித றாது என்பார்கள். எனவே, அந்த அடிப்படையில் நீங்கள் செயற்படு வதன் மூலம் காரிய வெற்றியை வரவழைத்துக்கொள்ளஇயலும்.

இருப்பினும் சனிக்கிழமை தோறும் அனுமன் கவசம்பாடி, ஆஞ்சநேயருக்கு அர்ச்சனைகள் செய்து வழிபட்டு வருவதன்மூலம் இனிய பலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**மாற்றமடையும் புதனால் வரும் மாற்றங்கள்!**

இதுவரை உச்சம் பெற்று சஞ் சரித்து வந்த புதன், துலாம் ராசி யில ஒக்டோபர் 26 முதல்சஞ்சரி க்கப் போகிறார்.

அதன்பிறகு 27 ஆம் திகதி புதன் வலிமை இழக்கிறார்.

தன பஞ்சமாதிபதி வலிமை இழப்பது அவ்வளவு நல்லதல்ல. குடும்பச் செலவுகள் கூடும். பற் றாக்குறை பட்ஜெட் ஏற் படுகிறதே என்று கவலை ப்படுவீர்கள்.

பிள்ளைகளாலும் விரயங்கள் ஏற்படலாம். குழந் தைக ளின் கல்வி வளர்ச்சிக்காகவும், கடல்தாண்டிப்படிக்கும் முயற் சிக்காகவும், உத்தி யோக நலன்கருதி எடுத்த முயற்சிக ளுக்காகவும் செலவிடும் சூழ் நிலை உருவாகும். இருப் பினும் இது போன்ற காலங் களில் வீட்டுப்பராமரிப்புச் செலவுகளை மேற்கொள்வது நல் லது. கட்டிய வீட்டைப் பராமரி ப்பது, பழுது பார்ப்பது போன்ற வற்றிற்காக செலவிடலாம். பழைய கிரைண்டர், மிக்ஸி போன்ற வற்றை கொடுத்து விட்டு, கொஞ் சம் கூடுதலாக தொகை கொடுத்து புதிய மின்சாதனப் பொருட்களை வாங் கலாம். மாதக்கடைசியில் விருச்சிக புத னின் சஞ்சாரத்திற்கு பிறகு சேமி க்க இயலும்.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

நவம்பர் 2 ஆம் திகதி கன்னி ராசியில் சுக்ரன்நீச்சம் பெறப் போகி றார். ராசிநாதன் சுக்ரன் நீச்சம் பெறப் போவது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லை அதிகரி க்கும். மனநிம்மதி குறையும். எதி ரிகளால் ஏமாற்றங்கள் ஏற்படும். உதிரி வருமானங்கள் குறை யும்

**செவ்வாய்பெயர்ச்சிக்காலம்!**

நவம்பர் 5 ஆம் திகதி கன்னி ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி செவ்வாய் பஞ்சமஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பூர்வீக சொத்துக்கள் விரயமாகலாம். பாகப்பிரிவினை கள் சுமுகமாக முடிந்து உங்கள் பங்கிற்கு வந்த சொத்துக்களை உறவினர்களிடமே விற்று விடு வீர்கள். சப்தமாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால், வெளிநாட்டு முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். வீடு வாங்கி குடியேறும் எண்ணம் மேலோ ங்கும். இம்மாதம் நவராத்திரி விழாவை கொண்டாடி சரஸ்வதி பூஜையன்று ஞானசக்தியை யும், விஜயதசமியன்று போரிட்டு வென்ற அம்பிகையையும் வழி பாடு செய்யுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

வரவைக் காட்டிலும் செலவு கூடும் மாதமிது. தாய்வழி ஆத ரவு கிடைக்கும். உடன் பிறப்பு கள் உங்களோடு ஒத்து வருவர். கணவன் - மனைவிக் குள் அந்நியோன்யம் அதிகரிக்க விட்டுக் கொடுத்துச் செல்வதே நல்லது. வீடு மாற்றங்கள் நன்மை தருவதாக இருக்கும். ஆடை, ஆபரணங்கள் சேர்க்கை ஏற்படும். குழந்தைகளின் எதிர் காலநல ன்கருதிஎடுத்த முயற் சியில் வெற்றி கிட்டும்.

சனியின் பார்வை பலத்தால் உடல் ஆரோக்கியத்தொல்லை ஏற்படலாம். கால்-கைபிடிப்பு, மூட்டுவலி போன்றவைகள் உருவாகலாம்.

மருத்துவ ஆலோசனை பெறு வது நல்லது. சனியின் சந்நி தியில் தீப மேற்றி வழிபாடு செய் வது உகந்தது. கண்ணன் வழி பாடு கவலையைப் போக்கும.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1299



# முக்காட்டு அழகி!

ஓர் அடர்ந்த காட்டுக்குள் ஒரு சிறிய வீடு.

அந்த வீட்டில், தாயும் மகளும் வசித்து வந்தார்கள்.

அவள் எட்டு வயது சிறுமி.

எப்போதும் தலையில் சிவப்பு வண்ணக் குல்லாவை அணிந்திருப்பாள்.

அவள் தூங்கும் நேரத்திலும் தலைக்கவசம்போல குல்லா இருக்கும்.

அதனால், 'சிவப்பு முக்காட்டு அழகி' என்று அவளின் பாட்டி செல்லமாக அழைப்பார்.

அந்தக் காட்டின் இன்னொரு பகுதியில் பாட்டி தனியாக வசிக்கி றார்.

ஒருநாள், சிவப்பு முக்காட்டு அழகியை அவளின் அம்மா அழை த்தாள்.

பாட்டிக்கு உடம்பு சரியில்லை யாம். நான் வேலைக்குப் போகணும். அதனால், இந்தக் கூடையில் கேக், ரொட்டி, பழங்கள் வெச்சிருக்கேன். இதைக் கொண்டு போய் பாட்டியிடம் கொடுத்துட்டு வா.

காட்டுக்குள் ரொம்பக் கவனமா போகணும். வழியில் வேடிக்கை பார்க்காதே. யாராவது பேச்சுக் கொடுத்தா லும் காதில் விழாதது போல போயிடணும் என்று புத்தி மதி சொல்லி அனுப்பி வைத்தாள்.

சிவப்பு முக்காட்டு அழகி? கூடையுடன் கிளம்பினாள்.

கொஞ்ச தூரம் போனதும் அம்மா சொன்ன அறிவுரைகளை மறந்து விட்டாள்.

வழியில், கறுப்பு பெர்ரி பழச் செடியைப் பார்த்தாள்.

அதன் அழகான பூக்கள், பழங்களை ரசித்தாள்.

ஆகா... எவ்வளவு அருமையான பழங்கள்!" என்று வாய்விட்டுச் சொன்னாள்.

பழத்தைப் பார்க்கப் பார் க்க எச்சில் ஊறியது.

கூடையைக் கீழே வைத்துவிட்டு, பழுத்துக் கனிந்த பெர்ரி பழத்தைப் பறிக்கப் போனாள்.

பழத்தைப் பறிக்கும் போது, திடீர் என்று அம்மா சொன் னது நினைவுக்கு வந்தது.

பழத்தைப் பறிக்காமல், கூடையை எடுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

கொஞ்ச தூரத்தில், வண்ண வண்ணப் பூக்களைக் கண்டாள். புற்களின் நடுவே கண் சிமிட்டிய ஊதாப் பூக்களைப் பார்த்துப் பரவசப்பட்டாள்.

ஊதாப் பூக்கள், தன்னை இருகரம் நீட்டி அழைப்பது போல உணர்ந்தாள்.


பாட்டிக்கும் இந்தப் பூக்கள் பிடிக்கும் என்று நினைத்தாள்.

உடனே, கூடையைக் கீழே வைத்து விட்டு, பூக்களைக் கொத துக்கொத்தாகப் பறித்துக கொண டாள.

அப்போது, ஒரு வினோதமான ஒலி எழுந்தது. அதைக் கேட்ட சிவப்பு முக்கா ட்டு அழகி பயந்து போனாள்.

இனி எங்கும் நிற்கக்கூடாது. பாட்டி வீட்டுக்குப் போய்வட வேண டும் என்று விரைந்து ஓடினாள்.

அப்பாடா' என்று கொஞ்ச



தூரம் வந்திருப்பாள். மீண்டும் அந்த வினோத ஒலி.

திடுக்கிட்டுத் திரும்பினாள். அங்கே, ராட்சச ஓநாய் ஒன்று நின்றிருந்தது.

அவள் நடுநடுங்கிப் போனாள்.

சிறுமியே, இந்தக் காட்டில் யார் துணையும் இல்லாமல் தனியாகப் போகிறாயே, எங்கே போகிறாய்? என்று அந்த ஓநாய் கேட்டது.

ம்ம்மம்... வந்து... வந்து... என் பாட்டி வீட்டுக்குப் போறேன்.

பாட்டிக்கு கேக், ரொட்டி கொணடு போறேன்.

இந்தப்பாதை முடியும் இடத்தில், பாட்டி வீடு இருக்கு என்று திக்கித் திணறிச் சொன்னாள் சிவ ப்பு முக்காட்டு அழகி.

பாட்டி தனியாவா இருக்காங்க? ஓநாய் மீண்டும் கேட்டது.

மம்ம்... ஆமா.

ஆனா, தெரியாதவங் களுக்கு பாட்டி கதவைத திறக்க மாட்டாங்க என்றாள்.

பாட்டி புத்திசாலிதான்.

உன்னோடு பேசியதில் என க்கு சந்தோஷம்.

நாம மறுபடியும் சந்திப்போம் என்று சொல்லிவிட்டு, ஓநாய் கிளம்பியது. இன்றைக்குச் சரியான வேட்டைதான்.

வேறு பாதையில் போய், பாட்டியை விழுங்கி விட்டு, இந்தச் சிறுமி வரும் வரைக் காத்திருந்து, இவளையும் லபக் செய்து விட வேண்டும்' என்று ஓநாய தீர்மானித்தது.

10.2015
21

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

1520 - பேர்டினணட் மகெலன் சிலியில் புதிய நீரிணை ஒன்றைக் கண்டுபிடித்தார். இது பின்னர் மகலன் நீரிணை எனப் பெயர் பெற்றது.

1805 - டிரபல்கார் என்ற இடத்தில் பிரித்தானியப் படைகள், பிரெஞ்சு, மற்றும் ஸ்பானியக் கூட்டுப் படைகளின் கடற்படையை வென்றன. இவ்வெற்றி பிரித்தானியக் கடற்படையை 20ம் நூற்றாண்டு வரை இப் பிராந்தியத்தின் பெரும் கடற்படை வல்லரசாக ஆக்கியது.

1805 - ஊல்ம் என்ற இடத்தில் ஆஸ்திரியா நெப்போலியனின் பெரும் இராணுவத்திடம் சரணடைந்தது. நெப்போலியன் 30,000 பேரைச் சிறைப்பிடித்தான்.

1824 - ஜோசப் ஆஸ்ப்டின் போர்ட்லண்ட் சிமெந்துக்கான காப்புரிமம் பெற்றார்.

1837 - அமெரிக்கப் பழங்குடித் தலைவன் ஒசியோலா கைது செய்யப்பட்டான்.

1854 - புளோரன்ஸ் நைட்டிங்கேல் மற்றும் 38 தாதிகள் கிரிமியன் போர் முனைக்கு அனுப்பப்பட்டனர்.

1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கூட்டமைப்பினரிடம் வேர்ஜீனியாவில் தோற்றனர். ஆபிரகாம் லிங்கனின் நெருங்கிய நண்பர் "எட்வேர்ட் பேக்கர்" கொல்லப்பட்டார்.

1876 - யாழ்ப்பாணத்தில் காலரா நோய் வேகமாகப் பரவியது.

1879 - தொமஸ் எடிசன் தனது முதலாவது தொழில் ரீதியான மின்குமிழைப் பரிசோதித்தார். இது 13 மணி நேரம் எரிந்தது.

1892 - உலக கொலம்பியக் கண்காட்சி சிக்காகோவில் அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது. ஆனாலும், கட்டட வேலைகள் பூர்த்தியடையாத காரணத்தால் இக்கண்காட்சி 1893, மே 1 ஆம் நாளிலேயே பொதுமக்களின் பார்வைக்குத் திறக்கப்பட்டது.

1895 - ஜப்பானியப் படைகளின் முற்றுகையினால் போர்மோசா குடியரசு வீழ்ந்தது.

1944 - கிறகுஜேவாச் படுகொலைகள்: நாசி ஜெர்மனியப் படைகள் 7000 சேர்பியரை படுகொலைச் செய்தனர்.

1944 - இரண்டாம் உலகப் போர்: முதலாவது கமிகசே ஜப்பானிய விமானத் தற்கொலைத் தாக்குதல், அவுஸ்திரேலிய கப்பல் மீது நடத்தப்பட்டது.

1945 - பிரான்சில் முதற்தடவையாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1966 - வேல்சில் அபெர்ஃபான் என்னும் கிராமத்தில் நிலக்கரி கழிவுகள் அடங்கிய பாறை வீழ்ந்ததில் 116 பாடசாலைச் சிறுவர்கள் உட்பட 144 பேர் கொல்லப்பட்டனர்.

1969 - சோமாலியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் சியாட் பார் பதவியைக் கைப்பற்றினார்.

1983 - நிறைகளுக்கும் அளவைகளுக்குமான 17வது அனைத்துலகக் கருத்தரங்கில், முழுமையான வெற்றிடத்தில், துல்லியமாக 1⁄299,792,458 வினாடி நேரத்தில் ஒளி செல்லும் பாதையின் நீளமாக ஒரு மீட்டர் வரையறுக்கப்பட்டது.

1987 - ஈழப்போர்: யாழ்ப்பாணம் மருத்துவமனையில் இந்திய இராணுவத்தினர் சுட்டதில் மருத்துவர்கள், ஊழியர்கள், நோயாளிகள் உட்பட 21 பேர் கோல்லப்பட்டனர்.

1994 - சியோல் நகரில் பாலம் ஒன்று உடைந்து வீழ்ந்ததில் 32 பேர் கொல்லப்பட்டனர்.

2003 - குறுங்கோள் ஏரிசின் படங்கள் எடுக்கப்பட்டன.

**பிறப்புக்கள்**

1833 - அல்பிரட் நோபல், சுவீடன் நாட்டு கண்டுபிடிப்பாளர், நோபல் பரிசை ஆரம்பித்தவர் (இ 1896)

1925 - சுர்ஜித் சிங் பர்னாலா, இந்திய அரசியல்வாதி

1937 - தேங்காய் சீனிவாசன், தமிழ் நாடக, திரைப்பட நடிகர், (இ 1988)

**இறப்புகள்**

1835 - முத்துசுவாமி தீட்சிதர், கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவர் (பி. 1775)

2014 - [illegible] (இ 1916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் தூசியைக் கிளப்பி விடுகிறோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகிறோம். – ஓர் அறிஞர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk


## வெளிநாட்டு நீதிபதிகள் வராவிட்டால் வெளிநாட்டுப் படைகள் வரும்

பொதுநலவாயம் மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளின் பிரசன்னத்துடன் உள்ளக விசாரணை நடைபெறுமாக இருந்தால், அது நாட்டின் அரசியல் அமைப்பை மீறும் செயலாக இருக்கும் என்றும் உள்ளக விசாரணையில் பங்கேற்க வெளிநாட்டு நீதிபதிகள் வருவார்களாயின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் மகிந்த அணியின் முக்கியஸ்தரான தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை நடத்துவது தொடர்பான சில நிபந்தனைகள் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எடுக்கப்பட்டிருந்தன.

வன்னியில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்று தமிழ் மக்கள் வலியுறுத்திய நிலையில், இலங்கை அரசும் அமெரிக்காவும் இணைந்து ஒரு திட்டத்தை தீட்டின.

உள்ளகப் பொறிமுறைக்கு ஈடான விசாரணையை நடத்துவதென்றும் இதில் சர்வதேச நீதிபதிகள் பங்கேற்க முடியும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் தமிழ் மக்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தது. 2014ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்று வலியுறுத்திய அமெரிக்கா, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக களத்தில் இறங்கி மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளை தனது தீர்மானத்துக்கு ஆதரவளிக்கச் செய்தது.

அமெரிக்காவின் இந்த முயற்சி வெற்றி அளிக்க வேண்டும் என நேர்த்தி வைத்த தமிழ் மக்கள் ஏராளம்.

இலங்கை மண்ணில் சிறுபான்மை இனம் என்பதற்காக தமிழர்கள் கொல்லப்பட்டு இன அழிப்பு நடந்ததற்கான நீதி, சர்வதேச விசாரணை மூலமாகவே கிடைக்கும் என தமிழ் மக்கள் முழுமையாக நம்பியிருந்தனர். தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு அமெரிக்காவின் முயற்சியும் உரமூட்டியது.

எனினும் 2015ஆம் ஆண்டில் மகிந்த ஆட்சி முற்றுப்பெற்று மைத்திரி–ரணில் ஆட்சிக்கு வந்த போது அமெரிக்காவும் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது.

ஆக, போர்க்குற்ற விசாரணை என்பது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவன்றி, இலங்கையின் ஆட்சியில் யார் இருக்கின்றார்களோ அவர்களைப் பொறுத்துத்தான் விசாரணை என்பதாக நிலைமை இருந்தமை மிகப் பெரும் நம்பிக்கைத் துரோகமாகும்.

சரி, இவைதான் நடக்கும் என்பது தெரிந்த விடயம் என்றால், அதற்கும் முன்னைய ஆட்சியில் இருந்தவர்கள் விடுவதாக இல்லை.

உள்ளக விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்கக் கூடாது. அவ்வாறு பங்கேற்றால்– அவர்கள் எம்நாட்டுக்குள் வந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற வீராப்புக்களும் முழங்கிக் கொள்கின்றன.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டதும் இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியது, மின்சாரக் கதிரையில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றி விட்டேன் என்பதாகும். இதையே ஜனாதிபதி மைத்திரியும் கூறினார்.

ஆக, உள்ளக விசாரணை மூலம் போர்க்குற்றவாளிகள் காப்பாற்றப்பட்டுள்ளனர் என்பது உறுதியாகின்றது. நிலைமை இவ்வாறாக இருக்க, வெளிநாட்டு நீதிபதிகளின் வருகையை தினேஸ் குணவர்த்தன போன்றவர்கள் எதிர்த்தால் அதன் விளைவு வெளிநாட்டுப் படைகள் இங்கு வரவேண்டியதாக இருக்கும்.

## விஜயதசமி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் விஜயதசமியும் வித்தியாரம்பமும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மன்றத்தின் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் மன்றம் நடத்தி வரு கின்ற வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், வீணை போன்ற பரத நாட்டிய வகுப்புக்களில் புதிதாக சேர விரும்பும் மாணவர்கள் நாளைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்து பதிவுகளை மேற் கொள்ளுமாறு மன்றத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (இ-5)

✦ ✦ ✦ ✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

மேலைத்தெல்லி விழிசிட்டி வீமசிட்டி வித்தகபுரம் சிவகுருநாதசுவாமி ஆலயத்தில் நவராத்திரி காலை பூஜையில் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு சரஸ்வதி விசேட பூஜையும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி க்கு விஜயதசமி நிகழ்வும் இடம்பெறும்.

விஜயதசமி நிகழ்வைத் தொடர்ந்து மானம்பூ உற்சவமும் இடம்பெறும். (இ-5)

## பட்டப் பெறுபேற்றை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம் ஊடாக கடந்த வருடம் நடைபெற்ற கலைமாணி இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் பட்டம் பெறுவோர் பட்டியல் வெளியாகியுள்ளது. இவ் வருடம் 247 வெளிவாரி மாணவர்கள் கலைமாணிப்பட்டம் பெறுவதுடன் 10 பேர் இரண்டாம் வகுப்பு சித்தியும் பெற்றுள்ளனர். மாணவர்கள் தமது பட்டப் பெறுபேற்றை இன்று புதன்கிழமை தொடக்கம் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலைய இணைப்பாளர் கலாநிதி பா.நிமலதாசன் அறிவித்துள்ளார்.

அத்துடன் பட்டம் பெறுவோர் பட்டியலை www.jfn.ac.lk/codl எனும் இணையத்தள முகவரியூடாகவும் பார்வையிட முடியும். (இ-5)

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப உயர் நிறுவனத்தின் 2015ஆம் ஆண்டுக்கான 2ஆம் பருவகால மீள்பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக தொழில்நுட்பவியல் நிறுவன உதவிப் பதிவாளர் யோ.ரிசாந்தன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பப்படிவங்களை தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் பெற்று பூர்த்தி செய்த நிர்வாகப் பகுதியில் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் நவம்பர் மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்களால் பூரணப்படுத்தி தரப்படல் வேண்டும். இப்பதிவுகள் நேற்றைய தினம் தொடக்கம் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு சந்திரபுரம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான நவராத்திரிகால விசேட சொற்பொழிவு தினமும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை ஆலய பரிபாலன சபைத் தலைவர் செ. ஞானசேகரம் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று புதன்கிழமை மகிடாசுரமர்த்தினி திருவருள் எனும் விடயம் தொடர்பில் சைவப்புலவர் நித்திய தசீதரன் சொற்பொழிவை வழங்கவுள்ளார். (இ-5)

## ரவிராஜ் கொலையின் சந்தேகநபர்களுக்கு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய உத்தரவு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான நடராஜா ரவிராஜ் கொலை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 5 இராணுவ வீரர்களுக்கு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று இந்த உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2006 நவம்பர் மாதம் 10ஆம் திகதி நடராஜா ரவிராஜ் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 5 இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் ஆட்டோவும் பொலிஸார் காவலில் வைக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## பிரச்சினைகள் நீடிக்கின்றன அமைச்சர் சம்பிக்க ஆதங்கம்

(கொழும்பு)

அரசியல்வாதிகள் மற்றும் பொது மக்களின் எதிர்ப்புகள் காரணமாக நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே இருப்பதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பல பிரச்சினைகளை தீர்க்க முற்படும் போதும் நல்லெண்ண வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கும் போதும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அரசியல் வாதிகளும் பொதுமக்களும் உள்ளனர்.

இதனால் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் மேலும் சிக்கலுக்குள்ளாகியிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## பாலியல் தொழிலாளர்கள் பாதுகாப்புக் கோரிக்கை

இலங்கையில் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பைத் தருமாறு, இலங்கைப் பாலியல் தொழிலாளர் சங்கம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கோரியிருக்கிறது.

செய்தியாளர்களிடம் பேசிய, அந்த சங்கத்தின் துணைத் தலைவி பி.மகேஸ்வரி தற்போது பாலியல் தொழிலில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் ஈடுபடுவதாகத் தெரிவித்தார்.

பலத்த வறுமை காரணமாகவே பெண்கள் இந்த தொழிலில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்த அவர், சட்டத்தில் இருக்கின்ற சில அவகாசங்களை பயன்படுத்தி பொலிஸார் அவர்களைக் கைது செய்து வருவதாக குற்றம் சாட்டினார்.

எனவே பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு பாதுகாப்பைத் தரக்கூடிய சட்ட திருத்தங்களை அரசாங்கம் கொண்டுவரவேண்டும் என்று பி.மகேஸ்வரி கூறினார்.

தங்களது உரிமைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி எதிர்காலத்தில் பல போராட்டங்களை நடத்த தங்களது சங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

## கஞ்சா கடத்திய பெண் கைது

தனது உடம்புடன் சேர்த்து இறுகக் கட்டிக் கொண்டு கஞ்சா பொட்டலங்களை கடத்திச் சென்ற பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் ஹொரணை பிரதேசத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

மொரட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த பெண், தனது வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கும் அழைப்புகளுக்கு ஏற்ப உடம்பில் மறைத்து கஞ்சாவை எடுத்துச் சென்று விநியோகம் செய்யும் நடவடிக்கையில் நீண்ட காலம் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று கஞ்சாவை எடுத்துக் கொண்டு அவர் ஆட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த நிலையில் பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது முழங்காலுக்கு சற்று மேலே பாதப் பகுதியில் மறைத்து வைத்திருந்த நிலையில் பெருந்தொகையான கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-11)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### இறைவனை அடைய பல வழிகள்



✦ பாலபருவத்தில் மணமகன், மணமகள் பொம்மைகள் வைத்து விளையாடுவர். ஆனால், திருமணம் செய்தவர்கள் பொம்மைக் கல்யாணம் விளையாடும் குழந்தைகளை பரிகாசிக்க வேண்டியதில்லை. பொம்மைக் கல்யாணம் என்பது விக்ரக ஆராதனை போன்றது.

✦ ஈஸ்வர அனுபூதி வாய்த்தவர்கள் விக்ரக வழிபாட்டை விட்டு விடுவதில் தவறொன்று மில்லை. மாடிக்கு சென்றடைவது நமது குறிக்கோள் என்றால் அதற்கு பலவழிகள் உள்ளன.

✦ கல்லால் அமைத்த படியில் அங்கு ஏறிச் செல்லலாம். மரப்படியிலும் அதை அடைய முயற்சிக்கலாம். ஏணியிலும் ஏறலாம். மூங்கிலால் சாரம் போட்டும் மாடியை அடையலாம். அதுபோல, கடவுளும் நமக்கு எட்டாத உயரத்தில் இருந்தாலும் அவரை அடைய வழிமுறைகள் பல உள்ளன.


✦ எந்த வழிமுறையைப் பின்பற்றினாலும் விடாமுயற்சியை மட்டும் விட்டு விடக்கூடாது. கசிந்துருகி கடவுளை வழிபடுவது என்பது விடியற்பொழுதிற்கு நிகரானது. விடியற்காலையைத் தொடர்ந்து சூரியோதயம் உண்டாவதைப் போல, அருள்நாட்டத்தைத் தொடர்ந்து கடவுள் காட்சியைக் காணலாம்.


✦ மனதை ஈசனிடம் யோகம் பண்ணுவதுதான் குறிக்கோள். எக காரணத்தை முன்னிட்டும் ஈஸ்வர சிந்தனை மனதை விட்டு அகன்று போய்விடலாகாது. சிவலிங்கத்தின் மீது கட்டியிருக்கும் ஜலதாரை போன்று மனம் இடைவிடாது ஈசனிடத்திலேயே போய்க் கொண்டிருக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோலூன்றிப் பாய்தல் போட்டியில்

## அருணோதய மாணவர்கள் சாதனை



தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோலூன்றிப் பாய்தலில் அருணோதயக்கல்லூரி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

அண்மையில் தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்ற தேசிய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியில் அருணோதய மாணவர்களான கே.நப்தலி ஜோசன் 17 வயதுப்பிரிவு கோலூன்றிப் பாய்தலில் 4.21 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தினை பெற்றதோடு புதிய சாதனையும் படைத்தார்.

பி.நிதூசன் 21 வயதுப்பிரிவு கோலூன்றிப் பாய்தலில் 4.10 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கம் வென்றார். 21வயது பெண்கள் பிரிவில் ஐ.மேரி பவர்சனா 2.80 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தினை பெற்றுக் கொண்டார்.

21வயது கோலூன்றிப் பாய்தலில் எம்.சார்ள்ஸ் அன்ரனி 3.80 மீற்றர் உயரம் பாய்ந்து மூன்றாமிடத்தையும் பி.லாவண்ணன் 21 வயது ஆண்கள் பிரிவில்கோலூன்றிப்பாய்தலில்3.80 மீற்றர் உயரம் பாய்ந்து வர்ண விருதினை பெற்றுக்கொண்டுள்ளார். (க)

# அன்ரனிஸ், சென்.ஜோன்ஸ் இறுதி ஆட்டத்திற்கு தகுதி

நெடுந்தீவு மத்திய சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரில் அன்ரனிஸ், சென்.ஜோன்ஸ் அணிகள் இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் நெடுந்தீவு அன்ரனிஸ் அணியை எதிர்த்து நெடுந்தீவு அன்ரனிஸ் யுத் அணி மோதிக் கொண்டது. அதில் நெடுந்தீவு அன்ரனிஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் அணியை எதிர்த்து நெடுந்தீவு உதய சூரியன் அணி மோதிக் கொண்டது. இதில் நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (க)

# இன்றைய போட்டிகள்

மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் மாகாணத்தின் மகுடம் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் வடமராட்சி யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குருநகர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் மாலை 4மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் முல்லைத்தீவு செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வடமராட்சி டயமன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (க)

# மைக்கல் உதைபந்தாட்ட தொடர் அடுத்த சுற்றில் நியூட்டன், பொம்மர்ஸ்




மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்திவரும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளில் நியூட்டன், பொம்மர்ஸ் அணிகள் வெற்றிபெற்று அடுத்த சுற்றுப்போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

முதலாவது போட்டியில் வடமராட்சி நியூட்டன் அணியை எதிர்த்து வலிகாமம் சென்.தோமஸ் அணி மோதியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 1-3 என்ற கோல்கணக்கில் வடமராட்சி நியூட்டன் அணி வெற்றி பெற்றது

இரண்டாவது ஆட்டத்தில் வடமராட்சி வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து கிளிநொச்சி சென்.தாரகை அணி மோதியது. இந்தப்போட்டியில் 0-5 என்ற கோல்கணக்கில் வதிரி பொம்மர்ஸ் அணி மிக இலகுவாக வெற்றி பெற்றது.

இரு அணிகளும் அடுத்த சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன. (க)

## கலைவாணி வெற்றி

மைலோ கிண்ண உதைபந்தாட்டத்தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல் போட்டியுடன் வெளியேறியது ஞானமுருகன் அணி. நாவாந்துறை கலைவாணி அணியுடனான போட்டி 1-1 சமநிலையில் முடிவுற்றதால் தண்ட உதை மூலம் 2-3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது.

ஞானமுருகன் அணி தமக்கு கிடைத்த பல கோல் அடிக்கும் வாய்ப்புகளை எல்லாம் தவறவிட்டதே தோல்விக்கு காரணம். தொடரின் இறுதி வரை செல்லும் என ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஞானமுருகன் அணி முதல் போட்டியுடன் வெளியேறியது ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (க)

# மக்கள் நாயகனாக சங்கா தெரிவு

## மத்யூசுக்கும் 4 விருதுகள்




சர்வதேச கிரிக்கெட் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களை பாராட்டும் வகையில் இலங்கை கிரிக்கெட் வாரியம் விருது வழங்கி சிறப்பித்து வருகிறது.

அதன்படி கடந்த 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம வரை வீரர்களின் செயற்பாடு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் இலங்கை அணித்தலைவர் மத்யூஸ் 4 விருதுகளை வென்று அசத்தியுள்ளார்.

இந்த வருடத்திற்கான சிறந்த வீரருக்கான விருது, சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர், சிறந்த ஒருநாள் துடுப்பாட்ட வீரர் மற்றும் சிறந்த ஒருநாள போட்டியின் சகலதுறை வீரர் என மொத்தம் 4 விருதுகளை பெற்றுள்ளார்.


இவர் சிறந்த வீரருக்கான விருதை பெறுவது இது 2 ஆவது முறையாகும. அதாவது கடந்த ஆண்டும் சிறந்த வீரருக்கான விருதை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த காலத்தில் மத்யூஸ் டெஸ்ட் போட்டியில் 1160 ஓட்டங்களும், 18 ஒருநாள் போட்டியில் 1244 ஓட்டங்களும், 36 விக்கெட்டுக்களும் கைப்பற்றியுள்ளார். அதேபோல சிறந்த டெஸ்ட் பந்து வீச்சாளர் விருது ஹெராத்திற்கும், சிறந்த ஒருநாள் பந்து வீச்சாளர் விருது அஜந்த மெண்டீசுக்கும் வழங்கப்பட்டது.

இருபது-20 போட்டிகளின் சிறந்த இருபது-20 துடுப்பாட்ட வீரர் விருது குஷால் பெரேராவிற்கும், சிறந்த பந்து வீச்சாளர் விருது நுவான் குலசேகராவிற்கும் கிடைத்துள்ளது.

மேலும், இந்த ஆண்டின் மக்கள் தெரிவு விருது குமார் சங்கக்காரவிற்கும், வளர்ந்து வரும் வீரருக்கான விருது குஷால் பெரேராவிற்கும் வழங்கப்பட்டுள்ளது. (க)

# மேசைப்பந்தாட்ட போட்டி வல்வை மாணவிகள் வெண்கலம்



வடமாகாண தரப்படுத்தல் மேசைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டியில் வல்வைமகளிர் பாடசாலைமாணவிகள வெண்கலப்பதக்கம் பெற்றுள்ளனர்.

போட்டியில் வல்வை மகளிர் மாணவிகள் வெண்கலப்பதக்கம் உபட தரப்படுத்தல் தகைமைச்சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் கடந்த 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் வயதுப்பிரிவின் அடிப்படையில் போட்டி நடைபெற்றது. 10 வயது 12,15,18, 21 Women single என நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மாணவிகளான ஸ்ரீ.கனுஜா 21 வயதுப்பிரிவில் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும, Women single பிரிவில் தரப்படுத்தல் தகைமைச்சான்றினையும் பெற்றுள்ளார், அ.மேரி ஆன் திரேசா 21 வய துப்பிரிவு மற்றும் Women single பிரிவில் தகைமைச்சான்றினைப் பெற்றுள்ளார், ந.கிருஜா 21 வயதுப் பிரிவில் தகைமைச் சான்றினைப் பெற்றுள்ளார், மு.வைஷணவி 12 வயதுப் பிரிவில் தகைமைச் சான்றினைப் பெற்றுள்ளார், சி.சுபர்ணா 12 வயதுப் பிரிவில் தகைமைச்சான்றிதழைப் பெற்றுள்ளார்.

2013, 2014 ஆம் ஆண்டுகளில் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டிகளில் ஸ்ரீ.கனுஜா, சி.நிசாந்தினி, ர.பிருதா, ஜெ.காஞ்சனா தேசிய மட்ட தரப்படுத்தல் தகைமைச் சான்றிதழ்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒஸ்லோ துணை மேயராக ஈழத் தமிழ்ப் பெண் தெரிவு



(ஒஸ்லோ)

நோர்வே தலைநகர் ஒஸ்லோ மாநகர துணை மேயராக ஈழத்தமிழ் பெண்ணான ஹம்சாயினி குணரட்ணம் தெரிவு செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற இவர், புதிதாக பதவியேற்கவுள்ள நகரசபை நிர்வாகத்தின் துணை மேயராக தெரிவாகியுள்ளார்.

தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த ஹம்சாயினி கட்சியின் ஒஸ்லோ மாநகர கிளையின் துணைத் தலைவராக பதவி வகித்து வருவதுடன், தொழிலாளர் கட்சியின் இளைஞர்பிரிவு தலைவராகவும் பதவி வகித்திருந்தார்.

27 வயதான இவர், 2011ஆம் ஆண்டு நோர்வேயில் தொழிலாளர் கட்சியின் இளைஞர் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலிலிருந்து தப்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தாக்குதலில் பொதுமக்கள் சிலருடன் தொழிலாளர் கட்சியின் இளைஞர் பிரிவைச் சேர்ந்த 72 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

ஒஸ்லோவில் மேற்கொள்ளப்படும் தாயகம் தொடர்பான வேலைத்திட்டங்களிலும் ஹம்சாயினி தனது பங்களிப்பை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மீனவர்களின் வலையில் இராட்சத இரும்பு உருளை!

## தமிழக மீனவரிடையே பதற்றம்

(சென்னை)

பாம்பன் அருகே உள்ள கடல்பகுதியில் தமிழக மீனவர்கள் வலையில் சிக்கிய இரும்பு உருளை குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றன.

தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் முந்தல்முனை துறைமுகப் பகுதியிலிருந்து மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற பாம்பன் பகுதி மீன வர்களின் வலையில் இராட்சத இரும்பு உருளை சிக்கியது.

இதனால் வலை சேதமடைந்த நிலையில் கரைக்கு கொண்டுவந்து சேர்த்தனர். இதனையடுத்து கடலோர பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொலிஸார் இரு ம்பு உருளையை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

சுமார் 15 அடி நீளமும் 4 அடி விட்டமும் கொண்ட உருளை சுமார் ஐந்துடன் எடை கொண்டதாக இருக்கும் என பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர்.

மீனவர்கள் வலையில் சிக்கிய இரும்பு உருளை கப்பல்களில் மிதவையாகவோ அல்லது எரிபொருள் நிரப்பப்படும் உருளையாகவோ பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் தெரியவந்துள்ளது.

மேலும் உருளையில் காஸ் நிரப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளதால் பொலிஸார் உருளையை பாதுகாப்பான இடத்தில் வைத்து பாதுகாத்து வருகின்றனர்.

கடந்த 13ஆம் திகதி இராமேஸ்வரம் நரிக்குழி கடல்பகுதியில் மர்மான முறையில் இலங்கையைச் சேர்ந்த பைபர் படகு கரை ஒதுங்கியது.

இது குறித்து இதுவரை எந்த தகவலும் தெரியாத நிலையில் மீண்டும் இராட்சத இரும்பு உருளை சிக்கியதால் இராமநாதபுரம் கடலோரப பகுதிகளில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (எ-11)

# சமாதான முயற்சி குறித்து நோர்வேயில் நூல் வெளியீடு!

(ஒஸ்லோ)

இலங்கையில் அமைதியை ஏற்படுத்த நோர்வே மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பில் பி.பி.சியின் முன்னாள் ஊடகவியலாளர் மார்க் சோல்டர் எழுதியுள்ள நூல் இம்மாதம் 28ஆம் திகதி லண்டனில் வெளியிடப்படவுள்ளது.

இந்நூலுக்கு தேவையான தகவல்களை இலங்கை அமைதி முயற்சிகளில் நோர்வேயின் சார்பில் பங்கெடுத்த அந்த நாட்டின் முன்னாள் அமைச்சரும், இலங்கைக்கான சிறப்புத் தூதுவராகப் பணியாற்றியவருமான எரிக் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வேயின் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார ஹெல்கிசனும் வழங்கியுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற போரை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்த நோர்வே மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பாக விபரிக்கப்பட்டுள்ள இந்த நூல் எதிர்வரும் 28ஆம் திகதி லண்டனில் உள்ள கீழைத்தேய மற்றும் ஆபிரிக்க கற்கைகளுக்கான பாடசாலையில் வெளியிடப்படவுள்ளது.

இதையடுத்து இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் நூலாசிரியர் மார்க் சோல்டர், எரிக் சொல்ஹெய்ம் மற்றும் விதார் ஹெல்கிசன் உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதேவேளை இந்நூல் எதிர்வரும் 2 ஆம் திகதி நோர்வேயின் ஒஸ்லோ நகரில் வெளியிடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

# வாஸ் குணவர்த்தன வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதியளிப்பு

(கொழும்பு)

அரச தரப்பு சாட்சியாக மாறிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. குறிப்பிட்ட காலவரையறைக்கு உட்பட்ட வகையில் வெளிநாடு சென்று நாடு திரும்ப இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்காலிக அடிப்படையில் சஜின் வாஸ் குணவர்த்தனவின் கடவுச்சீட்டை நீதிமன்றம் விடுவித்துள்ளது. எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையில் சிங்கப்பூருக்கு சென்று திரும்ப இவ்வாறு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பலப்பிட்டிய இந்த அனுமதியை வழங்கியுள்ளார். தலா 10 மில்லியன் ரூபாய் இரண்டு ரொக்கப் பிணையின் அடிப்படையில் கடவுச்சீட்டு விடுவிக்கப்பட்டுள்ளது. நாடு திரும்பியவுடன் மீளவும் கடவுச்சீட்டை ஒப்படைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராபஜக்ஷ ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான பெருந்தொகை வாகனங்களை துஷ்பிரயோகம் செய்ததாக சஜின் வாஸ் குணவர்த்தன நீண்டகாலம் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன் விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# அலரிமாளிகை சி.சி.ரிவி வீடியோ திருட்டு மகிந்தவின் ஊடகச் செயலரிடம் விசாரணை

ஜனாதிபதி செயலகத்தில் காணாமல் போன 3 ஆயிரம் வீடியோ கெசட்டுக்கள் குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊடக செயலாளர் பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் ஜனாதிபதி செயலகத்தில் காணப்பட்ட சி.சி.ரி. வியின பதிவுகள் 3 ஆயிரம் வீடியோ கெசட்களை காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், குறித்த முறைப்பாடு தொடர்பிலேயே மகிந்த ராஜபக்ஷவின் தற்போதைய ஊடகச் செயலாளர் ரொஹான் வெலிவிட்டவிடம் நேற்று ஹோமகம பொலிஸார் வாக்குமூலமொன்றை பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய நேற்றுக் காலை பொலிஸ நிலையத்திற்கு சென்று வாக்குமூலம் அளித்த அவர், ஜனாதிபதி ஊடகப் பிரிவில் காணப்பட்ட ஒரு தொகுதி வீடியோ கெசட்களை காணவில்லை எனவும் அவற்றை தான் திருடிச் சென்றுள்ளதாகவும் தற்போதைய ஊடகப் பிரிவினர் முறைப்பாடு செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

எனினும், தாம் மகிந்த ராஜபக்ஷ ஆட்சி வகித்த காலத்தில் ஊடகப் பிரிவில் பணியாற்றவில்லை எனவும், இணைப்புச் செயலாளராக மாத்திரமே கடமையாற்றியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த வீடியோ கெசட்டுக்கள் காணாமல் போன சம்பவத்திற்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும் கூறினார். (எ-12)

## ஐ.நா விசாரணை அறிக்கை...

இந்த அறிக்கையுடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு மற்றும் நிசங்க உடலகம ஆணைக்குழு ஆகியவற்றின் அறிக்கைகளும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 30ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானம் தொடர்பாக நாளை வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவுள்ள நிலையிலேயே, அரசாங்கம் இந்த மூன்று அறிக்கைகளையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

அதேவேளை, இலங்கையின் அனுசரணையுடன் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் கடந்த மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன கோரிக்கை விடுத்தபோது, இத்தீர்மானத்தின் பிரதியை நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக பிரதமர் ரணில விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (எ-11)

# அரியாலை மனித எச்சம் விசாரணைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலை பகுதியில் கடந்த சில தினாங்களுக்கு முன்னர் எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான சட்ட வைத்திய அதிகாரியின் விசாரணைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில தினாங்களுக்கு முன்னர் யாழ். கெலன் தோட்டம், நெடுங்குளம் கொழும்புத்துறை பகுதியில் இருந்து சந்தேகத்திற்கு இடமான எலும்பு எச்சங்கள் மற்றும் சில சான்று பொருட்கள் மீட்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் குறித்த எலும்பு எச்சங்கள் நீதிபதி முன்னிலையில் மீட்கப்பட்டு அதன் காலம் தொடர்பான விடயங்களை அறிய எலும்பு எச்சங்களை தொல்பொருள் திணைகளத்திடம் ஒப்படைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இதன் தொடர்ச்சியாக மீட்கப்பட்ட எச்சங்கள் ஆணுடையதா? பெண்ணுடையதா? மரணம் எதனால்? எப்போ நிகழ்ந்திருக்கும்? என்ற விடயங்களை அறிந்து கொள்ளும் வகையில் இந்த விசாரணைகள் நடைபெறும் என வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (எ-12)

# பழமைவாய்ந்த விக்கிரகங்கள் கீரிமலையில் திருட்டு!

(யாழ்ப்பாணம்)

கீரிமலை தீர்த்தக்கரைக்கு அண்மையில் அமைந்துள்ள குழந்தைவேல் சுவாமி சமாதி சிவன் கோவில் உள்ள புராதன கால நந்தி கருங்கற் சிலை மற்றும் பிள்ளையார் விக்கிரகங்கள் என்பன காணாமல் போயுள்ளதாக காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை மின்சாரம் தடைப்பட்டிருந்த நேரம் இந்த விக்கிரகங்கள் காணாமல் போயுள்ளதாகவும் இவை 100 வருடங்களுக்கு மேலான பழமை வாய்ந்தவை எனவும் ஆலய புண ருத்தாரண சபையினர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அப்பகுதியில் சட்ட விரோதமான முறையில் மரங்கள் வெட்டப்பட்டு வருவதாகவும் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்பு நீதிமன்ற விசாரணைகளை...

யில் இலங்கை தொடர்பாக நிறை வேற்றப்பட்ட தீர்மானம் குறித்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக் கப்பட்டு வருகின்றன.

கலப்பு நீதிமன்ற முறைமையில இலங்கையின் சுயாதீன செயற் பாடுகள் பாதிக்கப்படும் எனவும் அனைத்துலக விசாரணையே பலப்படுத்தப்பட்டுள்ளது எனவும் ஒரு தரப்பினர் கருத்துக்களை பரப்பி வருகின்றனர்.

அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த கலப்பு நீதிமன்ற விசாரணை முறைமை அனைத்துலக கட்டுப்பாட்டின் கீழ் நடைபெறும் என்ற கருத்துக்களை யும் முன்வைத்துள்ளனர்.

ஆனால் இந்த கலப்பு நீதிமன்ற முறைமை அனைத்துலக விசா ரணை அல்ல.

அதேபோல் இந்த விசாரணை களின் போது அனைத்துலக உத விகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதனூடாக ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவி களையே குறிப்பிட்டுள்ளனர்.

அதைத் தவிர வேறு எந்தவித அனைத்துலக தலையீடுகளும் இந்த விசாரணைகளின் போது இருக்காது.

மக்களை குழப்பவும் அரசாங் கத்தின் மீது முரண்பாட்டுக் கருத் துக்களை ஏற்படுத்தவுமே சிலர் முயற்சிக்கின்றனர்.

இலங்கை மீது கடுமையான அனைத்துலக அழுத்தம் ஏற்படவும் இராணுவத்தினர் மீது விசாரணை களை மேற்கொள்ளவும் பிரதான காரணம் மகிந்த ராஜபக்ஷவே.

அன்று நாம் இராணுவத்தை காப்பாற்ற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம்.

அதேபோல் அனைத்துலக விசா ரணை தேவையென அனைத் துலக தரப்பு அழுத்தம் கொடுக்க ஆரம் பித்த காலகட்டத்தில் இலங்கை யில் பலமான உள்ளக பொறி முறைகளை கையாண்டிருந்தால் இன்று இவ்வாறான அழுத்தங்கள் ஏற்பட்டிருக்காது.

ஆகவே எம்மீது குற்றம் சுமத் தும் மகிந்த அணியினர் முதலில் மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்.

அன்று சரியான வேலைத்திட் டங்களை கையாண்டிருந்தால் இன்று நாம் அனைவரும் இலகு வான முறையில் எமக்கு எதிரான அழுத்தங்களை சமாளித்திருக்க முடியும்.

இன்று பிரதமர் ரணில் மற்றும் எமது அரசாங்கம் இந்த விடயங் களை மிகச்சரியாக கையாண்டு வருகின்றது.

எமது இராணுவத்தை விசா ரணைக்கு உட்படுத்த எந்தவித தேவையும் எமக்கு இல்லை.

முன்வைக்கப்பட்டிருக்கும் குற் றச்சாட்டுக்களுக்கு அமைய இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களை விசாரிக்க வேண்டியது எமது கடமையாகும்.

இலங்கையின் சட்டம் அனை வருக்கும் சமமானது. அதேபோல் அனைவரும் எமது சட்டங்களுக்கு கட்டுப்பட்டாக வேண்டும்.

மேலும்இராணுவம்மீது அனைத் துலக அமைப்புகள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் இந்த விசாரணை முறைமைகள் தொடர் பிலும் நானே இராணுவத்தை தெளிவுபடுத்தி வருகின்றேன்.

அதேபோல் இவர்கள் தொடர் பிலான சட்ட உதவிகளையும் எமது அரசாங்கம்முன்னெடுத்து வருகிறது என்றும் தெரிவித்துள்ளார். (எ-11)

## ஜனாதிபதி...

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டி ருந்தனர்.

இலங்கையின் அபிவிருத்திக் காக சீனா தொடர்ந்து வழங் கிவரும் ஒத்துழைப்புக்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது நன்றி தெரிவித்துள் ளார்.

அத்துடன், இலங்கைக்கு சவாலாக வுள்ள வறுமையை ஒழிப்பதற்கு சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக இதன் போது ஜனாதி பதி குறிப்பிட்டதாக ஜனாதிபதி ஊட கப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, சீன தூதுக்குழு வினர் ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னமொன்றையும் வழங்கி னர். (எ-11)

## கைதிகளை...

கிழக்கு மாகாண சபையின் 47 ஆவது அமர்வு நேற்று அவை தவி சாளர் சந்திரதாச கலபத்தி தலை யில் கூடியது.

இதன்போது தமிழ் கைதிகள் தொடர்பிலான அவசரப் பிரே ரணையொன்றை பிரதி தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா சமர்ப்பித் தார். அதன்பின்னர் பிரேரணை மீதான விவாதம் நடைபெற்றது.

இதேவேளை, கிழக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வின் போது மாகாண ஆளணிப் பற்றாக் குறை, ஆசிரியர் பற்றாக்குறை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர் பில் மேலும் 7 பிரேரணைகள் சமரப் பிக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய இரண்டு உறுப்பினர்கள் நேற்று நல்லாட்சி அரசாங்கத் துக்கு ஆதரவு தெரிவித்து ஆளும் தரப்பில் இணை ந்து கொண்டனர். (எ-11)

## சம்பிக்கவுக்கு...

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன இதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின் போது அமைச் சர் சம்பிக்க ரணவக்க எழுதிய பலய சஹ பலய (அதிகாரம் மற்றும் ஆட்சி) என்ற நூலிற்கு பட்டியலிடப்படாத துறைசார் சாஹித்திய விருது வழங் கப்பட்டுள்ளது.

சிறந்த தமிழ் நாவலுக்கான விருது என்.பீ. அருளானந்தத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

வாழ்நாள் சாதனை விருதான சாஹித்திய ரத்ன விருது பேராசிரி யர் ஜே.பி.திசாநாயக்க மற்றும் கலாநிதி முல்லைமணி ஆகியோ ருக்கு வழங்கப்பட்டுள்ளது. (எ-12)

## இலங்கையர்...

கொன்று கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இலங்கையைச் சேர்ந்த யாரே னும் இதனைப் பயன்படுத்தி சட்ட விரோதமான முறையில் இந்தியா விற்குள் நுழைந்திருக்கலாம் என்ற கோணத்தில் தேடுதல் வேட்டை முன் னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இராமேஸ்வரம் கட லோரக் கிராமம் ஒன்றில் பதுங்கியி ருந்த ஐந்து இலங்கைத் தமிழர்களை கைது செய்துள்ள பொலிஸார் அவர் களை நரிக்குழி பொலிஸ் நிலையத் தில் தடுத்து வைத்துள்ளனர்.

இராமேஸ்வரத்தில் கைவிடப்பட்டி ருந்த படகு மூலம் கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் இந்தியா வுக்குள் நுழைந்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக் கின்றன. (எ-12)

## தமிழினி...

மறைந்த விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப் பாளர் தமிழினியின் இறுதி நிகழ்வு கள் நேற்று பரந்தன் சிவபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெற்றது.

நேற்று பெருமளவான மக்கள் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண டனர். தமிழினியின் இறுதி நிகழ் வில் எழுத்தாளர் வெற்றிச்செல்வி தலைமையில் வணக்கக்கூட்டம் இடம்பெற்றது. இதில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வடக்கு முதலமைச்சர் சார்பாக அமைச்சர் ஐங்கரநேசன், முன்னாள் போராளி யும் எழுத்தாளருமான தமிழ்க்கவி, கல்வி அமைச்சர் குருகுலராசா, முன னாள் பாராளுமன்ற உறுப்பனர் பத் மினி, தமிழ் தேசிய மக்கள் முன்ன செயலாளர் கஜேந்திரன் ஆகியோர் வணக்க உரைகளை ஆற்றினர்.

பின்னர் பரந்தன் முல்லை வீதி யில் தமிழினியின் புகழுடல் அலங் கரிக்கப்பட்ட ஊர்தியில் ஊர்வல மாக எடுத்துச்செல்லப்பட்டு கோரக் கன்கட்டு மயானத்தில் விதைக்கப் பட்டுள்ளது. (எ-11,280)

## நியாயமான அரசியல் தீர்வு...

விதாரண தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேர வைக் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பில் நிறை வேற் றப்பட்டுள்ள தீர்மானம் சம்பந்த மாக நாளை கலந்துரையாடுவதற்காக அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதி பதி அழைப்பு விடுத்துள்ளார்.

இதில் பங்கேற்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் சில கட்சிகள் இன்னும் இறுதிமுடிவை எடுக்கவில்லை.

இந்நிலையில், லங்கா சமச மாஜக் கட்சியின் பங்குபற்றல் தொடர்பில் அக்கட்சியின் தலைவர் கருத்துத் தெரிவிக்கும்போது, சர்வ கட்சிக் குழுக் கூட்டத்தில் எமது கட்சி பங்கேற்கும்.

தேவையான யோசனைகளை யும் நாம் முன்வைப்போம். மற்று மொரு விடயத்தையும் இவ்விடத் தில் கூறவேண்டியுள்ளது.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் தமி ழர் விடயத்தில் சமசமாஜக் கட்சி யின் கொள்கை மாறிவிட்டதாக சிலர் போலிப் பிரசாரங்களை முன் னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறான வதந்திகளை நம்பவேண்டாம் என நாம் தமிழ் மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். தமிழ் மக்களுக்கு நியாயமான தொரு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று அன்றிலிருந்து இன்றுவரை நாம் வலியுறுத்தி வருகிறோம்.

இது விடயத்தில் எமது கொள் கையில் என்றுமே மாற்றம் வராது.

எதிர்க்கட்சியில் இருந்தாலும் தமிழ் மக்களுக்காக எமது குரல் ஓங்கி ஒலிக்கும்.

சர்வக்கட்சிக் குழுக் கூட்டத்தி லும் அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்துவத்தை வலியுறுத்துவோம்என்றார். (எ-11)

## படையினருக்...

தெரிய வந்துள்ளது.

போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கும் படையினருக்கு மன்னிப்பு வழங்கு வதே இந்த கருணைச் சபை உரு வாக்கப்படுவதன் நோக்கமாகும்.

இவ்வாறான ஒரு செயற்பாடு தென்னாபிரிக்காவிலும் ந[illegible] முறைப்படுத்தப்பட்டிருந்தது.

அத்துடன் போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் படையிருக்கான சட்ட உதவிகளை செய்து கொடுக்க வும் அரசாங்கம் தனியான ஏற்பாடு களை மேற்கொண்டுள்ளது. (எ-11)

## நலம் விசா...

வாவே சோபித தேரின்நலனை விசாரிப்பதற் காக மகிந்த ராஜ பக்ச குறித்தமருத் துவமனைக்கு சென்றிருந் தார்.

இதன்போது இரு வரும்சுமார அரை மணி நேரம் சிநேக பூர்வ உரையாட லிலும் ஈடுபட் டனர்.

மகிந்த ராஜ பக்ஷவின் வரு கையின்பின்னர் சில மணிநேரங் களில் மருத்துவ மனையில் இரு ந்து வெளியே றிய செய்யப்பட்ட சோபித தேரர், தற்போது கோட் டை நாகவிகா ரையில வழமை யான செயற்பாடு களில் ஈடுபட் டுள்ளார். (எ-11)

## கனடா பொதுத் தேர்தல்...

றும் பண்பான அணுகுமுறைகளை அறிந்திருந்த தமிழ்க் கனேடியர்கள் உள்ளிட்ட கனேடியர்கள் அவருக்கு பெரிய அளவில் இத் தேர்தலில் வாக களித்து பல ஆயிரக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் அவரை வெல்ல வைத்தனர்.

ஹரி ஆனந்தசங்கரிக்கெதிராக இனவாதம் கலந்த வகையில் பிர சாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அவருக்கு மக்கள் வாக் களித்து வெற்றிபெற வைத்துள்ளனர்.

கனேடியப்பல்லினத்தவரிடையே மாத்திரமல்லாது, உலகத் தமிழ் தலைவர்களிடமும் மிகுந்த நட் பைப் பேணும் ஹரி ஆனந்தசங் கரி, லிபரல் கட்சியின் வேட்பாளராக தேர்வு செய்யப்படுவதற்கான தேர் தலில் போட்டியிட்ட போதும் இதே போலவே அவருக்கெதிரான நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அதனை முறியடித்து அந்தத் தேர்தலில் வெற்றிபெற் றார்.

இந்தக் கட்சியின் சார்பான வேட்பாளராகத் தெரிவுசெய்யப்படு வதற்கான கட்சி உள்ளகத் தேர்த லின்போது, உலகத்தமிழர்பேரவை வண.பிதா.இமானுவேல், இரா.சம் பந்தன் உள்ளிட்ட 72 தலைவர்கள் ஹரி ஆனந்தசங்கரியை ஆதரித் தது ஒரு மாறுபட்ட நிகழ்வாக அன் றைய காலகட்டத்தில் பார்க்கப்பட் டது.

இன்று அத்தெரிவுகள் சரியா னவை என்பதை நிரூபிப்பதாக அவர் பெற்ற வெற்றியுள்ளது.

வெற்றிக் கொண்டாட்டங்கள் ஸ்காபரோ நகரத்தின் பாரிய மண்ட பமொன்றில் வெகு உற்சாகத் தோடும் பலரது பங்களிப்போடும் இடம்பெற்றது. (எ-11)

## அனைத்துக்...

உள்நாட்டு விசாரணை இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசியல் கட்சி களின் நிலைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காகவே இந்த கூட்டம் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்கட்சிகள் உள்ளிட்ட நாடாளுமன்றத்தை பிரதிநிதித்து வப்படுத்தும் பல அரசியல் கட்சிகள் பங்கேற்கும் என தெரிவிக்கப்பட் டுள்ளது. (எ-11)


விஜயதசமி அன்று புதிய பிரிவு ஆரம்பம்
O/L உடன் 30,000/= உடன் ஆரம்பித்து சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில்
மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்க
Business & Hotel Management With ENGLISH COURSE
ஒக்.22. வியாழன் காலை 10 மணி
Leading to University of Sunderland UK
கற்கைநெறிக் காலத்தில் ரூ.15,000 வரை வருமானம்

(C-2515)
6 மாதங்களில் விரும்பிய நாடு வெல்லும் 100% உத்தரவாதம்
SIKARAM Any Visa to Any Country
மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk
இதுவரை கற்கைநெறியில் இணைந்த 13 பேருக்கு வெளிநாட்டு விசா ஏற்பாடு
MONEY BACK 100% GUARANTEE
3 மாதங்களில் ஆங்கிலத்தில் பேசும் திறன் & தொழில்வாய்ப்பு பெறும் உத்தரவாதம்
077 36 16 798, 021 222 0011
Sikaram School of Hospitality &English
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m



அகரம் கல்வி நிலையம்
மல்லாகம்
புதிய தரம் 06ற்கான
ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்
ஆரம்பமாகின்றன.
(2118)
விஜயதசமி அன்று
[ 22.10.2015 வியாழக்கிழமை ]
மாலை 4.00 மணி
"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"



ஜீவக வாத தைலம்
Jeewaka Vata Thailaya
முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலி யும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு,அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவா ரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.
25ml-150ரூபா 50ml-280ரூபா 100ml-450ரூபா
Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, wedagedara'Koskandawala yakkala
Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact: 071 227 1526
ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567
(C-2509)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.